# இரண்டாவது

# மதுரைக் காண்டம்

வாழ்விலே மீண்டும் புதுமலர்ச்சியை எதிர்பார்த்து, மதுரை நகரைச் சென்று சேர்ந்த கோவலன் கண்ணகியரின் முடிவும், மதுரை மாநகரின் அழிவும், ஊழ்வினையானது எவ்வாறு பின் வரும் பிறப்பிலே உருத்துவந்து பழிதீர்த்துக் கொள்ளுகின்றது என்றதன் நிலையும் கூறும் பகுதி இது.

# 11

## காடு காண் காதை

[நிலைமண்டில ஆசிரியப்பா]

[கோவலன் கண்ணகி கவுந்தியடிகள் என்னும் மூவரும், தென்திசை நோக்கி நடையைத் தொடர்ந்தனர். இடைவழியிலே மாங்காட்டு மறையோனைச் சந்தித்து, வழியின் இயல்புகளை அவன் மூலம் கேட்டு அறிந்தனர். கானுறை தெய்வம் வசந்தமாலையின் வடிவிலே தோன்றிக் கோவலனின் மதுரைப் போக்கைத் தடுக்க முயல்கிறது. அதனை ஒதுக்கி, மேலும் நடந்து, ஐயையாளின் திருக்கோயிலை மூவரும் சென்று சேர்கின்றனர்.]

### 1. மறையோன் வந்தான்

திங்கள்மூன் றடுக்கிய திருமுக் குடைக்கீழ்ச்
செங்கதிர் ஞாயிற்றுத் திகழொளி சிறந்து,
கோதைதாழ் பிண்டிக் கொழுநிழல் இருந்த
ஆதிஇல் தோற்றத்து அறிவனை வணங்கிக்
கந்தன் பள்ளிக் கடவுளர்க்கு எல்லாம்
அந்தில் அரங்கத்து அகன்பொழில் அகவயின்
சாரணர் கூறிய தகைசால் நன்மொழி
மாதவத்து ஆட்டியும் மாண்புற மொழிந்து, ஆங்கு,
அன்று, அவர் உறைவிடத்து அல்கினர் அடங்கித்
தென்திசை மருங்கிற் செலவு விருப்புற்று,
வைகறை யாமத்து வாரணம் கழிந்து,
வெய்யவன் குணதிசை விளங்கித் தோன்ற,
வளநீர்ப் பண்ணையும் வாவியும் பொலிந்ததோர்
இளமரக் கானத்து இருக்கை புக்குழி—

மூன்று முழுநிலவுகளை ஒருசேர ஒன்றாக அடுக்கிவைத்தாற்போன்ற, அழகிய சந்திராதித்தியம், நித்தியவினோதம், சகலபாசனம் என்னும் முக்குடைகளின்கீழ்ச், செங்கதிர்களையுடைய ஞாயிற்றைப்போல ஒளியுடையோனாகி, மாலைகளைப் போல மலர்கள் பூத்துத் தொங்கும் அசோகின் கொழுமையான நீழலிலே எழுந்தருளிய, ஆதியற்ற தோற்றத்தினை உடையவனான அறிவனை, அவர்கள் மூவரும் தொழுதனர். நிக்கந்தன் பள்ளியிடத்தே இருந்த அருகசமயத்து நோன்பிகளுக்கெல்லாம், ஆற்றிடைக் குறை

யான திருவரங்கத்தின் அகற்சியையுடைய சோலையிலே, சாரணர் தமக்கு உரைத்த தகைமைசிறந்த அருள்மொழி களை, மாதவத்தாட்டியான கவுந்தியடிகள், அவரும் அவற்றையறிந்து பயன்கொண்டு மாண்புறுமாறு எடுத்து மொழிந்தனர். அன்று, அம்முனிவர்கள் வாழும் அவ்விடத் திலேயே அம் மூவரும் தங்கினர்.

மறுநாள், தென்திசைநோக்கிச் செல்ல விரும்பியவராக, வைகறைச் சாமவேளையிலேயே உறையூரைக் கடந்தனர். வெய்யவன் கீழ்த்திசையிலே விளக்கமாக எழுந்து தோன்றி னான். வளமான நீர்நிறைந்த வயல்களும் பொய்கைகளும் அழகாக விளங்கின. வழியூடே இளமரக்காவின்கண் இருந்த வோர் இருக்கையிற் சென்று இவர்கள் அமர்ந்தனர். அங்கே, மிக்க முதுமையினை உடையோனான ஒரு மறையோனும் வந்திருந்தான்.

## 2. தென்னவன் வாழ்க!

'வாழ்க, எம் கோ, மன்னவர் பெருந்தகை
ஊழிதொறு ஊழிதொறு உலகங் காக்க!
அடியில் தன்அளவு அரசர்க்கு உணர்த்தி,
வடிவேல் எறிந்த வான்பகை பொறாது,
பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள,
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு,
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி!
திங்கட் செல்வன் திருக்குலம் விளங்கச்
செங்கண் ஆயிரத்தோன் திறல்விளங்கு ஆரம்
பொங்கொளி மார்பிற் பூண்டோன் வாழி!
"முடிவளை உடைத்தோன் முதல்வன் சென்னி" என்று,
இடியுடைப் பெருமழை எய்தாது ஏகப்,
பிழையா விளையுள் பெருவளஞ் சுரப்ப,
மழைபிணித்து ஆண்ட மன்னவன் வாழ்க!" எனத்
தீதுதீர் சிறப்பின் தென்னனை வாழ்த்தி,
மாமுது மறையோன் வந்திருந் தோனை,
'யாது நும் ஊர்? ஈங்கு என் வரவு?' எனக்
கோவலன் கேட்பக் குன்றாச் சிறப்பின்
மாமறை யாளன் வருபொருள் உரைப்போன்;

தன் திருவடியிலே விளங்கும் வீரக்கழலின் ஒலியினாலேயே, தன் வலிமையின் அளவினை வேற்றரசர்கள் பலருக்கும் புரியுமாறு உணர்த்திய பெருமையுடையவன் வடிம்பலம்பநின்ற பாண்டியன். அவன், தன்மீதும் வடிவேல் எறிந்த பெரும்பகையினைப் பொறுக்காது, கடலும் ஒரு சமயம் பொங்கி எழுந்தது. பஃறுளியாற்றுடனே பல மலையடுக்குகளையும் உடையதான குமரிமலைத் தொடரினையும், அக் கொடிய கடலானது தன்னகத்தே இழுத்து விழுங்கிக் கொண்டது. கடல்கோளால் அவ்வாறு இழந்த இடத்திற்கு ஈடாகப், புதிதாக எழுந்த வடதிசைக் கங்கையையும் இமயத்தையும் சென்று கைக்கொண்டு, தென்திசை முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டவன் அத் தென்னவன்; அவன் புகழ் வாழ்க!

திங்கட் செல்வனின் திருக்குலமாகிய பாண்டியரின் குடியானது விளக்கம் அடையுமாறு, ஆயிரம் செங்கண்களை உடைய தேவர்கோமான் பூட்டிய திறம் விளங்கும் ஆரத்தைத் தன் ஒளிபொங்கும் மார்பிலே பூண்டவன் அப் பாண்டியன்; அவன் புகழ் வாழ்க!

'எம் முதல்வனின் சென்னி முடியிலேயுள்ள வளையை உடைத்தோன் இவன்' என்று, இடியுடைப் பெருமழையானது பாண்டிய நாட்டிலே சிலகாலம் பெய்யாது ஒதுங்கிப் போயிற்று. தன் நாட்டிலே தப்பாத விளையுளும் பெருவளமுஞ் சுரக்குமாறு, அம் மேகங்களைச் சிறையிட்டு மழை பெய்விக்கச் செய்து, வளம்பெருக்கி ஆண்டவன் பாண்டியன்! அம்மன்னவன் புகழால் வாழ்வானாக!' என்றெல்லாம், அங்குத் தங்கியிருந்த மிகவும் முதுமையையுடைய அம்மறையவன், தீதுகள் நீங்கிய சிறப்பினதான தென்னவர் குலத்தினை மனமுவந்து வாழ்த்திக் கொண்டிருந்தான்.

"யாது நுமது ஊர்? எதன் பொருட்டு ஈங்கு வந்தீர்?" எனக் கோவலன் அவனிடம் சென்று கேட்டான். குன்றாத சிறப்பினனான அம் மாமறையோன், தான் வந்ததற்கான காரணத்தையும், அவனுக்கு அப்போது உரைப்பானாயினான்:

## 3. மறையோனின் ஆசை

நீல மேகம் நெடும்பொற் குன்றத்துப்
பால்விரித்து அகலாது படிந்தது போல,
ஆயிரம் விரித்துஎழு தலைஉடை அருந்திறல்
பாயற் பள்ளிப் பலர்தொழுது ஏத்த,
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்

திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்—
வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலையத்து உச்சி மீமிசை,
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி,
இருமருங்கு ஓங்கிய இடைநிலைத் தானத்து,
மின்னுக் கோடி யுடுத்து, விளங்குவிற் பூண்டு,
நன்னிற மேகம் நின்றது போலப்,
பகையணங்கு ஆழியும், பால்வெண் சங்கமும்,
தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி,
நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு,
பொலம்பூ ஆடையின் பொலிந்து தோன்றிய,
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்,
என்கண் காட்டு என்று என்னுளங் கவற்ற
வந்தேன் குடமலை மாங்காட்டு உள்ளேன்:—

"உயர்ந்த பொன்மலையின்மீது, நீலமேகமானது பக்க வெள்ளம் கவிந்து அகலாது படிந்து இருப்பதுபோல, ஆயிரம் தலைகளை விரித்து எழுகின்ற இயல்பினையும், அருந்திற விளைவுமுடைய ஆதிசேடனாகிய பாயலிலே பள்ளிகொண்டு, பலரும் தொழுது போற்ற, அலை எழுகின்ற காவிரியின் அகன்ற ஆற்றிடைக் குறையிலே, திருமகள் அமர்ந்த மார்பனான திருமால் பள்ளிகொண்டிருக்கின்ற கோலத்தைக் காண விரும்பினேன்.

"அருவிகள் மிகுந்த நீருடன் வழியும் திருவேங்கடம் என்னும் மிகவுயர்ந்த மலையின் உச்சிமீதிலே, இருபாலும் ஞாயிறும் திங்களும் விளங்கும் உயர்ந்த இடைநிலைத் தானத்திலே, மின்னலாகிய புதிய ஆடையை உடுத்துக் கொண்டு, வானவில்லாகிய பணிகள் பூண்டு, கருநிற மேகம் வந்து கவிந்து நின்றாற்போலப், பகைவரை வருத்தும் சக்கரப்படையும், பால்நிற வெண்சங்கும் தகைபெற்ற தன் தாமரைக் கையிலே ஏந்தியவனாக, நலம் கிளர்விக்கும் ஆரத்தினை மார்பிலே பூண்டு, பொன்னிறப் பூக்களாகிய ஆடையோடு பொலிவாகத் தோன்றும், செங்கண் நெடியோனின் நின்ற திருக்கோலத்தையும் காண விரும்பினேன். 'என் கண்களுக்குக் காட்டுக!' என்று என் உள்ளமும் என்னை வாட்டிற்று. அதன் பொருட்டே இவ்வழியாக வந்தேன். மேற்கு மலைப்பக்கத்தே உள்ளதான 'மாங்காடு' என்னும் ஊரினுள்ளவன் யான்."

## 4. யாது வழி மறையோனே?

தென்னவன் நாட்டுச் சிறப்பும் செய்கையும்
கண்மணி குளிர்ப்பக் கண்டேன்; ஆதலின்,
வாழ்த்தி வந்திருந்தேன்; இது என் வரவு' எனத்,
தீத்திறம் புரிந்தோன் செப்பக் கேட்டு—
'மா மறை முதல்வ! மதுரைச் செந்நெறி
கூறு நீ' எனக், கோவலற்கு உரைக்கும்;

"தென்னவனின் நாட்டுச் சிறப்பும், அவன் செங்கோலின் செயல்திறனும், என் கண்மணி குளிருமாறு நேரிற் கண்டேன். ஆதலின், அவனை வாழ்த்தியவனாக வந்து அமர்ந்தேன். இதுதான் என் வரவின் நிலை" என்று, முத்தீச்செயலை முறையாகச் செய்தோனான அம் மறையவன், தன் வரவு பற்றிச் சொல்லக் கேட்டான் கோவலன். "மாமறை முதல்வனே! மதுரைக்குப் போகும் வழியைப்பற்றி எனக்குக் கூறுக!" எனவும் கேட்டான். அவனும், அதனைக் கோவலனுக்கு உரைப்பானாயினான் :

## 5. கோடையிலே வரலாமோ?

கோத்தொழி லாளரொடு கொற்றவன் கோடி,
வேத்தியல் இழந்த வியனிலம் போல,
வேனல்அம் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
தானலம் திருகத் தன்மையிற் குன்றி,
முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து,
நல்லியல்பு இழந்து, நடுங்குதுயர் உறுத்துப்,
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்
காலை எய்தினிர் காரிகை-தன்னுடன்:—

அரசாங்கத் தொழிலாளரோடு, அரசன் கருத்து மாறுபட்டு, மனம்போனவாறெல்லாம் செயல்புரிய, அதனால் அரசியல் முறைமையினையே இழந்துபோன பரந்தநாட்டினைப் போல, வேனிலாகிய அமைச்சனோடு வெம்மையான கிரணங்களைச் சொரிகின்ற வேந்தனான கதிரவன் மாறுபட்டு, நிலத்தையெல்லாம் வேறுபடுத்த, தம்தம் தன்மையிலே அவை குறைபாடுற்று, முல்லை குறிஞ்சி என்னும் பழைய முறைமைகளிலேயிருந்தும் திரிந்து, நல்லியல்புகள் முழுவதும் அறவே இழந்து, வழிச்செல்வாரை நடுங்கு துயரம் உறுமாறு செய்து, 'பாலை' எனப்படுவதொரு

கொடிதான வடிவினையும் கொள்ளுகின்ற இக்காலத்திலே, இக் காரிகையாளுடன் மதுரைப் பயணத்தினை மேற்கொண்டு இங்கு வந்திருக்கின்றீரே? இதுதான் நுமக்குத் தகுமோ?

## 6. வேறுபட்ட மூன்று பாதைகள்

அறையும், பொறையும், ஆர்இடை மயக்கமும்,
நிறைநீர் வேலியும் முறைபடக் கிடந்தவிந்
நெடும்பேர் அத்தம் நீந்திச் சென்று,
கொடும்பை நெடுங்குளக் கோட்டகம் புக்கால்,
பிறைமுடிக் கண்ணிப் பெரியோன் ஏந்திய
அறைவாய்ச் சூலத்து அருநெறி கவர்க்கும்—

கற்பாறையும் சிறுமலையும் வழியிடையே மயக்கம் நிறைந்த கானல்நீர் வேலியும் அடைவுபடக் கிடந்த, இந் நீண்ட பாலைவழியினைக் கடந்து சென்று, கொடும்பாளூர்க்கும் நெடுங்குளத்துக்கும் இடைப்பட்ட கரையினைச் சென்று சேர்ந்தால், பிறையினை முடியிலே கொண்ட இறைவன் ஏந்திய முத்தலைச் சூலம்போலக், கடத்தற்கரிய வழியானது மூன்று கவறுபட்டுப் பிரியும்.

## 7. வலமாகச் சென்றால்...?

வலம்படக் கிடந்த வழிநீர் துணியின்,
அலறுதலை மராமும், உலறுதலை ஓமையும்,
பொரியரை உழிஞ்சிலும், புன்முளி மூங்கிலும்,
வரிமரல் திரங்கிய கரிபுறக் கிடக்கையும்,
நீர்நசைஇ வேட்கையின் மான்நின்று விளிக்கும்
கானமும், எயினர் கடமும் கடந்தால்,
ஐவன வெண்ணெலும், அறைக்கண் கரும்பும்,
கொய்பூந் தினையும், கொழும்புன வரகும்,
காயமும், மஞ்சளும், ஆய்கொடிக் கவலையும்,
வாழையும், கமுகும், தாழ்குலைத் தெங்கும்,
மாவும், பலாவும், சூழ்அடுத்து ஓங்கிய
தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்;
அம்மலை வலங்கொண்டு அகன்பதிச் செல்லுமின்—

அவற்றுள், வலப்பக்கமாகக் கிடக்கும் வழியினூடு நீர் செல்லத் துணிந்தால், தலைவிரிந்த வெண்கடம்பும், பட்டுப்

போயிருக்கும் ஓமையும். பொரிந்த அடியினையுடைய வாகையும், புல்காய்ந்த மூங்கிலும், புரியுடைய 'மரல்' என்னும் கள்ளியும் கரிந்து கிடக்கும் இடங்களைக் காண்பீர். நீரினை விரும்பித் தாகம் தாங்காது மான்கள் நின்று கதறுகின்ற கானமும், எயினர் குடியிருப்பும் கடந்து செல்லல் நேரும். அதன்பின், ஐவனமென்னும் வெண்ணெல்லும், கணுக்கள் அற்றுப்போன கரும்பும், கொய்யும் பருவத்தினையுடைய பூந்தினையும், கொழுமையான புனத்தில் விளைந்த வரகும், வெள்ளுள்ளியும், மஞ்சளும், அழகிய கொடியினையுடைய கவலையும், வாழையும், கமுகும், குலைதாழ்ந்து தொங்கும் தெங்கும், பலாவும் ஆகிய இவைகள் அடுத்தடுத்து நிறைந்த, தென்னவனின் சிறுமலையானது விளங்கித் தோன்றும். அம் மலைக்கு வலப்புறமாக நடந்து போவீரானால், பேரூரான மதுரையை அடையலாம்.

## 8. இடமாகச் சென்றால்...?

அவ்வழிப் படரீர் ஆயின், இடத்துச்
செவ்வழிப் பண்ணின் சிறைவண்டு அரற்றும்
தடந்தாழ் வயலொடு தண்பூங் காவொடு
கடம்பல கிடந்த காடுடன் கழிந்து,
திருமால் குன்றத்துச் செல்குவிர் ஆயின்,
பெருமால் கெடுக்கும் பிலம் உண்டு; ஆங்கு
விண்ணோர் ஏத்தும் வியத்தகு மரபின்
புண்ணிய சரவணம், பவகா ரணியோடு
இட்ட சித்தி எனும்பெயர் போகி,
விட்டு நீங்கா விளங்கிய பொய்கை
முட்டாச் சிறப்பின் மூன்றுஉள;—ஆங்கு
புண்ணிய சரவணம் பொருந்துவிர் ஆயின்,
விண்ணவர் கோமான் விழுநூல் எய்துவிர்;
பவகா ரணி படிந்து ஆடுவிர் ஆயின்,
பவகா ரணத்தின் பழம்பிறப்பு எய்துவிர்;
இட்ட சித்தி எய்துவிர் ஆயின்,
இட்ட சித்தி எய்துவிர் நீரே!
ஆங்குப் பிலம்புக வேண்டுதிர் ஆயின்,
ஓங்குஉயர் மலையத்து உயர்ந்தோன் தொழுது,

சிந்தையில் அவன்தன் சேவடி வைத்து,
வந்தனை மும்முறை மலைவலம் செய்தால்,
நிலம்பக வீழ்ந்த சிலம்பாற்று அகன்தலைப்;
பொலங்கொடி மின்னின் புயல்ஐங் கூந்தல்
கடிமலர் அவிழ்ந்த கன்னிகா ரத்துத்

தொடிவளைத் தோளி ஒருத்தி தோன்றி,
"இம்மைக்கு இன்பமும், மறுமைக்கு இன்பமும்,
இம்மையும் மறுமையும் இரண்டும் இன்றிஓர்;
செம்மையில் நிற்பதும் செப்புமின், நீயிர்? இவ்
வரைத்தாள் வாழ்வேன்; வரோத்தமை என்பேன்;

உரைத்தார்க்கு உரியேன்; உரைத்தீர் ஆயின்,
திருத்தக் கீர்க்குத் திறந்தேன் கதவு" எனும்;
கதவந் திறந்து, அவள் காட்டியநன் னெறிப்
புதவம் பலஉள, போகு இடை கழியன;
ஒட்டுப் புதவம் ஒன்று உண்டு; அதன் உம்பர்

வட்டிகைப் பூங்கொடி வந்து தோன்றி,
"இறுதிஇல் இன்பம் எனக்கு ஈங்கு உரைத்தால்,
பெறுதிர் போலும் நீர் பேணிய பொருள்" எனும்;
"உரையீர் ஆயினும் உறுகண் செய்யேன்,
நெடுவழிப் புறத்து நீக்குவல் நும்" எனும்;

உரைத்தார் உளர்எனின் உரைத்த மூன்றின்
கரைப்படுத்து ஆங்குக் காட்டினள் பெயரும்;
அருமறை மருங்கின் ஐந்தினும், எட்டினும்,
வருமுறை எழுத்தின் மந்திரம் இரண்டும்,
ஒருமுறை யாக உளம்கொண்டு ஓதி,

வேண்டியது ஒன்றின் விரும்பினிர் ஆடின்,
காண்டகு மரபின அல்ல மற்றவை;
மற்றவை நினையாது மலைமிசை நின்றோன்
பொற்றா மரைத்தாள் உள்ளம் பொருந்துமின்;
உள்ளம் பொருந்துவிர் ஆயின், மற்றவன்
புள்ளணி நீள்கொடி புணர்நிலை தோன்றும்;
தோன்றிய பின்அவன் துணைமலர்த் தாளிணை

ஏன்றுதுயர் கெடுக்கும் இன்பம் எய்தி,
மாண்புடை மரபின் மதுரைக்கு ஏகுமின்,
காண்தகு பிலத்தின் காட்சி ஈது— 140

அவ்வழியே செல்லவில்லையானால், இடப்பக்கத்து வழியாகவும் செல்லலாம். சிறகினையுடைய வண்டினம் செவ்வழிப்பண் முரல்கின்ற ஆழமான குளங்களும், வயல்களும், குளிர்ந்த சோலைகளும் விளங்கும் மருதநிலப் பகுதியையும், அதன்பின் அருஞ்சுரங்கள் பலவும் இடையிடையே கிடக்கும் காட்டு வழியினையும் கடந்து சென்றால், திருமாலிருங் குன்றத்தினைச் சென்று சேர்வீர். அங்கே பெருமயக்கத்தினைப் போக்குகின்ற பிலத்து வழி ஒன்று உள்ளது. அப் பிலத்தினுள், (பிலம்-பூமியுள் தோன்றும் பொந்து: அல்லது குடையப் பெற்ற நிலவரை) வானோரும் போற்றும் வியப்புத் தருகின்ற முறைமையிலே, புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி எனப் பெயர் பெற்றுள்ளவும், என்றும் தம் சிறப்பினைவிட்டு நீங்காதனவாக விளங்குவனவுமான, மூன்று பொய்கைகளை நீவிர் காணலாம்.

புண்ணிய சரவணத்திலே நீராடினால், விண்ணவர் கோமான் செய்த விழுநூலாகிய ஐந்திரத்தின் செறிவெல்லாம் அடைந்தீராகப் பெருந்தமிழ் வல்லுநராக ஆவீர்கள். பவகாரணியிலே நீராடினால், இப் பிறப்புக்குக் காரணமான முற்பிறவி நிலையெல்லாம் நன்கு அறிவீர்கள். இட்ட சித்தியிலே மூழ்கினால், அவ்வேளையிலே நீர் எண்ணியது எதுவோ அது நும்மை வந்து அடையப் பெறுவீர். அங்கே, பிலத்துள் செல்ல விரும்புவீரானால், ஓங்கி உயர்ந்த மலைமேலிருக்கும் உயர்ந்தோனைத் தொழுது, சிந்தையிலே அவன் திருவடிகளின் நினைவைப் பதிப்பீர்களாக, அவனைத் துதித்து மூன்று முறை வலம் வந்தால், நிலம் பிளக்கும்வண்ணம் ஆழ்ந்த சிலம்பாற்றங்கரைப் பக்கத்திலே, மணமலர்கள் விரிந்த கோங்க மரத்தின் அடியிலே, கார்மேகம் போன்ற கூந்தலினையுடைய பொற்கொடியாள் ஒருத்தி, தொடிவளையணிந்த தோளினளாக வந்து தோன்றுவாள்.

அவ்வாறு தோன்றும் அவள், 'இம்மைக்கு இன்பமும் மறுமைக்கு இன்பமும், இம்மையும் மறுமையும் என இரண்டும் இல்லாமல் ஒரு செம்மையிலே நிற்பதும் ஆகிய நெறிகளைப் பற்றிக் கூறுவீர். இம் மலையடிவாரத்திலே வாழ்பவளான என் பெயர் வரோத்தமை ஆகும். அவற்றுக்கு நேரிய பதில் உரைத்தவர்க்கு நான் உரியவளாவேன். நீங்கள் உரைத்தீர்களானால், அச் சிறந்த தகுதியுடைய உமக்கு, இப்

பிலவாயிற் கதவினைத் திறந்து விடுவேன்'' என்பாள். அவளுக்கு விடைகூறி, அவள் கதவைத் திறந்துவிட, அவள் காட்டிய வழியிலே சென்றால், பல கதவுகள் தோன்றும். ஒட்டுக்கதவு ஒன்றும் இடையே தோன்றும்.

அதற்குமேல், சித்திரமாகத் தீட்டப்பெற்றிருக்கும் பூங்கொடி போல்பவள் ஒருத்தி எதிர்ப்படுவாள். "இறுதியற்ற இன்பம் எதுவென எனக்கு இங்கே உரைத்தால், நீர் விரும்பி வந்த பொருள்களைக் காணப் பெறுவீர்' என்பாள். 'நீர் சொல்லாது போயினும் நும்மை வருத்தேன். இந்த வழிக்கு அப்புறமாகக் கொண்டுபோய் விட்டுவிடுவேன். அதற்குப் பொருந்த உரைப்பார் இருந்தால், அவருக்கு மேலே சொல்லிய மூன்று பொய்கைகளின் கரைகளையும் காட்டி மீள்வேன்'' என்றும் கூறுவாள்.

அருமறைகளின் பாங்கிலே, ஐந்தாகவும் எட்டாகவும் வரும் எழுதநுமுறையோடு கூடிய இரண்டு மந்திரங்களையும், ஒருவழிப்பட்ட மனத்துடன் உளங்கொண்டு முறையாக ஓதி, நீர் விரும்பிய பொய்கைகளுள் இட்டசித்தி என்ற பொய்கையிலே முதலில் நீராடினால், மற்றவை இரண்டும் உமக்குத் தோன்றுவன அல்ல. ஆனாலும், நீர் மற்றவை காணாமற் போவது பற்றி எல்லாம் நினையாது, அம் மலைமிசை நின்றோனான திருமாலின் பொற்றாமரைத் தாள்களையே உள்ளத்தில் எண்ணி, அந்த இட்டசித்தியிலே மூழ்குங்கள். அங்ஙனம் நும் உள்ளம் அவன் திருவடி நினைவிலேயே பொருந்துமானால், கருடக்கொடி பறக்கும் அழகிய நீண்ட கொடிமரத்தின் உச்சி நுமக்குத் தோன்றும். அது தோன்றிய பின், அவன் துணைமலர்த் தாள்கள் நும்மைத் தம்பால் ஏற்றுக்கொண்டு, நும் பவத்தொடர்பான பழவினைத் துயரையெல்லாம் போக்கும். அந்தப் பேரின்பத்தைப் பெற்றுப், பின், நீவிர் மாண்புடைய பாண்டியமரபினரின் மதுரைக்குச் செல்வீர்களாக! காணத்தகுந்த பிலத்தின் தன்மைகள் இவைதாம். [ஐந்தெழுத்து மந்திரம் நமசிவய. எட்டெழுத்து மந்திரம் ஓம் நமோ நாராயணாய.]

## 9. நடுவழியிற் சென்றால் ?

**அந்நெறிப் படரீர் ஆயின், இடையது**
**செந்நெறி ஆகும் தேம்பொழில் உடுத்த**
**ஊர்இடை யிட்ட காடுபல கடந்தால்,**
**ஆர்இடை உண்டு, ஓர் ஆரஞர்த் தெய்வம்;**

நடுக்கஞ் சாலா நயத்தின் தோன்றி,
இடுக்கண் செய்யாது. இயங்குநர்த் தாங்கும்
மடுத்துஉடன் கிடக்கும் மதுரைப் பெருவழி.
நீள்நிலம் கடந்த நெடுமுடி அண்ணல்
தாள்தொழு தகையேன் போகுவல் யான் என—

"அவ்வழியாலும் செல்ல நீவிர் விரும்பவில்லையானால் நடுவாகச் செல்லும் வழியானது செம்மையான வழியாகும். தேனொழுகும் மலர்ச்சோலைகள் சூழ்ந்த ஊர்கள் இடையிடையே உள்ளதான காட்டினைப் பலநாட்கள் நடந்து கடந்தால், அவ்வழியிலே, பெருந்துயர் தரும் காடுறை தெய்வம் ஒன்று எதிர்ப்படும். காண்பவர் நடுக்கமுறாதபடியாக, அவர் விருப்பம் கொள்ளும் உருவத்துடனேயே, அது வந்து தோன்றும். துன்பம் எதுவும் செய்யாமலேயே அவ்வழியே போவாரை மேலும் போகாது தடுக்கவும் அது முயலும். அதனையும் கடந்து மேற்சென்றால், மதுரைப் பெருவழி யெல்லாம் ஒன்றாக விளங்கும். நீங்கள் சென்று வருக. யானோ, நெடிய உலகத்தைத் தாவியளந்த நெடுமுடி அண்ணலின் பாதங்களைத் தொழுகின்ற தகைமையுடையவன். யானும், என் வழியே போய் வருகின்றேன்" என்றான் அம்மறையோன்.

## 10. காவுந்தியடிகள் உரைத்தல்

மாமறை யோன் வாய் வழித்திறம் கேட்ட
காவுந்தி ஐயை ஓர் கட்டுரை சொல்லும்:
"நலம்புரி கொள்கை நான்மறை யாள!
பிலம்புக வேண்டும் பெற்றி ஈங்கு இல்லை;
கப்பத்து இந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட்டு-இயற்கையின் விளங்கக் காணாய்:
இறந்த பிறப்பின் எய்திய வெல்லாம்
பிறந்த பிறப்பிற் கா ணாயோ, நீ?
வாய்மையின் வழா அது மன்னுயிர் ஓம்புநர்க்கு
யாவதும் உண்டோ, எய்தா அரும்பொருள்?
காமுறு தெய்வம் கண்டடி பணிய
நீ போ; யாங்களும் நீள்நெறிப் படர்குதும்"
என்றம் மறையோற்கு இசைமொழி உணர்த்திக்—

அம் முதிர்ந்த மறையவனின் வாயால், வழியின் இயல்புகளைக் கேட்ட கவுந்தியடிகள், ஒரு பொருள் பொதிந்த கட்டுரையையும் அவனுக்குச் சொல்வாராயினார் :

"எமக்கு நன்மை புரிகின்ற கொள்கையுடைய நான்மறையாளனே! நீ கூறிய பிலத்திலே புகவேண்டிய நிலைமை இவ்விடம் இல்லை. கப்பத்தினையுடைய இந்திரன் காட்டிய ஐந்திர நூலின் மெய்ப்பாட்டு இயற்கை அனைத்தும் இயற்கையிலேயே விளங்கக் காணாய். ஆதலாற் புண்ணிய சரவணம் பொருந்துதலும் வேண்டோம். இறந்த பிறப்பிலே செய்தனவெல்லாம் பிறந்த இப்பிறப்பில்தான் நேரிலேயே நிகழக் காண்கின்றோமே! ஆதலின், பவகாரணியும் படிதல் வேண்டோம். வாய்மையினின்றும் வழுவாது மன்னுயிர் அனைத்தையும் பேணுபவர்களுக்கு எய்தாத அரும்பொருள்கள் யாதேனும் உண்டோ? ஆதலின் இட்டசித்தியும் வேண்டோம். நீ விரும்பும் தெய்வத்தைக் கண்டு அடிபணிய நீ நின்வழியே போய் வருக! யாங்களும் நீண்ட வழியே மதுரைநோக்கிச் செல்லத் தொடங்குகின்றோம்" என்று, அம்மறையோனுக்கு இசைவான மொழிகளை அறிவித்தனர்.

## 11. பொய்கைக் கரையில் !

குன்றாக் கொள்கைக் கோவலன்-தன்னுடன்
அன்றைப் பகல் ஓர் அரும்பதித் தங்கிப்,
பின்றையும் அவ்வழிப் பெயர்ந்துசெல் வழிநாள்—
கருந்தடங் கண்ணியும் கவுந்தி யடிகளும்
வருந்துசெல் வருத்தத்து வழிமருங்கு இருப்ப—
இடைநெறிக் கிடந்த இயவுகொள் மருங்கின்
புடைநெறிப் போய் ஓர் பொய்கையிற் சென்று,
நீர்நசை வேட்கையின் நெடுந்துறை நிற்பக்—

பின், தான் மேற்கொண்ட கொள்கையில் சிறிதும் குறைவுபடாத கோவலனுடன், அன்று பகல்வேளையில் ஓர் அரிய ஊரினுள் தங்கியிருந்துவிட்டுப், பின்னரும் அவ்வழியே அனைவரும் நடந்து செல்வாராயினர். அப்படிச் செல்லும் நாளில், ஒருநாள், பெரிய கருங்கண்ணினளான கண்ணகியும், கவுந்தியடிகளும், வழிச்செல்லும் வருத்தத்தால் களைத்தவர்களாகப் பாதையோரத்தில் ஒருபுறமாக அயர்ந்து இருந்துவிட்டனர். இடைவழியிலே, கிடந்த செலவினைக் கொண்ட

பக்கத்துப் பாதையொன்றிலே சென்று, அங்குத் தோன்றிய வொரு பொய்கையிலே நீருண்ணும் வேட்கையினாற் கோவலனும், அதன் நெடுந்துறையிலே போய் நின்றான்.

## 12. தெய்வம் தோன்றியது !

கான் உறை தெய்வங் காதலிற் சென்று,
'நயந்த காதலின் நல்குவன் இவன்' என,
வயந்த மாலை வடிவில் தோன்றிக்,
கொடி நடுக்கு உற்றதுபோல, ஆங்கு-அவன்
அடிமுதல் வீழ்ந்து ஆங்கு, அருங்கணீர் உகுத்து,
"வாச மாலையின் எழுதிய மாற்றம்
தீதிலேன். பிழைமொழி செப்பினை! ஆதலின்,
கோவலன் செய்தான் கொடுமை" என்று, என்முன
மாதவி மயங்கி, வான்துயர் உற்று,
"மேலோர் ஆயினும்; நூலோர் ஆயினும்,
பால்வகை தெரிந்து பகுதியோர் ஆயினும்,
பிணிஎனக் கொண்டு பிறக்கிட்டு ஒழியும்,
கணிகையர் வாழ்க்கை கடையே போன்ம்" எனச்,
செவ்வரி ஒழுகிய செழுங்கடை மழைக்கண்
வெண்முத்து உதிர்த்து, வெண்நிலாத் திகழும்,
தண்முத்து ஒருகாழ் தன்கையாற் பரிந்து
துனிஉற்று என்னையும் துறந்தனள்; ஆதலின்,
மதுரை மூதூர் மாநகர்ப் போந்தது
எதிர்வழிப் பட்டோர் எனக்கு ஆங்கு உரைப்பச்,
சாத்தொடு போந்து தனித்துயர் உழந்தேன்;
சாத்து-அரும் பண்ப! நின் பணிமொழி யாது!" என—

அப்போது, அக் கானிலே வாழும் தெய்வம் ஒன்று, அவனைத் தன்வயப்படுத்தும் நினைவுடனே அங்கே வந்து தோன்றியது. 'வயந்தமாலையின் வடிவிலே தோன்றினால், மாதவியின் பேரிலுள்ள காதலால் இவன் நமக்கு இசைவான்' எனக் கருதிய அத் தெய்வம் அவள் வடிவிலேயே தோன்றி யது. அற்று வீழ்ந்த பூங்கொடிபோலக் கோவலனின் பாதங் களின் முன் வீழ்ந்து கண்ணீரும் உகுத்தது.

'மணமிகுந்த தாழை மடலிலே யான் எழுதிய திருமுகத்திலே ஏதும் தவறு உடையவள் அல்லேன். யாதோ பிழைபட்ட சொற்களை நீ அவர் முன்னர்க் கூறினாய் போலும். ஆதலாற்றான், கோவலன் என்பால் வாராது எனக்குக் கொடுமை செய்தனர்' என்று மாதவி என்னை இகழ்ந்து வெறுத்தாள். அந்நிலையே பெருந்துயரம் அடைந்து, என் முன்னிலையிலேயே அவள் மயங்கியும் வீழ்ந்தாள்.

'மேலான இயல்பு உடையவரே யானாலும், நன்மை தீமைகளின் கூறுபாடுகளை உணர்ந்து நன்மையே பேணுபவரானாலும் 'கணிகையர்' என்றால் அவரைப் 'பிணி' எனக் கருதிக் கைவிட்டுச் செல்லுகின்றனரே! கணிகையர் வாழ்வு, என்றும் கடைப்பட்ட வாழ்வே போலும்!' என்று சொல்லி வருந்தி, செவ்வரி படர்ந்த மதர்த்த கடைகுளிர்ந்த கண்களிலே வெண்முத்துப் போலும் கண்ணீர்த் துளிகளையும் சிந்தினாள். வெண்ணிலவு போலும் விளங்கிய குளிர்ந்த முத்துவடம் ஒன்றையும் தன் கையாலேயே அறுத்து வீசினாள். வெகுண்டு என்னையும் கைவிட்டாள். ஆதலினாலே, மதுரை மூதூராகிய மாநகருக்கு நீங்கள் புறப்பட்டதனை, நும்மை எதிர்வழியிலே சந்தித்தோர் எனக்குச் சொல்ல, மதுரை நோக்கி வரும் வாணிகச் சாத்துடன் கூடி நடந்துவந்து, பெருந்துயர் அடைந்தேன். நன்மை தீமைகளைப் பகுத்தறியும் பண்புடையவரே! எனக்கு நீர் இடும் கட்டளைதான் இனி யாதோ?' என்றது அத் தெய்வம்.

## 13. வனசாரிணி யான்!

''மயக்குந் தெய்வம்இவ் வன்காட்டு உண்டு' என
வியத்தகு மறையோன் விளம்பினன்; ஆதலின்,
வஞ்சம் பெயர்க்கும் மந்திரத் தால்இவ்
அஞ்சில் ஓதியை அறிகுவன் யான்'' எனக்—
கோவலன் நாவிற் கூறிய மந்திரம்
பாய்கலைப் பாவை மந்திரம்; ஆதலின்,
'வன-சா ரிணி யான்; மயக்கஞ் செய்தேன்;
புனமயிற் சாயற்கும், புண்ணிய முதல்விக்கும்,
என்திறம் உரையாது ஏகு' என்று ஏகத்;
தாமரைப் பாசடைத் தண்ணீர் கொணர்ந்து, ஆங்கு
அயாவுறு மடந்தை அருந்துயர் தீர்த்து—

'மயக்கும் தெய்வம் ஒன்று இவ் வலிய காட்டிலே உண்டு' என்று வியக்கத்தக்க மறையவன் முன்னரே சொல்லினன். ஆதலினாலே, 'மாயத்தை விடுவிக்கும் மந்திரத்தால் இவளைப்பற்றி அறிவேன்' என்று எண்ணினான் கோவலன். அவன் நாவினாற் கூறிய மந்திரம், பாய்ந்து செல்லும் கலையினை வாகனமாக உடைய கொற்றவையின் மந்திரமாதலால், 'யான் வனசாரிணி; நினக்கு மயக்கம் விளைவித்தேன்; புனத்து மயிலின் சாயலினையுடைய நின் மனைவிக்கும், புண்ணிய முதல்வியான கவுந்தியடிகளுக்கும் என் செயலைக் கூறாது போய் வருக' என்று சொல்லி, அத் தெய்வம், அவ்விடத்து நின்றும் மறைந்து போய்விட்டது.

அதன்பின் கோவலன், தான் நீரருந்தித், தாமரையின் பசிய இலையிலே தண்ணீரை முகந்து கொணர்ந்து, அங்கே தளைத்திருந்த கண்ணகியின் அருந்துயரையும் போக்கினான்.

## 14. ஐயை கோட்டம் அடைதல் !

மீதுசெல் வெங்கதிர் வெம்மையின் தொடங்கத்
'தீதியல் கானஞ் செலவு அரிது' என்று,
கோவலன்-தன்னொடும் கொடுங்குழை மாதொடும்
மாதவத்து ஆட்டியும் மயங்குஅதர் அழுவத்துக்
குரவமும் மரவமும் கோங்கமும் வேங்கையும்
விரவிய பூம்பொழில் விளங்கிய இருக்கை,
ஆரிடை அத்தத்து இயங்குநர் அல்லது
மாரி வளம்பெறா வில்லேர் உழவர்
கூற்றுறழ் முன்பொடு கொடுவில் ஏந்தி,
வேற்றுப்புலம் போகி, நல் வெற்றங் கொடுத்துக்
கழிபேர் ஆண்மைக் கடன்பார்த்து இருக்கும்,
விழிநுதற் குமரி, விண்ணோர் பாவை,
மையறு சிறப்பின் வான நாடி
ஐயை—தன் கோட்டம் அடைந்தனர் ஆங்கு-என்.

மேலே செல்லுகின்ற வெங்கதிர் வெம்மையினை விளைவிக்கத் தொடங்கிற்று. தீமை திகழும் பாலைவழியை அவ் வெயிலிற் சென்று கடத்தற்கு அரியது என்று கண்டனர். கோவலனோடும், வளைந்த காதணியினையுடைய கண்ணகி

யோடும், மாதவத்துக் கவுந்தியடிகளும், வழிமயக்கத்தினை யுடைய நிலப்பரப்பின் கண்ணுள்ள குரவமும், மரவமும், சோங்கமும், வேங்கையும் கலந்து வளர்ந்திருந்த பூம்பொழி லிலே காணப்பட்ட ஓர் இடத்தினை நோக்கிச் சென்றனர். துன்பம் நிறைந்த கானகத்து வழியிலே செல்பவரல்லாது, மாரியின் வளத்தினைப் பெறாத, வில்லாண்மையால் வாழும் மறவர், கூற்றினை ஒத்த வலிமையுடன், வளைந்த வில் லினைக் கையேந்தி, வேற்று நாடுகளிலே செல்வர். அங்கு, அவர்கட்கு நல்ல வெற்றியைக் கொடுத்துக், கைம்மாறாக மிகப்பெரிய ஆண்மைக்கடனான பலியை எதிர்பார்த்து இருக்கும், நெற்றிக் கண்ணினையுடைய குமரியும், விண்ணோர் பாவையும், குற்றமற்ற சிறப்பினையுடைய வானகத்திற்கு உரியவளுமான ஐயையின் கோயில் ஒன்று அங்கிருக்கக் கண்டு, மூவரும், அதனைச் சென்று அடைந் தனர்.

[இக் காதையிலே தெய்வங்கள் பல கூறப்பெறுகின்றன. திருவரங்கநாதனும், திருவேங்கடவனும் குறிக்கப்பெறுகின் றனர். மயக்கும் தெய்வங்களான வனசாரிணியரும் வருகின் றனர். விழிநுதற் குமரியான ஐயையின் கோட்டத்தைப் பற்றியும் அறிகின்றோம்.

பழந்தமிழரின் வாழ்வியலிலே, தெய்வ நம்பிக்கை முதலிடம் பெற்றதாக இருந்தது. பலப்பல தெய்வ வழிபாடு களுடன், சிவ வணக்கம், திருமால் வணக்கம், ஐயை வணக்கம், அருக வணக்கம், புத்தநெறி போன்றன பலவும் காணப்பட்டன. இவை தம்முள்ளே காழ்ப்பின்றி, அவரவர் மனப்போக்கின்படியே ஏற்கப்பட்டும் வந்தன. விதிவலிமை பற்றிய ஆழ்ந்த நம்பிக்கையும், இத் தெய்வவழிபாடுகளும் மக்களை நன்னெறிப்படுத்தி, தூய மறமாண்புடன், அன்பும் அருளுடைமையும், மனிதப்பண்பும் செறிய வாழச்செய்தன. இந்தப் பண்புச் செறிவினைச் சிலம்பில் எம்மருங் கும் காணலாம்.]

# 12

# வேட்டுவ ்வரி

[கொச்சகக் கலி)

[ஐயை கோட்டத்திலே ஒருபக்கமாகச் சென்றிருந்து, கோவலன் கண்ணகி கவுந்தி ஆகிய மூவரும் இளைப்பாறு கின்றனர். அங்கே 'சாலினி' தெய்வமேற்று, கண்ணகி வாழ்வின் பின்நிகழ்வுகளைக் கூறுகின்றாள். பின் வேட்டுவர் வரிப்பாட்டுப் பாடிக் கூத்து ஆடுகின்றனர்.]

## 1. நோய் தணிய இருந்தனர்!

கடுங்கதிர் திருகலின் நடுங்கஞர் எய்தி,
ஆறுசெல் வருத்தத்துச் சீறடி சிவப்ப,
நறும்பல் கூந்தல் குறும்பல உயிர்த்து-ஆங்கு,
ஐயை கோட்டத்து எய்யா ஒருசிறை
வருந்துநோய் துணிய இருந்தனர்;—உப்பால்—

கதிரவன் கடுமையாக எரிக்கத் தொடங்கினான். பலவாக முடிக்கப்படும் மணமுடைய கூந்தலினை உடையவளான கண்ணகியும் உள்ளம் நடுங்கத் துயர் எய்தினாள். சுரத்திலே செல்லுகின்ற வருத்தத்தால், அவள் சிற்றடிகள் சிவந்தன. அடிக்கடி குறுமூச்செறிந்தாள். அந்தக் களைப்புத் தீரவும், அனைவரையும் வருத்தும் வழிநடை வருத்தம் நீங்கவும், அவர்கள் மூவரும், அக் கொற்றவை கோயிலிற் சென்று, பிறர் அறியாதவாறு ஒருபக்கத்தே இளைப்பாறுதலின் பொருட்டாக அமர்ந்திருந்தனர். அப்போது—

## 2. சாலினி முழங்கினாள்

வழங்குவில் தடக்கை மறக்குடித் தாயத்துப்
பழங்கடன் உற்ற முழங்குவாய்ச் சாலினி
தெய்வம் உற்று மெய்ம்மயிர் நிறுத்துக்
கை எடுத்து ஓச்சிக் கானவர் வியப்ப,
இடுமுள் வேலி எயினர்கூட் டுண்ணும்
நடுஊர் மன்றத்து அடிபெயர்த்து ஆடிக்,
"கல்என் பேர்ஊர்க் கணநிரை சிறந்தன;
வல்வில் எயினர் மன்றுபாழ் பட்டன;

மறக்குடித் தாயத்து வழிவளம் சுரவாது,
அறக்குடி போல்அவிந்து அடங்கினர் எயினரும்;
கலையமர் செல்வி கடன்உணின் அல்லது,
சிலையமர் வென்றி கொடுப்போள் அல்லள்;
மட்டுஉண் வாழ்க்கை வேண்டுதிர் ஆயின்,
கட்டுஉண் மாக்கள்! கடந்தரும்'' என—ஆங்கு—

அதன்மேல், வில்லாற்றல் வழங்கும் பெரிய கைகளையுடைய மறவர் குடியிற் பிறந்தவருடைய நேர்த்திக் கடனைத் தீர்க்க முழங்கும் தேவராட்டியானவள், தெய்வம் உற்றனள். அவள் உடம்பின் மயிர்கள் குத்திட்டு நின்றன. கைகளை அகல எடுத்து மேலே உயர்த்தினாள். கானவர் வியந்து நின்றனர். (மறவர் தம் ஊருக்குக் காவலாக முள்வேலி இட்டிருப்பர். அவ்வூர் நடுவிலே, அவர் கூட்டுணவு உண்ணும் ஊர்மன்றம் இருக்கும். அம் மன்றத்திலே, அவள் அடி பெயர்த்து வைத்துத் தெய்வம் உற்றவளாகி வெறியாடினாள்.

"பகைவர் பேரூருள் ஆரவாரம் மிகுந்தது. ஆனிரைகள் திரண்டுள்ளன. வலிய வில்லினையுடைய மறவரின் இம்மன்றமோ பாழ்பட்டு விட்டது. மறக்குடித் தாயத்திலே வழிப்பறியால் வளம் ஏதும் வந்து சுரக்கவில்லை. அறக்குடியினரேபோல யாவரும் உணவு மறந்து செயலவிந்து அடங்கினர். கலையமர் செல்வியான கொற்றவைக்கு நேர்ந்த கடனை நீவிர் தரவில்லை. அதனை உண்டால் அல்லாது, நும் சிலையிலே போரின் வெற்றியை அவள் தரமாட்டாள். உண்டு களித்து வாழும் வாழ்வையே நீர் வேண்டுவீர். அவ்வாறாயின், பறித்துண்ணும் மாக்களே! நும் பலிக்கடனைத் தேவிக்குத் தாருங்கள்'' என்று அவள் குரலெடுத்து முழங்கினாள்.

## 3. கொற்றவை கோலம்!

இட்டுத் தலை எண்ணும் எயினர் அல்லது
சுட்டுத் தலைபோகாத் தொல்குடிக் குமரியைச்
சிறுவெள் அரவின் குருளைநாண் சுற்றிக்
குறுநெறிக் கூந்தல் நெடுமுடி கட்டி,
இளைசூழ் படப்பை இழுக்கிய ஏனத்து
வளைவெண் கோடு பறித்து, மற்றது

மறக்குடித் தாயத்து வழிவளம் சுரவாது,
அறக்குடி போல்அவிந்து அடங்கினர் எயினரும்;
கலையமர் செல்வி கடன்உணின் அல்லது,
சிலையமர் வென்றி கொடுப்போள் அல்லள்;
மட்டுஉண் வாழ்க்கை வேண்டுதிர் ஆயின்,
கட்டுஉண் மாக்கள்! கடந்தரும்'' என—ஆங்கு—

அதன்மேல், வில்லாற்றல் வழங்கும் பெரிய கைகளையுடைய மறவர் குடியிற் பிறந்தவருடைய நேர்த்திக் கடனைத் தீர்க்க முழங்கும் தேவராட்டியானவள், தெய்வம் உற்றனள். அவள் உடம்பின் மயிர்கள் குத்திட்டு நின்றன. கைகளை அகல எடுத்து மேலே உயர்த்தினாள். கானவர் வியந்து நின்றனர். (மறவர் தம் ஊருக்குக் காவலாக முள்வேலி இட்டிருப்பர். அவ்வூர் நடுவிலே, அவர் கூட்டுணவு உண்ணும் ஊர்மன்றம் இருக்கும். அம் மன்றத்திலே, அவள் அடி பெயர்த்து வைத்துத் தெய்வம் உற்றவளாகி வெறியாடினாள்.

"பகைவர் பேரூருள் ஆரவாரம் மிகுந்தது. ஆனிரைகள் திரண்டுள்ளன. வலிய வில்லினையுடைய மறவரின் இம்மன்றமோ பாழ்பட்டு விட்டது. மறக்குடித் தாயத்திலே வழிப்பறியால் வளம் ஏதும் வந்து சுரக்கவில்லை. அறக்குடியினரேபோல யாவரும் உணவு மறந்து செயலவிந்து அடங்கினர். கலையமர் செல்வியான கொற்றவைக்கு நேர்ந்த கடனை நீவிர் தரவில்லை. அதனை உண்டால் அல்லாது, நும் சிலையிலே போரின் வெற்றியை அவள் தரமாட்டாள். உண்டு களித்து வாழும் வாழ்வையே நீர் வேண்டுவீர். அவ்வாறாயின், பறித்துண்ணும் மாக்களே! நும் பலிக்கடனைத் தேவிக்குத் தாருங்கள்'' என்று அவள் குரலெடுத்து முழங்கினாள்.

### 3. கொற்றவை கோலம்!

இட்டுத் தலை எண்ணும் எயினர் அல்லது
சுட்டுத் தலைபோகாத் தொல்குடிக் குமரியைச்
சிறுவெள் அரவின் குருளைநாண் சுற்றிக்
குறுநெறிக் கூந்தல் நெடுமுடி கட்டி,
இளைசூழ் படப்பை இழுக்கிய ஏனத்து
வளைவெண் கோடு பறித்து, மற்றது

முளைவெண் திங்கள் என்னச் சாத்தி,
மறம்கொள் வயப்புலி வாய்பிளந்து பெற்ற
மாலை வெண்பல் தாலிநிரை பூட்டி;
வரியும் புள்ளியும் மயங்கு வான்புறத்து
உரிவை மேகலை உடீஇப், பரிவொடு
கருவில் வாங்கிக் கையகத்துக் கொடுத்துத்
திரிதரு கோட்டுக் கலைமேல் ஏற்றிப்;
பாவையும், கிளியும், தூவி அம்சிறைக்
கானக் கோழியும், நீனிற மஞ்ஞையும்,
பந்தும், கழங்கும், தந்தனர் பரசி;
வண்ணமும், சுண்ணமும், தண்ணறுஞ் சாந்தமும்,
புழுக்கலும், நோலையும், விழுக்குடை மடையும்,
பூவும், புகையும், மேவிய விரையும்,
ஏவல் எயிற்றியர் ஏந்தினர் பின்வர;
ஆறெறி பறையும், சூறைச் சின்னமும்,
கோடும், குழலும், பீடுகெழு மணியும்,
கணங்கொண்டு துவைப்ப, அணங்குமுன் நிறீஇ,
விலைப்பலி உண்ணும் மலர்ப்பலி-பீடிகைக்
கலைப்பரி ஊர்தியைக் கைதொழுது ஏத்தி—

மறவர்கள், கொற்றவைக்குத் தம் தலையைத் தாமே கொய்து பலியிட்டுப், பிறர் 'இத்தனை' என எண்ணிக் கொள்ளுமாறு செய்பவர். அன்றி, வறிதே செத்துச் சுட்டுத் தலை எண்ணச் செய்யும் கோழைமை உடையவரல்லர். அவர், தம் பழங்குடிக் குமரி ஒருத்தியை அழைத்து, அவள் கூந்தலினைச் சிறுவெள்ளைப் பாம்புக்குட்டி போன்று பண்ணிய பொன்கயிற்றால் சுற்றினர். அவளின் குட்டையான சுருண்ட கூந்தலை, நெடுமுடியாகத் தலைமேல் உயர்த்துக் கட்டினர். சுட்டுவேலி சூழ்ந்த தோட்டப்பயிரை அழித்த காட்டுப்பன்றியைக் கொன்று பறித்த, அதன் வளைந்த வெண்மையான கொம்பினை, அச் சடைமுடியின்மேல் 'திங்கட்பிறை' எனக் கூறிச் சார்த்தினர். மறங்கொண்ட வலிய புலியின் வாயைப் பிளந்து பெற்ற வெண்பற்களை ஒழுங்காகக் கோத்துப் 'புலிப்பல் தாலி'யாக அவள் கழுத்திட்டனர். வரியும் புள்ளியும் கலந்த புலித்தோலினை அவளிடையிலே மேகலையாக உடுத்தனர். அன்புடன், வயிர வில்லினை வளைத்து, அவள் கையிலே கொடுத்தனர்.

கொம்பினையுடைய கலைமானின் முதுகிலே முறுக்குண்ட கொம்பினையுடைய கலைமானின் முதுகிலே அவளை ஏற்றியும் வைத்தனர். பாவையும், கிளியும், கானங் கோழியும், நீலநிற மயிலும், பந்தும், கழங்கும் ஆகிய வற்றைத் தந்து, அவளைக் கொற்றவையாகவே புனைந்த னர். அப்படியே கருதியும் போற்றிப் பணிந்து வழிபட்டனர். வண்ணக்குழம்பும், சுண்ணப் பொடியும், குளிர்ந்த நறுஞ் சந்தனமும், புழுக்கலும், எள்ளுருண்டையும், நிணச்சோறும், பூவும், புகையும், விருப்பமான சோட்டம் முதலிய மணப் பொருள்களும் ஆகியவற்றை, ஏவலரான சில மறப்பெண் கள் ஏந்திக்கொண்டே அவள் பின்னாக வந்தனர். அவ்வள விலே, வழிபறிக்க முழங்கும் பறையும், சூறையிடுங் காலத் திலே ஊதும் சின்னமும், கொம்பும், குழலும், பெருமை பொருந்திய மணியும் ஒன்றாகச் சேர்ந்து ஒலிக்குமாறு, அக் குமரியின் முன்னே நிறுத்தப்பெற்றன. பின்னர்த் தான் தந்த வெற்றியின் விலையாகப் பலிபெற்று உண்ணும், ஐயையின் மலரிட்ட பலிபீடத்தை முதலிலே தொழுதனர். அதன் பின்னர், கலைப்பரியினை வாகனமாகக் கொண்ட கொற்ற வையைக் கைதொழுதும் போற்றினர். [தாம் புனைந்து வைத்த அக் குமரியையே தேவியாகப் பாவித்துப் போற்றி வழிபட்டனர். உள்ளேயிருந்த ஐயைத் திருவுருவத்தையும் பணிந்து போற்றினர்.]

## 4. சாலினி உரைத்தவை

இணைமலர்ச் சீறடி இனைந்தனள் வருந்திக்
கணவனோடு இருந்த மணமலி கூந்தலை:
"இவளோ, கொங்கச் செல்வி; குடமலை யாட்டி;
தென்தமிழ்ப் பாவை செய் தவக் கொழுந்து;
ஒருமா மணி ஆய், உலகிற்கு ஓங்கிய
திருமா மணி" எனத் தெய்வம் உற்று உரைப்பப்—

அந்த நேரத்திலே, சாலினிமேல் தெய்வம் வந்து உற்றது. இணைந்திருக்கும் தாமரைபோன்ற தன் சீறடிகள் சிவந்த வளாக வருந்தித், தன் கணவனோடு அங்கு ஒருபுறமாக இருந்த மணமலிந்த கூந்தலையுடைய கண்ணகியைச் சுட்டிக் காட்டினாள். 'இவளோ் கொங்கர் போற்றும் செல்வி யாவாள்! குடமலையினை ஆண்டிருப்பவளாவாள்! பாண்டியனின் தெந்தமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து இவள்! ஒப்பற்ற மாமணியாக, இவ்வுலகிற்கெல்லாம் தலை சிறந்து விளங்கும் மாமணியாக, இவள் என்றும் ஒளிவீசு வாள்!' எனச் சாலினி தெய்வ ஆவேசமுற்று உரைத்தனள்!

## 5. கண்ணகி நாணுதல்!

'பேதுறவு மொழிந்தனன் மூதறிவுஆட்டி' என்று,
அரும்பெறல் கணவன் பெரும்புறத்து ஒடுங்கி,
விருந்தின் மூரல் அரும்பினள் நிற்ப—

அதனைக் கேட்டு, 'இம் மூதறிவாட்டி தெய்வ வெறி கொண்டு ஏதோ மயங்கிக் கூறினாள்' என்று, தான் அருமையாகப் பெற்ற கணவனது பெருமுதுகின்பின்னே ஒடுங்கிக் கொண்டு, முகத்திலே புதியதோர் இளமுறுவல் தோன்றியவளாக, நாணி நின்றாள் கண்ணகி.

## 6. கொற்றவை அருளினள்!

மதியின் வெண்தோடு சூடுஞ் சென்னி,
நுதல்கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்
பவள வாய்ச்சி; தவளவாள் நகைச்சி;
நஞ்சுஉண்டு கறுத்த கண்டி, வெஞ்சினத்து
அரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்;
துளைஎயிற்று உரகக் கச்சுடை முலைச்சி;
வளையுடைக் கையில் சூலம் ஏந்தி,
கரியின் உரிவை போர்த்து அணங்கு ஆகிய
அரியின் உரிவை மேகலை யாட்டி,
சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி,
வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை;
இரண்டுவேறு உருவின் திரண்டதோள் அவுணன்
தலைமிசை நின்ற தையல்; பலர் தொழும்
அமரி, குமரி, கவுரி, சமரி,
சூலி, நீலி, மால்-அவற்கு இளங்கிளை;
ஐயை, செய்யவள், வெய்யவாள் தடக்கைப்
பாய்கலைப் பாவை; பைந்தொடிப் பாவை;
ஆய்கலைப் பாவை; அருங்கலப் பாவை;
தமர்தொழ வந்த குமரிக் கோலத்து
அமர்இளங் குமரியும் அருளினள்
வரியுறு செய்கை வாய்ந்ததால் எனவே.—

பிறையாகிய வெள்ளிதழைச் சூடுகின்ற சென்னியாள்; நெற்றியைக் கிழித்து விழித்த இமையாத நெற்றிக் கண்ணி

னாள்; பவளம் போன்ற வாயாள்; முத்தொளி விளங்கும்
சிறப்பினையுடையாள்; நஞ்சுண்டு கறுத்த கழுத்தினாள்;
வெஞ்சினத்து அரவினை நாணாகப் பூட்டி, மேருமலையினை
வளைத்தவள்; துளையமைந்த பல்லையுடைய நச்சரவினைக்
கச்சாகக் கட்டியிருக்கும் முலையினாள்; வளையுடைய கை
யிலே சூலம் ஏந்தியவள்; யானைத் தோலைப் போர்த்த
வள்; அதன்மேல் புலித்தோலை மேகலையாக அணிந்தவள்;
இடப்புறக் காலிலே சிலம்பும், வலப்புறக் காலிலே வீரக்கழ
லும் ஒலிக்கும் சிறிய அடிகளை உடையவள்; மேலான
வெற்றி தவறாது வாய்க்கும் வாளினை ஏந்தியவள்; எருமைத்
தலையும் மனித உடலுமாகத் திரண்ட தோளுடைய மகிடா
சுரனைக் கொன்று, அவன் தலைமீது நிற்பவள்; பலரும்
தொழுகின்ற சிறப்பினள்; தனக்கோர் அந்தம் இல்லாதவள்;
என்றும் குமரியாயிருப்பவள்; கரு நிறத்தையுடையவள்;
போரின் அதிதேவதை; அனைத்துலகையும் கருவிலே
தாங்கியவள்; நீலநிறம் உடையவள்; திருமாலுக்குத் தங்கை
யானவள்; எம் தலைவி! அவள், செய்யவள்; தடக்கையிலே
கொடிய வாளினைக் கொண்டவள்; பாயும் கலையிலே
ஊர்ந்துவரும் பாவை; பசிய வீரவளை அணிந்த பாவை;
ஆய்கலை அனைத்துக்கும் பாவை; அருங்கலம் அனைத்திற்
கும் உரிய பாவை; தம்மவர் தொழ வந்தவள்; குமரிக்
கோலத்து அமர்ந்த இளங்குமரி; அவள் அருள் செய்து
விட்டாள்; வரிக்கோலம் கொள்ளும் செயலும் இனி
வாய்த்து விட்டது' எனப் போற்றிப் பரவினர் மறக் குடியினர்
அனைவரும்.

## 7. பலிபீடத்து முன்னிலையில்

### உரைப்பாட்டு மடை

நாக நாறு நரந்தம் நிரந்தன;
ஆவும் ஆரமும் ஓங்கின; எங்கணும்;
சேவும் மாவுஞ் செறிந்தன—கண்ணுதல்
பாகம் ஆளுடை யாள்பலி முன்றிலே! 1
செம்பொன் வேங்கை சொரிந்தன, சேயிதழ்
கொம்பர் நல்லில வங்கள் குவிந்தன;
பொங்கர் வெண்பொரி சிந்தின-புன்கு இளம்
திங்கள் வாழ்சடை யாள்திரு முன்றிலே! 2

மரவம், பாதிரி, புன்னை, மணங்கமழ்,
குரவம், கோங்கம், மலர்ந்தன கொம்பர்மேல்
அரவ வண்டினம் ஆர்த்து; உடன் யாழ்செய்யும்—
திருவ மாற்குஇளை யாள்திரு முன்றிலே. 3

சுரபுன்னையும், மணம் நாறும் நரந்தையும் நிரல்பட உள்ளன. ஆச்சாவும் சந்தனமும் ஓங்கி வளர்ந்துள்ளன. சேமரமும் மாமரமும் எங்கும் செறிந்துள்ளன. நெற்றிக் கண்ணுடைய சிவனின் ஒரு பாகத்தினைப் பெற்று, உலகாள் பவளாகிய கொற்றவையின் பலிபீடத்தின் முன்றிலிலே, இவை எல்லாம் நிரம்பி விளங்குகின்றன!

செம்பொன் மலர்களை வேங்கை மரங்கள் சொரிந்தன. சிவந்த இதழ்களை நல்ல இலவமரங்கள் உதிர்த்துக் குவித்தன. புன்க மரங்கள் பழம்பூக்களாகிய வெண்பொரி களைச் சிந்தின. இளந்திங்கள் வாழ்கின்ற சடையுடை யாளின் திருமுன்றிலிலே, இவை எல்லாம் கூடிப் பூச்சொரி கின்றன!

வெண்கடம்பும், பாதிரியும், புன்னையும், மணம் கமழ் கின்ற குரவமும், கோங்கமும் மலர்ந்துள்ளன. மரக்கொம்பு களின் மேல், ஒலிசெய்யும் வண்டினம் ஆர்த்து முழங்கி யாழிசைபோல இசைக்கின்றன. திருமாலுக்கு இளையாளின் திருமுன்றிலிலே, இவை யாவும் முறையே நிகழ்கின்றன!

## 8. சிறந்த குலமாகும்

(வள்ளிக் கூத்து)

கொற்றவை கொண்ட அணிகொண்டு நின்றஇப்
பொற்றொடி மாதர் தவம்என்னை கொல்லோ?
பொற்றொடி மாதர் பிறந்த குடிப்பிறந்த
விற்றொழில் வேடர் குலனே குலனும்! 4

ஐயை திருவின் அணிகொண்டு நின்றஇப்
பையரவு அல்குல் தவம்என்னை கொல்லோ?
பையரவு அல்குல் பிறந்த குடிப்பிறந்த
எய்வில் எயினர் குலனே குலனும்! 5

பாய்கலைப் பாவை அணிகொண்டு நின்றஇவ்
ஆய்தொடி நல்லாள் தவமென்னை கொல்லோ?
ஆய்தொடி நல்லாள் பிறந்த குடிப்பிறந்த
வேய்வில் எயினர் குலனே குலனும்! 6

"கொற்றவையாள் கொண்ட அணியெல்லாம் புனைந்து கொண்டு நின்ற, இப் பொற்றொடியான குமரியின் தவம் தான் யாதோ? இப்பொற்றொடி மாதானவள் பிறந்த குடியிலே பிறந்த, வில் தொழில் வல்ல வேட்டுவராகிய எம் குலமே சிறந்த குலமாகும்!

"ஐயையின் அழகிய அணியினைச் சூடிக்கொண்டு நின்ற, அரவுப்படம் போன்ற அல்குலாள் செய்த தவந்தான் யாதோ? இக் குமரியானவள் பிறந்த குடியிலே பிறந்த, எய்யும் வில்லினை உடைய, எம் எயினர் குலமே சிறந்த குலமாகும்!

"பாய்கலைப் பாவையாளின் அணிகொண்டு நின்ற, இந்த ஆய்தொடி நல்லாள் செய்த தவம்தான் என்னவோ? இவள் பிறந்த குடிப்பிறந்த, மூங்கிலினாலான வில்லினை உடைய எம் எயினர் குலமே சிறந்த குலமாகும்!"

## 9. தாயே நிற்பாய்!

(முன்னிலைப் பரவல்)

ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரிஉடுத்துக்
கானத்து எருமைக் கருந்தலைமேல் நின்றாயால்—
வானோர் வணங்க, மறைமேல் மறையாகி,
ஞானக் கொழுந்தாய், நடுக்குஇன்றி யேநிற்பாய்! 7

வரிவளைக்கை வாள் ஏந்தி மாமயிடற் செற்று,
கரியதிரி கோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால்—
அரி, அரன், பூமேலோன் அகமலர்மேல் மன்னும்
விரிகதிர் அம் சோதி விளக்குஆகி யேநிற்பாய்! 8

சங்கமும் சக்கரமும் தாமரைக் கைஏந்திச்,
செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்றாயால்—
கங்கை முடிக்கு அணிந்த கண்ணுதலோன் பாகத்து,
மங்கை உருவாய் மறைஏத்த வேநிற்பாய்! 9

"ஆனைத் தோலினைப் போர்த்துப் புலியின் தோலினை உடுத்துக், காட்டெருமைக் கடாவின் கருத்தலையின்மீது நின்றவளே! வானோர் வணங்க, மறைகளுக்கும் மேலான மறைப்பொருளாகி, ஞானக்கொழுந்தாக, என்றும் நிலைத்து நிற்பவளே! எம் தாயே!

"வரிவளை யணிந்த கையிலே வாளேந்திப், பெரிய மகிடாசுரனை அழித்துக், கரிய முறுக்குண்ட கொம்பினை

யுடைய கலைமானின்மீது நின்றவளே! அரி, அரன், அயன் ஆகியோரின் நெஞ்சத்தும் நிறைந்திருக்கும், விரிந்த கதிர்களை உடைய, அழகிய சோதி விளக்காகி நிற்பவளே! எம் தாயே!

"சங்கமும் சக்கரமும் தாமரைக் கையிலே ஏந்திச், சிவந்த கண்களை உடைய சினமிகுந்த சிங்க ஏற்றின்மேல் நின்ற வளே! கங்கையைச் சடை முடியிலே அணிந்த கண்ணுதலோ னின் இடப் பாகத்திலே, மங்கை உருவாக, மறைகள் போற்ற விளங்கி நிற்பவளே! எம் தாயே!"

## 10. வென்றிக் கூத்து

ஆங்குத்,
துன்று மலர்ப்பிணையல் தோளமேல் இட்டு-ஆங்கு,
அசுரர் வாட, அமரர்க்கு ஆடிய
குமரிக் கோலத்துக் கூத்துள் படுமே—

அவ்வாறிருந்தும், கொன்றையும் துளவமும் சேரத் தொடுத்த மலர்செறிந்த மாலையைத் தோளின்மேல் இட்ட வளாக, அசுரர் வாடி நிற்கும்வண்ணம், அமரரின் பொருட் டாக, குமரிக் கோலத்தோடு, நீ மரக்கால் கூத்தாடுவதிலும் அந்நாளில் ஈடுபட்டாயே!

## 11. கூத்துள் படுதல்

ஆய்பொன் அரிச்சிலம்பும் சூடகமும் மேகலையும்
ஆர்ப்ப ஆர்ப்ப,
மாயஞ்செய் வாள்அவுணர் வீழ, நங்கை மரக்கால்மேல்
வாளமலை ஆடும் போலும்!
மாயஞ்செய் வாள்அவுணர் வீழ, நங்கை மரக்கால்மேல்
வாளமலை ஆடும்ஆயின்,
காயா மலர்மேனி ஏத்தி, வானோர் கைபெய் மலர்-மாரி
காட்டும் போலும்! 11

ஆய்ந்தெடுத்த பொன்னாலான அரிச்சிலம்பும் சூடகமும் மேகலையும் ஆர்த்து ஆர்த்து ஒலிசெய்ய, மாயங்கள் செய்யும் வாளாற்றலுடைய அவுணர்கள் அழிய, நங்கை மரக்கால் மேல் நின்று வாட்கூத்தும் ஆடுவாள் போலும்! நங்கை அவ்வாறு ஆடுவாளானால், அவளின் காயாம்பூ மலர்மேனி

யைப் போற்றி, வானோர் கைகள் பெய்யும் மலர்கள், மாரியை ஒப்ப மிகுந்து காட்டும் போலும்!

### 12. வெட்சி

உட்குஉடைச் சீறூர் ஒருமகன் ஆன்
நிரைகொள்ள உற்ற காலை,
வெட்சி மலர்புனைய, வெள்வாள்
உழத்தியும் வேண்டும் போலும்!
வெட்சி மலர்புனைய, வெள்வாள்
உழத்தியும் வேண்டின், வேற்றூர்க்
கட்சியுட் காரி கடிய
குரல் இசைத்துக் காட்டும் போலும்! 12

அச்சமுடைய சீறூரிலுள்ள ஒரு வீரன், ஆனிரை கொள்ளச் சென்றபோது, வெட்சி மலர் புனைய, வெள் வாளினை உடைய கொற்றவையும் துணைவர, அவன் வேண்டுவான் போலும்! அவ்வாறு அவன் வெட்சிமலர் புனைய அவளும் விரும்பினால், வேற்றாரைச் சூழ்ந்த காட்டிலே, கரிக்குருவி, அவர்க்கு நேரப்போகும் கேட்டினைத் தன் கடுங்குரலால் இசைத்துக் காட்டும் போலும்!

### 13. வெட்சிப் புறநடை

கள்விலை யாட்டி மறுப்பப்
பொறா மறவன் கைவில் ஏந்திப்
புள்ளும் வழிப்படரப் புல்லார்
நிரைகருதிப் போகும் போலும்!
புள்ளும் வழிப்படரப் புல்லார்
நிரை கருதிப் போகும் காலைக்
கொள்ளும் கொடிஎடுத்துக் கொற்றவையும்
கொடுமரமுன் செல்லும் போலும்! 13

கள் விற்பவள் காசின்றிக் கள்ஊற்ற மறுப்ப, அந் நிலை பொறாத மறவன், தன் கையிலே வில்லினை ஏந்திப், புள் நிமித்தமும் ஒத்துப்போகப், பகைவரது ஆனிரை கவர்தல் கருதிப் போவான் போலும்! அங்ஙனம் அவன் போகுங் காலத்திலே, 'தான் கைக்கொள்ளும் போர்க்கொடியை உயர்த்தவளாகக், கொற்றவையும், அவன் வில்லின் முன்னைப் பிலே அமர்ந்து, அவனுக்குத் துணையாகச் செல்வாள் போலும்!

## 14. கொடை

(வேறு)

இளமா எயிற்றி! இவைகாண் நின் ஐயர்
தலைநாளை வேட்டத்துத் தந்தநல் ஆன்நிரைகள்;
கொல்லன், துடியன், கொளைபுணர் சீர்வல்ல
நல்லியாழ்ப் பாணர்-தம் முன்றில் நிறைந்தன! 14

முருந்துஏர் இளநகை! காணாய், நின் ஐயர்,
கரந்தை அலறக் கவர்ந்த இனநிரைகள்;
கள்விலை யாட்டி, நல் வேய்தெரி கானவன்,
புள்வாய்ப்புச் சொன்ன கணி, முன்றில் நிறைந்தன! 15

கயமலர் உண்கண்ணாய்! காணாய், நின் ஐயர்
அயல் ஊர் அலற, எறிந்தநல் ஆன் நிரைகள்;
நயன்இல் மொழியின் நரைமுது தாடி
எயினர், எயிற்றியர், முன்றில் நிறைந்தன! 16

இளமையும் மாமை நிறமும் கொண்ட எயிற்றியே! இவற்றைப் பாராய். இவைதாம் நின் மூத்தோர் தலைநாளை வேட்டையிற் கவர்ந்துவந்த நல்ல ஆன்நிரைகள். இவை எல்லாம் கொல்லன், துடியன், முறையோடு யாழிசைக்க வல்ல பாணன் இவர்கள்தம் முற்றத்திலே நிறைந்துள்ளன; அதனையும் காணாய்!

மயிலிறகுக் குருத்துப்போன்ற இளநகை உடையவளே! நின் மூத்தோர், ஆனிரை மீட்க வந்தோர் அலறியோடும் வண்ணம் கவர்ந்துவந்த ஆன்நிரைகள், கள்விற்பவள், நன்றாக உளவறிந்து கூறும் கானவன், புள்நிமித்தம் சரியாகச் சொன்ன கணி ஆகியவர்களுடைய வீட்டு முற்றங்களிலே நிறைந்துள்ளன; அதனையும் பாராய்!

கயமலர் மையுண்டாற்போன்ற கண்களை உடையவளே! நின் ஐயன்மார், அயலவர் ஊர்கள் அலற, வென்று வந்த நல்ல ஆன்நிரைகள், நயமில்லாத கொச்சை மொழிகளையும் நரைத்த முதுதாடியினையுமுடைய வயதுமுதிர்ந்த எயினர், எயிற்றியரின் முன்றில்களிலே நிறைந்துள்ளன; அதனையும் காணாய்!

## 15. அவிப் பலி

(துறைப்பாட்டு மடை)

சுடரொடு திரிதரு முனிவரும் அமரரும்
இடர்கெட அருளும்நின் இணைஅடி தொழுதேம்;
அடல்வலி எயினர்நின் அடிதொடு கடனிது,
மிடறுஉகு குருதி; கொள் விறல்தரு விலையே! 17

அணிமுடி அமரர்தம் அரசொடு பணிதரு
மணிஉரு வினை! நின் மலர்அடி தொழுதேம்;
கணநிறை பெருவிறல் எயின்இடு கடன்இது;
நிணன்உகு குருதி; கொள் நிகர்அடு விலையே! 18

துடியொடு, சிறுபறை, வயிரொடு துவைசெய,
வெடிபட வருபவர் எயினர்கள் அரைஇருள்;
அடுபுலி அனையவர்; குமரிநின் அடிதொடு
படுகடன் இது; உகு பலிமுக மடையே! 19

இரு சுடர்களுடனே, வானிலே திரிபவரான முனிவர்க்கும் அமரர்க்கும் இடர்கெடுமாறு அருளுகின்ற, இணையற்ற நின் பாதங்களைத் தொழுதேம்! பகைவரை அடுகின்ற வளமிக்க எயினர் நின் பாதங்களிலே சேர்க்கும் கடன் இது— 'அறுபட்ட மிடற்றிலே இருந்து பொங்கி எழும் குருதி; இதனை ஏற்றுக் கொள்வாயாக தாயே. எமக்கு நீ தந்த வெற்றிக்கு விலை இது தாயே!'

அழகிய முடியணிந்த அமரர், தம் அரசனுடன் வந்து வணங்குகின்ற, நீலமணிபோலும் உருவினை உடையாளே! நின் மலரடியினைத் தொழுதேம். திரண்ட ஆனிரைகளைக் கவர்ந்து பெறுகின்ற ஆற்றலுடைய மறவர், நின் பாதங்களிலே இடுகின்ற கடன் இது—எம் நிணத்திலிருந்து பொங்கிச் சிந்தும் உதிரம். இதனைக் கொள்வாயாக! அத்தகைய வெற்றியை எமக்குத் தந்ததற்கு, இது விலை தாயே!

துடியுடனே சிறுபறையும் கொம்பும் மிகுதியாக முழங்க வருபவர் மறவர்கள். நள்ளிருளிலே எதிர்ப்பட்ட விலங்கினங்களை வெல்லுகின்ற புலியினைப் போன்றவர் அவர்கள்! குமரியாகிய நின் பாதங்களைத் தொட்டுச் சூளுற்று அவர்கள் பட்ட கடன்—அறுபட்ட கழுத்திலிருந்து சிந்தும் உதிரம்! இதனை நீ ஏற்றுக்கொள்வாய் தாயே!

## 16. பலிக்கொடை

(வேறு)

வம்பலர் பல்கி, வழியும் வளம்பட,
அம்புடை வல்வில் எயின்கடன் உண்குவாய்—
சங்கரி, அந்தரி, நீலி, சடாமுடிச்
செங்கண் அரவு பிறையுடன் சேர்த்துவாய்! 20

துண்ணென் துடியொடு துஞ்சுஊர் எறிதரு,
கண்ணில் எயினர் இடுகடன் உண்குவாய்—
விண்ணோர் அமுது உண்டும் சாவ, ஒருவரும்
உண்ணாத நஞ்ச உண்டு, இருந்து, அருள் செய்குவாய! 21

பொருள் கொண்டு புண்செயின் அல்லதை, யார்க்கும்
அருள்இல் எயினர் இடுகடன் உண்குவாய்—
மருதின் நடந்துநின் மாமன்செய் வஞ்ச
உருளும் சகடம் உதைத்து அருள் செய்குவாய்! 22

சங்கரி! அந்தரி! நீலி! சடாமுடியிலே செங்கண் அரவும் பிறையும் ஒருசேரச் சூடுபவளே! வழிச்செல்வோர் பெருகி, வழிப்பறிப் பொருளும் வளம்படுமாறு செய்ய, அம்புடைய வலிய வில்லினை ஏந்தும் எயினர்தரும் பலிக்கடனை, நீயும் ஏற்றுக் கொள்வாயாக!

விண்ணோர் அமுது உண்டும் சாகும் வேளையிலே, ஒருவரும் உண்ண விரும்பாத நஞ்சினை உண்டும் நிலைத்திருந்து அருள் செய்தவளே! 'துண்' என முடங்கும் துடியோசையுடனே துயில்கின்ற ஊரினைக் கொள்ளையிடும், கண்ணோட்டம் இல்லாத எயினர் இடுகின்ற பலிக்கடனை, நீயும் உண்பாயாக!

மருதினிடையே நடந்து, நின் மாமன் செய்த வஞ்சனையான சகடத்தினை உதைத்து அருள் செய்தவளே! உள்ளதைப் பறித்துக்கொண்டு, அவருக்குப் புண்ணுண்டாகவும் செய்வதல்லது, யாரிடத்தும் அருளில்லாதவரான எயினர்கள் இடுகின்ற பலிக்கடனை, நீயும் உண்பாயாக!

## வெட்சி சூடுக

(வேறு)

மறைமுது முதல்வன் பின்னர் மேய
பொறையுயர் பொதியிற் பொருப்பன், பிறர்நாட்டுக்
கட்சியும் கரந்தையும் பாழ்பட,
வெட்சி சூடுக—விறல்வெய் யோனே! 23

மறைமுது முதல்வனான தென்திசைக் கடவுளுக்குப் (தட்சிணாமூர்த்தி) பின்னர் வந்து, குன்றுகள் உயர்ந்த பொதிய மலையை உடையவனாயிருக்கும் பாண்டியன், பகைவருடைய போர்முனையும் அவர் நீரைமீட்க வரும் செயலும் பாழ்படும் வண்ணம் செய்து, வெம்மையான ஆற்றலுடையவனாகிய அத்தகையவனான பாண்டியனும் வெட்சி மாலை சூடுவானாக!

['உலகிற்கு அறம் உரைத்து, அறம் நிலை பெறுத்திய தென்திசைக் கடவுளுக்குப்பின், தென்னவனே தன் ஆற்றலால் அறம் நிலைபெறச் செய்தவன்' எனற் பொருட்டுப், 'பின்னர் மேவி' என்றனர். தென்திசைக் கடவுள் தென் திசைக் கோமான் என்று அழைக்கப்பெறுகின்ற பொருத்தமும் இங்கே நினைக்க. இது பாண்டியரின் பழைமைச் சிறப்பையும், அவர்தம் அறநெறித் திண்மையையும், ஞான மரபையும் உணர்த்தும். 'மன்னுமா மகேந்திர மதனில் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளிய' அருட் செயலின் நிகழ்விடமான மகேந்திர மலையும், மலைச்சாரலும், பொதியமலைக்குத் தென்பால் இன்றும் விளங்குவதனையும் இதனோடு நினைக்க. திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்றம் எறிந்த குமரவேளும், நிலமளந்த நெடுமுடி அண்ணலும், ஐந்திரம் உரைத்த இந்திரனும் சங்கமிருந்து தமிழாய்ந்ததும், இறையனார் களவியல் உரைத்ததும், மீனாட்சியைச் சொக்கர் மணந்ததும், பிறவும் எல்லாம் இதனோடும் ஒரு சேர நினைக்க!]

# 13

# புறஞ்சேரி இறுத்த காதை

[நிலைமண்டில ஆசிரியப்பா]

[பகல் நேர வெய்யிலோ கடுமையாயிருந்தது. அதனால் பகலிற் செல்லாது, இரவில் நிலவு வெளிச்சத்திலேயே அவர்கள் வழிநடந்தனர். இடையே, ஓரிடத்திலே, கௌசிகன் மாதவியின் ஓலையுடன் வருகிறான். அவனை மீண்டும் புகாருக்கு அனுப்பிவிட்டுக், கோவலன், அவ் வழியிடையே வந்து தங்கிய பாணருடன் கூடி யாழிசைக்கிறான். அவர்பால் மதுரையின் தூரத்தினைக் கேட்டறிந்து, வையை யாற்றை மரத்தெப்பத்தாற் கடந்து, அதன் தென்கரையை அடைந்து, மதுரைப் புறஞ்சேரியினையும் அம்மூவரும் சென்று சேர்கின்றனர்.]

## 1. இரவை எதிர்பார்த்திருத்தல்

பெண்ணணி கோலம் பெயர்ந்தபிற் பாடு,
புண்ணிய முதல்வி திருந்தடி பொருந்திக்
'கடுங்கதிர் வேனிலிக் காரிகை பொறாஅள்;
படிந்தில சீறடி பரல்வெங் கானத்துக்
"கோள்வல் உளியமும் கொடும்புற்று அகழா;
வாள்வரி வேங்கையும் மான்கணம் மறலா;
அரவும், சூரும், இரைதேர் முதலையும்,
உருமும் சார்ந்தவர்க்கு உறுகண் செய்யா—
செங்கோல் தென்னவர் காக்கும் நாடு" என,
எங்கணும் போகிய இசையோ பெரிதே!
பகலொளி-தன்னினும், பல்லுயிர் ஓம்பும்
நிலவொளி விளக்கின், நீள்இடை மருங்கின்,
இரவிடைக் கழிதற்கு ஏதம் இல்'' எனக்
குரவரும் நேர்ந்த கொள்கையின் அமர்ந்து,
கொடுங்கோல் வேந்தன் குடிகள் போலப்
படுங்கதிர் அமையம் பார்த்திருந் தோர்க்கு—

முன்னர்க் கூறியது போலவே கொற்றவை கோலம் கொண்டிருந்த மறவர்குலக் குமரியும், அக்கோலத்தைக் களைந்தாள். அனைவருடனும் கூடித் தன் எயினச் சேரிக்கும்

போயினான். பின்னர், புண்ணியங்களின் முதல்வியான கவுந்தியடிகளின் திருவடிகளைக் கோவலன் வணங்கினான். "கடுங்கதிர் வேனிலை இக் காரிகையாள் பொறுக்க வாற்றாள். பருக்கைக் கற்களையுடைய வெம்மையிருந்த கானத்திலே இவள் சிற்றடிகள் என்றும் படிந்து பழக்கமில்லாதன. (எதிர்த்த விலங்கினைக் கொல்லவல்ல கரடியும், வளைந்த புற்றினை இக் கானிலே தோண்டுவதில்லை.) ஒள் வரியுடைய வேங்கையும் மானினத்தோடு மாறுபடவில்லை. பாம்பும், சூர்த்தெய்வமும், இரைதேடும் முதலையும், இடியும், தம்மைச் சார்ந்தவர்களுக்குக்கூடத் துன்பஞ் செய்யாது வாளாவிருக்கின்றன. செங்கோல் வழுவாத தென்னவர் காக்கும் நாட்டின் நிலைமை இது" என்று, எல்லா இடங்களிலும் சென்று பரவிய புகழோ மிகவும் பெரிதாகும். அதனால், பகல் வெளிச்சத்திலும், பல உயிர்களையும் தன் தண்மையால் காக்கும் நிலவொளியின் வெளிச்சத்திலே, நீண்ட வழியினூடே, இரவில் நாம் செல்வதால் யாதொரு தீங்கும் இல்லை" என்று கூறினான். கவுந்தியடிகளும் அவன் பேச்சினை ஆதரித்தனர்; அக் கோட்பாட்டினைத் தாமும் ஏற்றிருந்தனர். கொடுங்கோல் வேந்தனின் ஆட்சியிலே வாழுங் குடிகள், அவன் மறைவை ஆவலுடனே எதிர்பார்த்திருப்பதுபோல, அம் மூவரும், வெம்மையான ஞாயிறு மறைகின்ற சமயத்தை மிகவும் ஆவலுடனே எதிர்பார்த்தவாறு அவ்விடத்தே காத்திருந்தனர்.

## 2. நிலவும் சொரிந்தது!

'பன்மீன் தானையொடு பாற்கதிர் பரப்பித்
தென்னவன் குலமுதற் செல்வன் தோன்றித்
தாரகைக் கோவையும் சந்தின் குழம்பும்
சீர்இள வனமுலை சேராது ஒழியவும்,
தாதுசேர் கழுநீர்த் தண்பூம் பிணையல்
போதுசேர் பூங்குழல் பொருந்தாது ஒழியவும்,
பைந்தளிர் ஆரமொடு பல்பூங் குறுமுறி
செந்தளிர் மேனி சேராது ஒழியவும்,
மலயத்து ஓங்கி, மதுரையின் வளர்ந்து,
புலவர் நாவிற் பொருந்திய தென்றலோடு
பால்நிலா வெண்கதிர் பாவைமேற் சொரிய,

('வேனில் திங்களும் வேண்டுதி' என்றே
பார்மகள் அயா உயிர்த்து, அடங்கிய பின்னர்,—)

பல விண்மீன்களாகிய தன் சேனைப் பெருக்கத்துடன், பால்போன்ற நிலவுக்கதிர்களைப் பரப்பியவனாகத், தென்னவரின் குலமுதற் செல்வனான சந்திரனும், வானிலே எழுந்து தோன்றினான்.

தாரகைகளைக் கோத்தாற் போன்ற முத்துவடமும், சந்தனக் குழம்பும், சீர்மையும் இளமையும் பொருந்திய அழகிய முலைகளிலே சேராது ஒழியவும்; தாதுபொருந்திய செங்கழுநீரின் குளிர்ந்த மாலையானது முல்லைமலர் சேர்ந்து பொலிவுபெற்ற கூந்தலிலே பொருந்தாது ஒழியவும்; சந்தனத் துளிர்களுடனே பல அழகிய சிறு துளிர்களும் செந்தளிர்வண்ண மேனியிலே சேராது கழியவும்; மலயத்திலே பிறந்து, மதுரையிலே வளர்ந்து, புலவர்களின் நாவிலே பொருந்திய தென்றலோடு, பால்நிலவும் தன் வெண்கதிர்களைக் கண்ணகியின்மீது வாரிச் சொரிந்தது. அதனைக் கண்டு, 'இவ்வேனிற் காலத்துத் திங்களினை நீயும் விரும்புகின்றாயோ!' என்று, நிலமகள் அவளைப் பார்த்துப் பெருமூச்செறிந்து, ஒருவாறு தன் வெம்மையும் அடங்கினாள். அதன் பின்னர்—

[கண்ணகியோடு கோவலன் மீளவும் சேர்ந்துவிட்டான் என்றாலும், அவர்கள் கலந்து மகிழ்வுடன் வாழ்வதற்கு ஏற்றதாகச் சூழ்நிலை அமையவில்லை. ஆகவே, அவளைக் கணவனைக் கூடாது, பிரிந்து தனித்து இருக்கும் ஒரு பெண்ணின் துயர நிலையிலேயே காட்டுகின்றார் அடிகள். அவள் நிலைகண்டு பார்மகள் அயாவுயிர்த்தனள் என்பது கற்பனையாயினும் கண்ணகி துயரைச் சிந்திக்க செய்வது.]

## 3. நடந்தனர், விடிந்தது

ஆரிடை உழந்த மாதரை நோக்கிக்,
'கொடுவரி மறுகும்; குடிஞை கூப்பிடும்;
இடிதரும் உளியமும்; இனையாது ஏகு' எனத்
தொடிவளைச் செங்கை தோளிற் காட்டி,
மறவுரை நீத்த மாசறு கேள்வி
அறவுரை கேட்டு ஆங்கு, ஆர் இடை—கழிந்து

வேனல் வீற்றிருந்த வேய்கரி கானத்துக்
கான வாரணங் கதிர் வரவு இயம்ப,
வரிநவில் கொள்கை மறைநூல் வழுக்கத்துப்
புரிநூன் மார்பர் உறைபதிச் சேர்ந்து—
மாதவத்து ஆட்டியொடு காதலி தன்னைஓர்
தீதுதீர்சிறப்பின் சிறையகத்து இருத்தி—

கோவலன், வழிநடந்து களைத்திருக்கும் கண்ணகியை நோக்கி, 'கொடிய வரிப்புலிகள் உறுமும்; கோட்டான்கள் அலறும்; கரடிகள் முழங்கும்; நீ நடுங்காது செல்வாயாக' என்று தேறுதல் கூறினான். தொடிவளையணிந்த அவள் தோளின்மீது தன் செங்கையினைச் சார்த்திக் கொண்டான். மறஉரைகளை நீத்த மாசற்ற கேள்வியான அறவுரைகளைக் கவுந்தியடிகள் சொல்லி வந்தனர். அவற்றைக் கேட்டவாறே கடத்தற்கு அரிய காட்டினை அவர்கள் கடந்தனர். வேனில் நிலைபெற்றிருந்ததால், மூங்கில்கள் கரிந்து கிடக்கும் காட்டின் இடையிலே, கானங்கோழிச் சேவல்கள் ஞாயிற்றின் வரவினை அறிவித்தன. வரிப்பாடல்கள் பாடும் இயல்பினராய், மறைநூல் வழுவிப் போயினவராய், புரிநூல் அணிந்த மார்பினர் வதியும் ஒரு பதியையும் அவர்கள் சென்று சேர்ந்தனர். கவுந்தியடிகளுடனே, தன் காதலியையும், குற்றமற்ற சிறப்பினையுடைய ஒரு பாதுகாப்பான இடத்திலே இருக்கச் செய்துவிட்டு, அங்கே இட்டிருந்தவோர் முள்வேலியினையுங் கடந்து, அவ்விடத்திலேயே நெடுந் தொலைவில் உள்ள ஒரு நீர்நிலையினை நோக்கி, அதிகாலை வேளையில் நீர் வேண்டியவனாகச் சென்றான் கோவலன்.

## 4. மாதவிக் கொடியே!

இடுமுள் வேலி நீங்கி, ஆங்கு ஓர்,
நெடுநெறி மருங்கின் நீர்தலைப் படுவோன்—
காதலி தன்னொடு கானகம் போந்ததற்கு
ஊதுலைக் குருகின் உயிர்த்தனன் கலங்கி,
உட்புலம் புறுதலின், உருவம் திரியக்
கட்-புல மயக்கத்துக் கௌசிகன் தெரியான்
'கோவலன் பிரியக் கொடுந்துயர் எய்திய
மாமலர் நெடுங்கண் மாதவி போன்று, இவ்
அருந்திறல் வேனிற்கு அலர் களைந்து, உடனே,

வருந்தினை போலும் நீ மாதவி!' என்று ஓர்
பாசிலைக் குருகின், பந்தரிற் பொருந்தி,
கோசிக மாணி கூறக் கேட்டே—
'யாது நீ கூறிய உரை ஈது, ஈங்கு?' எனத்—

தன் காதலியும் தன்னோடு காட்டுவழியூடே நடந்து வந்து படும் துயரினை நினைத்த கோவலன், ஊதுஉலைத் துருத்தியின் செந்தீயினைப் போலப் பெருமூச்செறிந்தான். மனங்கலங்கி, உள்ளம் வருத்தம் உற்றதனால், அவன் உருவமும் ஓரளவு மாறுபட்டது. அவன் தோற்றம், அங்கே சற்றுத் தொலைவில் வந்து நின்ற கௌசிகனுக்குத் தெளிவாகப் புலப்படவில்லை. 'அவன் தானோ!' என்ற மனமயக்கத்தையே தந்தது. கோவலனென்றே உறுதியாகத் தெரியாதவனாகப், பசிய இலைகளையுடைய குருக்கத்தி படர்ந்த ஒரு பந்தரின் பக்கமாகச் சென்று நின்றுகொண்டு, "கோவலன் பிரியக் கொடுந்துயரம் எய்திய, கருமலர் நெடுங்கண் மாதவியைப் போன்று, இப் பொறுத்தற்கரிய வேனிலுக்கு ஆற்றாது, மலர்ச்சி பெறாது நீயும் உடனே வருந்திப் பொலிவிழந்தாய் போலும், மாதவி?" என்று, அந்த மாதவிக் கொடியின் வாட்டத்திற்குத் தான் வருந்துவது போலக் கூறினான். மாணியான கோசிகன் அவ்வாறு கூறிய சொற்கள், கோவலனின் செவிகளிலும் விழுந்தன. அவற்றைக் கேட்டதும், அவன் அவ்வாறு கூறியவனின் பக்கமாகச் சென்றான்—

## 5. கோசிகன் சொன்னவை

'தீது இலன், கண்டேன்' எனச்சென்று எய்தி—
கோசிக மாணி கொள்கையின் உரைப்போன்;
"இருநிதிக் கிழவனும் பெருமனைக் கிழத்தியும்
அருமணி இழந்த நாகம் போன்றதும்;
இன்உயிர் இழந்த யாக்கை என்னத்
துன்னிய சுற்றம் துயர்க்கடல் வீழ்ந்ததும்:
ஏவ லாளர்! யாங்கணுஞ் சென்று,
'கோவலன் தேடிக் கொணர்க' எனப் பெயர்ந்ததும்;
'பெருமகன் ஏவல் அல்லது யாங்கணும்
அரசே தஞ்சம்' என்று அருங்கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பேது உற்றதும்;

'சற்று முன்னர் எல்லாம் இங்கிருந்தவாறு ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தனையே! அவை எல்லாம் என்ன?' என்றான் கோவலன். கோவலன் அவ்வாறு அருகே வந்து கேட்டதும், கோசிகன், 'அவனே கோவலன்' என்று உணர்ந்தான். 'நீநின்றியுள்ளான்; அவனை யான் கண்டேன்' என்று ஆனந்தத்தால் வாய்விட்டுக் கூறினான். பின்னர்த் தான் வருவதற்கு நேர்ந்ததை விளக்கியும் கூறலானான் :

"நீங்கள் நகரை விட்டு வந்துவிட்டீர்கள். இருநிதிக் கிழவனான மாசாத்துவானும், அவனுடைய பெருமனைக் கிழத்தியும், பெறுதற்கரிய மணியினை இழந்துவிட்ட நாகம் போலப் பெரிதும் வாடினர். நெருங்கிய சுற்றத்தினரெல்லாம் உயிர் இழந்த உடல்போலத் துயர்க்கடலிலே அழுந்தினர். ஏவலாளர்கள் உங்களைத் தேடிக் கொணர்வதற்கென்று எத்திசை நோக்கியும் சென்றனர். 'பெருமகனாகிய தந்தையின் ஏவலைக் கேட்பது; அல்லது அரசே தஞ்சம் என்று இடப்பது' என்ற நிலையில், தந்தையின் ஏவலையே பெரிதாகக் கருதி, அரிய கானகம் நோக்கிச் சென்றான் அரிய திறலோனான இராமன். அவன் பிரிவினால் வருந்திய அயோத்தி நகரைப் போல, நும் பிரிவினாலும் புகார் நகரம் முழுவதுமே கலங்கியுள்ளது."

## 6. மாதவியின் மன வேதனை!

வசந்த மாலைவாய் மாதவி கேட்டுப்
பசந்த மேனியள், படர்நோய் உற்று,
நெடுநிலை மாடத்து இடைநிலத்து-ஆங்கு, ஓர்
படைஅமை சேக்கைப் பள்ளியுள் வீழ்ந்ததும்;
வீழ்துயர் உற்றோள், விழுமம் கேட்டுத்
தாழ்துயர் எய்தித் தான்சென்று இருந்ததும்;
இருந்துயர் உற்றோள், 'இணையடி தொழுதேன்
வருந்துயர் நீக்கு' என, மலர்க்கையின் எழுதி,
'கண்மணி அனையாற்குக் காட்டுக' என்றே
மண்உடை முடங்கல் மாதவி ஈத்ததும்;
ஈத்த ஓலை கொண்டு, இடைநெறித் திரிந்து,
தீத்திறம் புரிந்தோன் சென்ற தேயமும்,
வழிமருங்கு இருந்து மாசுஅற உரைத்து-ஆங்கு
அழிவுடை உள்ளத்து ஆர்அஞர் ஆட்டி,

போது அவிழ் புரிகுழல் பூங்கொடி நங்கை—
மாதவி ஓலை மலர்க்கையின் நீட்ட—

வசந்தமாலையின் மூலம் இவற்றை எல்லாம் மாதவியும் கேட்டனள். கேட்டதும், அம் மாதவியின் மேனியிற் பசலை படர்ந்தது. ஏக்கம் என்னும் பெருநோயுற்றாள். நெடுநிலை மாடத்தின் இடைநிலத்திலே, அவ்விடத்தில் இட்டிருந்த ஓர் பள்ளியறைக் கட்டிலிலே படுத்த படுக்கையாகி விட்டாள். பல்பூஞ்சேக்கைப் பள்ளியுள், கோவலனோடு முன்னர்க் கூடிமகிழ்ந்த நினைவுகள் அவள்பால் அலை மோதின. அவள்படும் பெருவேதனையைக் கேட்டு, ஆழ்ந்த வருத்தமுற்று, நானும், ஒரு நாள் அவளைக் காணச் சென்றேன்.

மிக்க துன்பமுற்று அவள், 'உம் இணையடி தொழுதேன். இப்படி எனக்கு வருகின்ற துன்பத்தினை நீக்கியருள்வீர்' என்று என்னை வேண்டினாள். தன் மலர்க்கையால் ஓர் ஓலையினை எழுதி, 'என் கண்மணி அனையாற்கு இதனைக் கொண்டுபோய்க் காட்டுக' என்று சொல்லி, முத்திரையிட்டு, என் கையிலேயும் தந்தாள். அதனைப் பெற்றுக்கொண்டு, பலப்பல நாடுகளும் சுற்றி வந்து, இங்குதான் உம்மை யான் கண்டேன்."

இவ்வாறு கூறியவனாக, அழிந்த உள்ளமும் பெருந் துயரமுங்கொண்டு, மலர்விழி புரிகுழல் மாதவியானவள் தன்னிடத்துத் தந்த அந்த ஓலையினைக் கோவலன் கையிடத்தே நீட்டினான், கோசிகன்.

## 7. ஓலை பெற்றான்!

உடன்உறை காலத்து உரைத்த நெய் வாசம்
குறுநெறிக் கூந்தல் மண்பொறி உணர்த்திக்
காட்டியது; ஆதலின் கைவிட லீயான்;
ஏட்டுஅகம் விரித்து; ஆங்கு எய்தியது உணர்வோன்,

தான் அவளுடன் கூடிவாழ்ந்த காலத்துப் பூசிய மண நெய்யின் வாசம் கோவலனுக்குத் தெரியுமன்றோ! செறிந்த நெறிப்பட்ட தன் கூந்தலால் மாதவி இட்டிருந்த மண் முத்திரையானது, அம் மணத்தை அங்கே உணர்த்திக் காட்டியது. ஆதலால் அதனை மறுக்கவும் கோவலனால் இயலவில்லை. வாங்கி விரித்து, அவ்வோலையினுள் அடங்கிய செய்தியைப் படிக்கத் தொடங்கினான் :

## 8. ஓலையின் வாசகம்!

'அடிகள் முன்னர் யான் அடி வீழ்ந்தேன்;
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்;
குரவர்பணி அன்றியும் குலப்பிறப்பு ஆட்டியோடு
இரவிடைக் கழிதற்கு, என் பிழைப்பு அறியாது;
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்;
பொய்தீர் காட்சிப் புரையோய், போற்றி!'
என்றுஅவள் எழுதிய இசைமொழி உணர்ந்து,
'தன்தீது இலள்' எனத் தளர்ச்சி நீங்கி,
'என்தீது' என்றே எய்தியது உணர்ந்து ஆங்கு—

"அடிகாள்! நும் முன்னர் அடிவீழ்ந்து யான் பணிகின்றேன். இவை தெளிவற்ற சொற்களே! எனினும், நீர் மனமிரங்குதல் வேண்டும். இருமுது குரவர்க்குத் தொண்டு செய்வதையும் மறந்தீரே! உயர்குலத்துப் பிறந்த மனைவியுடன், இரவின் கடைசி யாமத்திலே ஊரைவிட்டே போயினீரே! அதற்கு என் தவறுதான் யாதோ என்றறியாது, என் நெஞ்சம் செயலற்றுப் போகின்றதே! அந்தப் பெருந் துயரையாவது மீளப் புகாருக்கு வருதல் மூலம் போக்குதல் வேண்டும். பொய்ம்மையின்றி உண்மையே கண்டு உணரும் உயர்ந்தோனே! உம்மைப் போற்றுகின்றேன்!"

மாதவி எழுதிய உயர்ந்த சொற்களைக் கோவலன் படித்து அவள் பண்பை உணர்ந்தான். 'தன் தீது ஏதும் இல்லாதவள்' என்று அறிந்தான். அவனது உள்ளத் தளர்ச்சியும் அந்நிலையே நீங்கிற்று. 'எல்லாம் என் தீவினைதான்' என்றான், நிகழ்ந்ததை உணர்ந்தவனாக—

## 9. கோசிகனை அனுப்புதல்

'எற்பயந் தோற்குஇம் மண்உடை முடங்கல்,
பொற்பு உடைத் தாகப், பொருள்உரை பொருந்தியது;
மாசுஇல் குரவர் மலர்அடி தொழுதேன்;
கோசிக மாணி! காட்டு' எனக் கொடுத்து,
'நடுக்கங் களைந்து, அவர் நல்லகம் பொருந்திய
இடுக்கண் களைதற்கு ஈண்டு' எனப் போக்கி—

அதன்பின் தான் மதுரைக்குப் புறப்பட்டதன் குறிக்கோளை நினைவிற் கொண்டவனாக, "என்னைப் பெற்ற

வருக்கும் இந்த மன்ன முத்திரையிட்ட ஓலையின் பொருள், ஒருவாறு என் நிலைமையைத் தெளிவுபடுத்தப் பொருத்தம் உடையதாகும். எவ்வித மனமாசும் அற்ற என் பெற்றோரின் திருவடிகளை யானும் தொழுகின்றேன். கோசிக மாணியே! இதனையே அவர்பாற் கொண்டு காட்டுக" என, அவ்வோலையினை அவன் கையிலே கொடுத்து, "அவர்கள் கொண்ட நடுக்கத்தைப் போக்கி, அவர்களுடைய நல்ல உள்ளத்திலே பொருந்தின துயரையும் நீக்குவதற்கு, நீ விரைந்து செல்வாயாக!" என்றும் கூறி, அவனை மீண்டும் புகாருக்கு வழியனுப்பினான்.

## 10. பாணரோடு ஆடிய கோவலன்

மாசுஇல் கற்பின் மனைவியோடு இருந்த
ஆசுஇல் கொள்கை அறவிபால் அணைந்து, ஆங்கு,
ஆடுஇயல் கொள்கை அந்தரி கோலம்
பாடும் பாணரிற் பாங்குறச் சேர்ந்து,
செந்திறம் புரிந்து செங்கோட்டு யாழில்,
தந்திரி கரத்தொடு திவவுஉறுத்து யாஅத்து,
ஒற்றுஉறுப்பு உடைமையின் பற்றுவழிச் சேர்த்தி
உழைமுதல் கைக்கிளை இறுவாய்க் கட்டி,
வரன்முறை வந்த மூவகைத் தானத்து,
பாய்கலைப் பாவை பாடற் பாணி
ஆசான் திறத்தின் அமைவரக் கேட்டுப்,
பாடற் பாணி அளைஇ, அவரொடு—
'கூடற் காவதம் கூறுமின் நீர்' எனக்—

அதன்பின், மாசில்லாத கற்பினையுடைய தன் மனையாளோடும் இருந்த, குற்றமில்லாத கொள்கையுடைய கவுந்தியடிகளிடம் சென்றான். அவ்விடத்திலே, ஆட்டம் ஆடும் கொள்கையினராகி, அந்தரியின் கோலத்தைப் பாடியாடும் பாணர் கூட்டத்துடன் தானும் சென்று கலந்து, கோவலனும் பாடியாடத் தொடங்கினான்.

செவ்வையாக அமைந்த செங்கோட்டு யாழில், தந்தரிகரம் திவவு என்னும் இரண்டினையும் உறுதிபெறக் கட்டினான். ஒற்று உறு' / இருந்ததனைப் பற்றுவழியிலே சேர்த்தினான். உழை முதலாகவும், கைக்கிளை தாரமாகவும் நரம்புகளை நிறுத்தினான். வரன்முறையாக வருகின்ற

வலிவு மெலிவு சமன் என்னும் மூவகைத் தானத்தாலும், கொற்றவையின் பாடலாகிய பண்ணினை, ஆசான் என்னும் பண்ணின் இயலுள் பொருந்திவர இயக்கி அறிந்து, பாணரோடு கலந்து பாடலைப் பண்ணுடன் இசைத்து மகிழ்ந்தபின், 'மதுரை இங்கிருந்து இன்னும் எத்தனை காதமோ? நீவிர் எனக்குக் கூறுங்கள்'' என்றான்.

## 11. தென்றல் வந்தது காணீர்!

'காழ் அகில், சாந்தம், கமழ்பூங் குங்குமம்,
நாவிக் குழம்பு, நலம்கொள் தேய்வை,
மான்மதச் சாந்தம், மணம்கமழ் தெய்வத்
தேமென் கொழுஞ்சேறு ஆடி; ஆங்குத்,
தாதுசேர் கழுநீர், சண்பகக் கோதையொடு,
மாதவி, மல்லிகை, மனைவளர் முல்லைப்
போதுவிரி தொடையல் பூஅணை பொருந்தி,
அட்டிற் புகையும், அகல் அங்காடி
முட்டாக் கூவியர் மோதகப் புகையும்,
மைந்தரும் மகளிரும் மாடத்து எடுத்த
அந்தீம் புகையும், ஆகுதிப் புகையும்!
பல்வேறு பூம்புகை அளைஇ, வெல்போர்
விளங்குபூண் மார்பிற் பாண்டியன் கோயிலின்
அளந்து உணர்வு—அறியா ஆர்உயிர் பிணிக்கும்
கலவைக் கூட்டம் காண்வரத் தோன்றிப்;
புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பின்
பொதியில் தென்றல் போலாது, ஈங்கு,
மதுரைத் தென்றல் வந்தது காணீர்!
நனிசேய்த்து அன்று அவன் திருமலி மூதூர்,
தனிநீர் கழியினும் தகைக்குநர் இல்' என—

''வயிரம் பாய்ந்த அகில், சந்தனம், மணங்கமழும் குங்குமப்பூ, புழுகுக்குழம்பு ஆகியவற்றால் செய்த நன்மை பெருகச்செய்யும் சாந்தினையும், கத்தூரிச் சாந்தினையும் கலந்த, மணம்கமழும் தெய்வத்தன்மை பொருந்திய, இனிய மென்மையான கொழுஞ்சேற்றிலே நீராடி; மகரந்தம் பொருந்திய கழுநீர் சண்பகம் ஆகியவற்றால் தொடுத்த மாலையோடு; மாதவி, மல்லிகை, மனையிலே வளரும்

முல்லை மலர் ஆகியவற்றின் விரித்த மலர்களைத் தொடையல்போற் பரப்பிய மலரணைக்கண் பொருந்தி; சமையலறைகளிலிருந்து வரும் தாளிதப்புகையும், அகன்ற கடைவீதிகளிலே ஓயாது வாணிகம் புரிவோர் அப்பம் மோதகம் ஆகியவற்றைச் சுடும் புகையும், ஆடவரும் மகளிரும் தாம் உடனுறை இல்லின் மேன்மாடத்திலே உண்டாக்கிய அகிற்புகையும், ஆகுதிப்புகையும்—ஆகிய பல வேறுபட்ட மென்புகைகளிலும் அளாவி; வெற்றிப் போருடையவனாகப் பூணாரம் பூண்ட மார்புடன் விளங்கும் பாண்டியனின் அரண்மனையிலே, அளந்து உணர்வதற்கும் அறியாத அளவிலும், ஆருயிரை அதன்பால் பிணிக்கும் இயல்புடையதாகவும் விளங்கும், நறுமணக் கலவைகளின் தொகுதிகளைப் பிறரும் காணுமாறு தாங்கி வெளிப்பட்டு; புலவர் தம் செவ்விய நாவால் போற்றப்பட்ட சிறப்பினையுடைய பொதியில் தென்றல் போலிராத, மதுரைத் தென்றல் இங்கு வந்து வீசுகின்றதனைக் காணுங்கள். அதனால், பாண்டியனது செல்வம் மலிந்த மூதூர் மிக்க தொலைவிலே உள்ளதன்று; தனியாக நீவிர் சென்றாலும், இடையே தடுப்பவர் எவருமிலர்!" என்று பாணர் உரைத்தனர்.

## 12. முரசுகள் அதிர்ந்தன!

முன்னாள் முறைமையின், இருந்தவ முதல்வியொடு
பின்னையும் அல்லிடைப் பெயர்ந்தனர்-பெயர்ந்து, ஆங்கு,
அருந்தெறல் கடவுள் அகன்பெருங் கோயிலும்,
பெரும்பெயர் மன்னவன் பேர்இசைக் கோயிலும்
பால்கெழு சிறப்பின் பல்இயம் சிறந்த
காலை முரசக் கனைகுரல் ஓதையும்;
நான்மறை அந்தணர் நவின்ற ஓதையும்;
மாதவர் ஓதி மலிந்த ஓதையும்;
மீளா வென்றி வேந்தன் சிறப்பொடு
வாளோர் எடுத்த நாள்அணி முழவமும்;
போரிற் கொண்ட பொருகரி முழக்கமும்;
வாரிக் கொண்ட வயக்கரி முழக்கமும்;
பணைநிலைப் புரவி ஆலும் ஓதையும்;
கிணைநிலைப் பொருநர் வைகறைப் பாணியும்;
கார்க்கடல் ஒலியின், கலிகெழு கூடல்,
ஆர்ப்புஒலி எதிர்கொள, ஆரஞர் நீங்கிக்—

முந்தைய நாட்களின் முறைமைப்படியே பகலிலே அவ்விடத்துத் தங்கியிருந்துவிட்டுப், பெருந்தவ முதல்வியுடன், கோவலன் கண்ணகியர் இருவரும், இரவு நேரத்திலே மீண்டும் வழிநடந்தனர். பொழுதும் விடிந்து கொண்டிருந்தது. அரிய அழித்தல் தொழிற் கடவுளான சங்கரனின் அகன்ற பெருங் கோயிலும், பெரும்புகழ்பெற்ற மன்னனின் மிக்க புகழமைந்த கோயிலும், பகுதிப்பட்ட சிறப்பினையுடையவளான பலவகை வாத்திய ஒலிகளாற் சிறப்புற்றன. அவ் வேளையிலே, இடையிடையே காலைமுரசம் பெரிதான குரலுடன் முழங்கும் ஓசையும், நான்மறை அந்தணர் வேதமோதும் ஓசையும், மாதவர்கள் பலர் திருநாமங்களை ஓதுதலான் நிறைகின்ற ஓசையும் எழுந்தன. மீளாத வெற்றிவேந்தனின் சிறப்போடு, வாள்வீரர் முழங்கிய நாளணியின் முழவமும் (வீரர்கள் காலையில் அணியாக ஒருங்குகூடி மன்னனை வாழ்த்தி முரசு முழங்கி நிற்பது இது.) போரிலே கைப்பற்றி வந்த பிறநாட்டு யானைகள் பிளிறுகின்ற பேரொலியும், காட்டிற் பிடித்துக் கொணர்ந்த வலிய காட்டு யானைகளின் முழக்கமும், பந்திகளிலே நிற்கும் குதிரைகளின் கனைப்பு ஒலியும், கிணைப் பறையையுடைய மள்ளர் வைகறைக்கண் இசைத்துப் பாடும் பாட்டின் ஒலியும், கருங்கடல் ஒலிபோல மகிழ்ச்சிமிக்க மதுரையினின்றும் எழுகின்ற பிற ஆரவாரங்களின் ஒலியும், தம்மை எதிர்கொண்டு வரவேற்பதுபோலத் தம் காதுகளிலே வந்துபடத், தாம் கொண்ட துயரமெல்லாம் அந் நிலையே தீர்ந்துபோயினவர் போலாயினர்—அவர்கள்.

## 13. வையை வனப்பு!

குரவமும், வகுளமும், கோங்கமும், வேங்கையும்,
மரவமும், நாகமும், திலகமும், மருதமும்,
சேடலும், செருந்தியும், செண்பக ஓங்கலும்,
பாடலம் தன்னொடு பன்மலர் விரிந்து;
குருகும், தளவமும், கொழுங்கொடி முசுண்டையும்,
விரிமலர் அதிரலும், வெண்கூ தாளமும்,
குடசமும், வெதிரமும், கொழுங்கொடிப் பகன்றையும்
பிடவமும், மயிலையும், பிணங்குஅரில் மணந்த
கொடுங்கரை மேகலைக் கோவை யாங்கணும்
மிடைந்து, சூழ் போகிய அகன்று ஏந்து அல்குல்,

வாலுகம் குவைஇய மலர்ப்பூந் துருத்தி,
பாலபுடைக் கொண்டு, பன்மலர் ஓங்கி,
எதிர்எதிர் விளங்கிய கதிர்இள வனமுலை;
கரைநின்று உதிர்த்த கவிர்இதழ்ச் செவ்வாய்;
அருவி முல்லை அணிநகை யாட்டி
விலங்கு நிமிர்ந்து ஒழுகிய கருங்கயல் நெடுங்கண்
விரைமலர் நீங்கா அவிர் அறல் கூந்தல்
உலகு புரந்து ஊட்டும் உயர்பேர் ஒழுக்கத்துப்
புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி—
வையை என்ற பொய்யாக் குலக்கொடி—
தையற்கு உறுவது தான்அறிந் தனள்போல்
புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக்
கண்நிறை நெடுநீர் கரந்தனள், அடக்கிப்—

குரவமும், மகிழமும், கோங்கமும், வேங்கையும், வெண் கடம்பும், சுரபுன்னையும், மஞ்சாடியும், மருதமும், சேடலும், செருந்தியும், செண்பகமும், பாதிரியும் ஆகிய பலவகைக் கோட்டுப் பூக்களும் இதழ் விரிந்தன. குருக்கத்தியும், செம்முல்லையும், வளவிய கொடியினையுடைய முசுண்டையும், விரிந்த பூக்களை உடைய அதிரலும், வெள்ளைக் கூதாளமும், வெட்பாலையும், மூங்கிலும், கொழுவிய கொடியாகப் படர்கின்ற பகன்றையும், பிடவமும், மயிலையும் ஆகிய பூக்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை போலக் கலந்து தோன்றின. ஆற்றின் உயர்ந்த கரையானது, மலர்க் கோவையான மேகலையைச் சுற்றிலும் புனைந்த மகளிரின் அல்குல் தடம் போன்று, இம் மலர்கள் கொண்ட மரச்செறிவால் அழகுறக் காட்சி யளித்தது.

அடிப்பக்கம் அகன்று, மேற்புறம் குவிந்த, மலர் செறிந்த அழகிய ஆற்றிடைக் குறைகள், பக்கங்கள் புடைத்தெழுந்து, பன்மலர் சூடி, ஒன்றற்கொன்று ஒத்து உயர்ந்து விளங்கிய, ஒளியுடைய வனமுலைகளைப் போல எழிலோடு விளங்கின.

கரையினிடத்தே நின்ற முருக்கமரங்கள் உதிர்த்த சிவந்த இதழ்கள், செவ்விதழ்கள் போலத் தோன்றின. அருவியோடு வந்த முல்லை மலர்கள் அழகிய பல்வரிசை போன்று விளங்கின. குறுக்கும் நெடுக்குமாக ஓடிக்கொண்டிருந்த கயல்மீன்கள் நெடுங்கண்கள் போலத் தோன்றின. மணமலர்

நீங்காத வரியுடைய கருமணல், கூந்தல் போல விளங்கிற்று. உலகினைக் காத்து உணவுதரும் உயர்ந்த பெரிய கொள்கையினை உடையவள், புலவர் நாவிலே பொருந்தியிருக்கும் பூங்கொடியாள், 'வையை' என்று சொல்லப்படுகின்ற வளம் போய்யாத பாண்டியர் குலக்கொடி யாவாள். இவ்வாறு தோன்றினாள் அவள். கண்ணகிக்கு மேல்வரும் துயரினைத் தான் முன்னரே அறிந்தவளைப் போலப், புண்ணிய நறுமலர் ஆடைகளால் தன் மேனிமுழுவதும் போர்த்துத், தன் கண் நிறைந்த மிகுந்த கண்ணீர் வெள்ளத்தையும் உள்ளடக்கிக் கொண்டு, அவள் அமைதியாகவும் விளங்கினாள்.

## 14. மரப்புணை ஏறினர்

'புனல்யாறு அன்று; இது பூம்புனல் யாறு!' என,
அனநடை மாதரும் ஐயனும் தொழுது'
பரிமுக அம்பியும், கரிமுக அம்பியும்,
அரிமுக அம்பியும், அருந்துறை இயக்கும்
பெருந்துறை மருங்கின் பெயராது; ஆங்கண்
மாதவத் தாட்டியொடு மரப்புணை போகித்,
தேமலர் நறும்பொழில் தென்கரை எய்தி—

'புனல் யாறு அன்று; இது பூம்புனல் யாறு' என்று வியந்தபடி, அன்ன நடை மாதான கண்ணகியும், அவள் கணவனும் அதனைத் தொழுதனர்.

குதிரைமுக ஓடம், யானைமுக ஓடம், சிங்கமுக ஓடம் ஆகியவற்றிலேறிப் பெருந்துறையின் வழியாக மதுரை நகரினுள் அவர்கள் செல்லவில்லை. மாதவத் தாட்டியான கவுந்தியுடன் மரப்புணை ஏறி, இனிய மலர்செறிந்த நறும் பொழிலின் தென்கரையினைச் சென்று அவர்கள் சேர்ந்தனர்.

## 15. வாராதீர் என்ற நெடுங்கொடி!

'வானவர் உறையும் மதுரை வலம்கொளத்
தான்நனி பெரிதும் தகவுஉடைத்து' என்று ஆங்கு
அருமிளை உடுத்த அகழிசூழ் போகிக்;
கருநெடுங் குவளையும், ஆம்பலும், கமலமும்,
தையலும் கணவனும் தனித்துஉறு துயரம்
ஐயம் இன்றி அறிந்தன போலப்,

பண்ணீர் வண்டு பரிந்து இனைந்து ஏங்கிக்,
கண்ணீர் கொண்டு கால்உற நடுங்கப்;
போர்உழந்து எடுத்த ஆர்எயில் நெடுங்கொடி,
'வாரல்' என்பன போல், மறித்துக் கை காட்டப்

'மேலோர் வாழும் மதுரை நகரினை முதலிற் சுற்றி வலம் வந்தால், மிகவும் பெரிதான நன்மைகள் உண்டாகும்' என்று, அவ்விடத்தே, அழித்தற்கரிய காவற்காடு சூழ்ந்த அகழியைச் சுற்றிப் போயினர். கரிய நெடிய குவளை மலரும், ஆம்பலும், கமலமும், கண்ணகியும் கோவலனும் இவ்வாறு தனித்து வந்து உறப்போகின்ற துயரத்தினை ஐயமின்றி முன்னதாகவே அறிந்தனபோல, வண்டினம் ஒலிசெய்யத் தாமும் கண்ணீர் நிறைந்து தாள்கள் நடுங்கச் சோர்ந்தன. பகைவரைப் போரிலே வென்று வெற்றிக் கொடியாக உயர்த்துப் பறக்கின்ற, மதுரைப் பேரூரின் நெடுங்கொடியானது, 'நீவிர் இவ்வூருக்குள்ளே வாராதீர்' என்பதுபோல, மறித்துக் கைகாட்டியபடியே பறந்து கொண்டிருந்தது.

## 16. புறஞ்சிறை மூதூர் புக்கனர்

புள்ளணி கழனியும் பொழிலும் பொருந்தி,
வெள்ளநீர்ப் பண்ணையும், விரிநீர் ஏரியும்,
காய்க்குலைத் தெங்கும், வாழையும், கமுகும்,
வேய்த்திரள் பந்தரும் விளங்கிய இருக்கை;
அறம்புரி மாந்தர் அன்றிச் சேராப்
புறஞ்சிறை மூதூர் புக்கனர் புரிந்து-என்.

பறவையினம் நிரைகொண்டிருக்கும் வயல்களும் பொழில்களும் பொருந்தியதாக, வெள்ளம்போல நீர்மிகுந்த பண்ணையும், பரந்த நீரினை உடைய ஏரிகளும், குலையாகத் தொங்கும் காய்களை உடைய தென்னையும், வாழையும், கமுகும், திரண்ட மூங்கிலால் அமைக்கப்பட்ட பந்தரும் கொண்டு விளங்கியதான இருப்பிடத்தினையுடைய, அறம் புரியும் மாந்தர் அன்றிப் பிறர் யாரும் சென்று தங்காத புறஞ்சிறை மூதூரினை நோக்கி, அவர்கள் மூவரும் விரும்பிச் சென்றனர். [கவுந்தியடிகள் செல்லக் கோவலன் கண்ணகியும் தொடர்ந்து சென்றனர் என்க.]

# 15

## அடைக்கலக் காதை

[நிலைமண்டில ஆசிரியப்பா]

[புறஞ்சேரிக்குத் திரும்பிய கோவலன், மதுரையிலே கண்டவெல்லாம் கவுந்தியிடம் வியப்போடு எடுத்துக் கூறினான், 'தொன்னகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்கு என்னிலை உணர்த்தி' என்று சொல்லி மதுரை சென்றவன், அதுபற்றி ஏதுங் கூறவில்லை. கவுந்தியம்மை கவலையடைகின்றார். அவ்வேளை, 'மாடலன்' அங்கே வருகின்றான். கோவலனின் சிறப்புக்களைக் கூறுகின்றான். துறந்தோருக்குரிய அவ்விடத்தை விட்டுப், பொழுது மறைவதற்குள் மதுரைநகருட் செல்லுமாறு மாடலனும் கவுந்தியும் கோவலனைத் தூண்டுகின்றனர். அவன் செயலற்று இருக்கவே, அவ்வழியாக வந்த மாதரியிடம் கண்ணகியை அடைக்கலமாக அளிக்கின்றார் கவுந்தியடிகள். அவளும், கண்ணகியுடன் கோவலனும் பின்வரத் தன்வீட்டிற்கு அவர்களை அன்போடு அழைத்துப் போகின்றாள்.]

### 1. தீதுதீர் மதுரை!

நிலந்தரு திருவின் நிழல்வாய் நேமி
கடம்பூண்டு உருட்டும் கௌரியர் பெருஞ்சீர்க்
கோலின் செம்மையும் குடையின் தண்மையும்,
வேலின் கொற்றமும் விளங்கிய கொள்கைப்
(பதிஎழு அறியாப் பண்புமேம் பட்ட)
மதுரை மூதூர் மாநகர் கண்டு ஆங்கு
அறந்தரு நெஞ்சின் அறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பொழிலிடம் புகுந்து,
தீதுதீர் மதுரையும் தென்னவன் கொற்றமும்
மாதவத்து ஆட்டிக்குக் கோவலன் கூறுழித்—

நிலம் வளங்கொழித்துத் தருகின்ற செல்வத்துடன், மக்கட்கு வாய்த்த நிழல்போல முறையாக ஆட்சி செலுத்தும் கடமையைப் பூண்டு, வழுவாது நடத்தி வந்தவர் பாண்டியர். அவர்களுடைய பெருஞ்சிறப்புடைய ஆட்சியின் செம்மையும், குடையினது தண்மையும், வேலினது வென்றிச்சிறப்பும் உலகெங்கும் விளக்கம்பெற்ற கொள்கை

யினையுடையன. அவர்கள் கோநகராகிய மதுரை மூதூர், ஊரைவிட்டுச் செல்லவேண்டுமென்று மக்கள் என்றும் எண்ணியறியாத, வளத்தினாலாய பண்பு மேம்பட்டு விளங்குவது ஆகும். அம் மாநகரினைக் கண்டபின், அறந்தரு நெஞ்சினரான அறவோர்கள் நிறைந்த, புறஞ்சிறை மூதூரின் பொழிலுக்கு மீண்டு வந்து சேர்ந்தான் கோவலன். தீமையே அற்றுப்போன மதுரையும், அங்கே விளங்கிய தென்னவவின் கொற்றமும் பற்றிக், கவுந்தியடிகளுக்குக் கோவலன் கூறிக் கொண்டுமிருந்தான்.

## 2. மாடலன் உரைப்பான்

தாழ்நீர் வேலித் தலைச்செங் கானத்து,
நான்மறை முற்றிய நலம்புரி கொள்கை
மாமறை முதல்வன் மாடலன் என்போன்
மாதவ முனிவன் மலைவலங் கொண்டு,
குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து,

தமர்முதற் பெயர்வோன், தாழ்பொழில் ஆங்கண்
வருந்துசெல் வருத்தத்து வான்துயர் நீங்கக்,
கவுந்தி இடவயிற் புகுந்தோன்—தன்னைக்
கோவலன் சென்று சேவடி வணங்க,
நாவல் அந்தணன் தான்நவின்று, உரைப்போன்—

அவ்வேளையிலே, தாழ்ந்த நீரினை வேலியாகவுடைய தலைச்செங்கானம் என்னும் ஊரினைச் சேர்ந்தவனும், நான் மறைகளை முழுவதும் நன்றாக உணர்ந்தவனும், நலம் புரிகின்ற கொள்கையாளனுமாகிய மாமறை முதல்வனான மாடலன் என்பவனும் அங்கே வந்தான். அவன் மாதவ முனிவனான அகத்தியனின் பொதிய மலைக்குச் சென்று வணங்கிவிட்டுக், குமரிப் பெருந்துறையிலே முறையாக நீராடியபின், தன் சுற்றத்தாரிருக்கும் இடத்திற்குத் திரும்பி வந்துகொண்டிருந்தான். வழிநடந்த வருத்தமாகிய தன் பெருந்துன்பம் நீங்க, அப்பொழிலினுள் கவுந்தியடிகளிருந்த பள்ளியிடத்திற்கு அவன் வந்து சேர்ந்தான். கோவலன், அவன்பாற் சென்று, அவன் திருவடிகளை வணங்கினான். பேச்சிலே வல்லவனாகிய அந்த அந்தணன், தன்னைப் பற்றிச் சொல்லிவிட்டு, மீண்டும் உரைப்பானாயினான்—

## 3. மணிமேகலைக்குப் பெயரிடல்

'வேந்துறு சிறப்பின் விழுச்சீர் எய்திய,
மாந்தளிர் மேனி மாதவி மடந்தை
பால்வாய்க் குழவி பயந்தனள் எடுத்து,
வாலா மைநாள் நீங்கிய பின்னர்,
மாமுது கணிகையர், "மாதவி மகட்கு
நாம நல்லுரை நாட்டுதும்" என்று
தாம் இன்புறூஉம் தகைமொழி கேட்டு, ஆங்கு
"இடைஇருள் யாமத்து எறிதிரைப் பெருங்கடல்
உடைகலப் பட்ட எம்கோன் முன்நாள்
புண்ணிய தானம் புரிந்தோன் ஆகலின்,
நண்ணுவழி இன்றி, நாள்சில நீந்த,
"இந்திரன் ஏவலின் ஈங்கு வாழ்வேன்;
வந்தேன்; அஞ்சல், மணிமே கலையான்;
உன்பெருந் தானத்து உறுதி ஒழியாது;
துன்பம் நீங்கித் துயர்க்கடல் ஒழிக" என,
"விஞ்சையின் பெயர்த்து; விழுமம் தீர்த்த
எங்குல தெய்வப் பெயர்ஈங்கு இடுக" என;
(அணிமே கலையார் ஆயிரங் கணிகையர்,)
"மணிமே கலை" என வாழ்த்திய ஞான்று,
மங்கல மடந்தை மாதவி தன்னொடு
செம்பொன் மாரி செங்கையிற் பொழிய;—

அரசன் அளித்த சிறப்பினாலே மிகுந்த புகழ்பெற்ற, மாந்தளிர் போன்ற மேனியினளான மாதவி மடந்தை யானவள், பச்சிளங் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தனள். வாலாமைநாள் கழிந்த பின்னர், வயது முதிர்ந்த கணிகை யர்கள், 'மாதவியின் மகளுக்கு நல்ல பெயராக ஒன்றினை இடுவோம்' என்றனர். நீயும், இன்புறுவதான அத் தகுதி யமைந்த பேச்சினைக் கேட்டாய்.

"இரவின் இருள்செறிந்த நடுயாமத்திலே, அலைமோதும் பெருங்கடலினிடையிலே, எம் முன்னோன் மரக்கலம் உடையப் பெற்றனன். புண்ணியத் தானம் பலவும் முற்பிறவி யிலே அவன் செய்தவன்; அதனால் கரைசேர வழியில்லாது

போயினும், சிலநாள் நீந்திக்கொண்டே இருந்தான். அப்பொழுது, 'இந்திரனுடைய ஏவலினாலே இப்பக்கமாக வாழ்வேன்; வந்தேன்; நீ அஞ்சேல்! யான் மணிமேகலை!' என்று உரைத்தபடியே ஒரு தெய்வம் வந்து தோன்றியது. 'உன் பெருந்தானங்களின் பயன் நீங்காது; துன்பத்தினின்றும் இப்போதே நீங்கி இத் துயரக்கடலினின்றும் மீள்வாயாக!' என்றும் சொல்லிற்று. வான்வழியாக அவனை எடுத்துக் கொண்டுபோய்க் கரைசேர்த்து, அவன் கடலிடைச் சிக்கிப் பலநாட்பட்ட துயரையும் தீர்த்தது. அதுவே எம் குலதெய்வம்! அதன் பெயரையே இங்கு நீர் எம் மகளுக்கும் இடுக!' என்றனை.

மேகலை அணிந்த ஆயிரங் கணிகையர் கூடி நின்று, 'மணிமேகலை' என அத் தெய்வத்தின் பெயரையிட்டு, நின் மகளையும் அழைத்து வாழ்த்தினர். அந் நாளில், மங்கல மடந்தையான மாதவியுடன், நீயும், நும் செங்கையினால் செம்பொன்னை மழைபோலப் பொழிந்தீர்கள்!

## 4. கருணை மறவ!

ஞான நன்னெறி நல்வரம்பு ஆயோன்
தானம் கொள்ளுந் தகைமையின் வருவோன்,
தளர்ந்த நடையின் தண்டுகால் ஊன்றி,
வளைந்த யாக்கை மறையோன் தன்னைப்
பாகுகழிந்து யாங்கணும் பறைபட வருஉம்
வேக யானை வெம்மையிற் கைக்கொள்ள;
ஒய்எனத் தெழித்து ஆங்கு, உயர்பிறப் பாளனைக்
கையகத்து ஒழித்து, அதன் கையகம் புக்குப்
பொய்பொரு முடங்குகை வெண்கோட்டு அடக்கி,
மைஇருங் குன்றின் விஞ்சையன் ஏய்ப்பப்
பிடர்த்தலை இருந்து, பெருஞ்சினம் பிறழாக்
கடக்களிறு அடக்கிய கருணை மறவ!—

ஞான மார்க்கத்திற்கே நல்ல எல்லைபோன்று விளங்கிய ஒருவன், தானம் கொள்ளும் எண்ணத்தால், தளர்ந்த நடையுடன், தண்டினை ஊன்றியவனாக வந்தான். கூன்விழுந்த அந்த முதுமறையோனைப், பாகர்க்கும் அடங்காது எவ்விடத்தும் எச்சரிப்பாகப் பறைமுழங்க வந்த யானை, சினத்துடன் தன் துதிக்கையிலே பற்றியது. விரைந்து 'ஒய்' என்று கூவி,

அந்த யானையின் செயலைத் தடுத்து, அந்த மறையவனை அதன் கையினின்றும் விடுவிடுத்தாய். யானையின் கையினிடத்துப் புகுந்து, போர்செய்யும் வளைந்த அதன் புரை பொருந்திய மருப்புக்களிலே மிதித்துக், கரிய பெருங்குன்றின் மேலிருக்கும் விஞ்சையனும் நிகராகாவண்ணம் அதன் பிடரிடத்திலே ஏறியமர்ந்து, பெருஞ் சினம் நீங்காத மதங் கொண்ட அவ் யானையின் செருக்கினையும் அடக்கினாய். அத்தகைய கருணையினையுடைய வீரமறவனே! (கருணையும் மறமாண்பும் இணைந்து விளங்கியவன் கோவலன் என்பதைக் காட்டுவது இது.)

## 5. செல்லாச் செல்வ!

பிள்ளை நகுலம் பெரும்பிறிது ஆக,
எள்ளிய மனையோள் இனைந்துபின் செல்ல,
வடதிசைப் பெயரும் மாமறை யாளன்,
"கடவது அன்றுநின் கைத்தூண் வாழ்க்கை,
வடமொழி வாசகம் செய்த நல்லேடு
கடனறி மாந்தர் கைந்நீ கொடுக்க" எனப்,
பீடிகைத் தெருவிற் பெருங்குடி வாணிகர்
மாட மறுகின் மனைதொறும் மறுகிக்;
"கருமக் கழிபலம் கொள்மி னோ" எனும்
அருமறை யாட்டியை அணுகக் கூஉய்,
"யாதுநீ உற்ற இடர்? ஈது என்?" என,
மாதுதான் உற்ற வான்துயர் செப்பி,
"இப்பொருள் எழுதிய இதழிது வாங்கிக்,
கைப்பொருள் தந்து என் கடுந்துயர் களைக" என,
"அஞ்சல்! உன்தன் அருந்துயர் களைகேன்;
நெஞ்சுஉறு துயரம் நீங்குக," என்று, ஆங்கு,
ஓத்துடை அந்தணர் உரை-நூல் கிடக்கையில்
(தீத்திறம் புரிந்தோள் செய்துயர் நீங்கத்,
தானஞ் செய்து,) அவள் தன்துயர் நீக்கிக்,
கானம் போன கணவனைக் கூட்டி,
(ஒல்காச் செல்வத்து உறுபொருள் கொடுத்து,
நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ;—)

செயலினாலே, இரிப்
தன் மனையாளின் அறியாமைச்
பிள்ளை இறந்த துயரம் பெரியதாக, அதனால், அவனாற்
கைவிடப்பட்ட மனைவியானவள் வருந்திப் பின்வர,
வடதிசை நோக்கிப் புறப்பட்ட பார்ப்பனன், 'நின் கையால்
உணவுண்டு வாழும் வாழ்வு இனி முறையற்றது!' என்று
கூறி, 'வடமொழி வாசகம் எழுதிய இந்த ஏட்டினைக் கடமை
யறிந்த மாந்தர் கையிலே நீ கொடுப்பாயாக' என்று தந்து
விட்டுப் போயினன். பீடிகைத் தெருவினும், பெருங்குடி
வணிகர் வாழும் மாடவீதிகளிலும், வீடுதோறும் சென்று
அலைந்து,' என் பாவத்தினைப் போக்கும் புண்ணியத்தினைக்
கொள்ளுங்கள்' என்று அப் பார்ப்பனி கதறினாள். உன்பால்
வருமாறு அவளைக் கூவி, 'யாது நீ உற்ற இடர்? இஃது
என்ன?' என்று வினவினாய். அவள், தானடைந்த பெருந்
துயரினைச் சொன்னாள். 'இந்த ஏட்டினை வாங்கி இதன்
பொருளைக் கண்டு, கைப்பொருள் தந்து, என் கடுந்
துயரினைக் களைந்தருள்க' என்றாள். 'அஞ்சாதே! உன்
கடுந்துயரினைப் போக்குவேன். நின் நெஞ்சிலுற்ற துயரம்
நீங்குவாயாக' எனக் கூறி, அவ்விடத்தே, வேதமோதும்
மறையவர் சொல்லிய நெறிமுறையானே, கொலைத்
தொழில் செய்தவளின் பாவம் நீங்குமாறு தானதருமங்கள்
பலவும் செய்து, அவள் மனத்துன்பத்தினையும் போக்கினாய்.
கானம் நோக்கிப் போன அவள் கணவனையும் தேடிப்
பிடித்துக் கூட்டி வைத்தாய். தளராத செல்வத்துடன்
கைப்பொருளும் தந்து, அவர்களை நல்வழியில் ஈடுபடுத்திய,
தொலையாத செல்வம் உடையவனே!

## 6. இல்லோர் செம்மல் !

பத்தினி ஒருத்தி படிற்றுரை எய்த,
மற்றவள் கணவற்கு வறியோன் ஒருவன்
அறியாக் கரிபொய்த்து, அறைந்துணும் பூதத்துக்
கறைகெழு பாசத்துக் கையகப் படலும்,
பட்டோன் தவ்வை படுதுயர் கண்டு,
கட்டிய பாசத்துக் கடிது சென்று எய்தி,
"என்னுயிர் கொண்டு, ஈங்கு இவன்உயிர் தா" என
நன்னெடும் பூதம் நல்கா தாகி,
"நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு,
பரகதி இழக்கும் பண்பு ஈங்கு இல்லை;

ஒழிக நின் கருத்து'' என, உயிர்முன் புடைப்ப,
அழிதரும் உள்ளத்து அவளொடும் போந்து, அவன்
(சுற்றத் தோர்க்கும் தொடர்புறு கிளைகட்கும்
பற்றிய கிளைஞரின் பசிப்பிணி அறுத்துப்;
பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்!—) 90

பத்தினி ஒருத்தியின் கணவன்பாற் சென்று, அவன் மனைவி பழிச்சொற்களை அடையுமாறு பொய்ம்மை கூறினான் ஒருவன். பொய்க்கரி சொல்வோரைத் தன் கறைகெழு பாசத்தாற் பற்றிப் படைத்து உண்ணும் பூதம், அவனையும் தன் பாசத்தாற் பற்றியது. அங்ஙனம் பூதத்திடம் சிக்கியவனைப் பெற்ற தாயானவள், அதுகண்டு மிகுதுயர் கொண்டாள். அவள் படும் வேதனையைக் கண்டு மனமிரங்கி, அவனைக் கட்டிய பாசத்தினுள் நீ விரைந்து சென்று புகுந்தாய். 'என் உயிரை ஏற்றுக்கொண்டு இவன் உயிரைத் தா' என்று, அப் பூதத்தினிடமும் கேட்டாய். அந்த நல்ல நெடும் பூதம், நீ கேட்டதுபோலத் தந்துவிடவில்லை. 'கீழ்மகனுடைய உயிருக்குப் பதிலாக நல்ல உயிரினை ஏற்றுக்கொண்டு, மேலான தன்மையை இழந்துவிடும் பண்பு இங்கே கிடையாது. நின் எண்ணத்தை விட்டுவிடுக' என்று கூறி, அவனை உங்கள் இருவர் முன்பாகவே அறைந்து கொன்றது. செயலிழந்த உள்ளம் உடையவளான அவன் தாயோடுஞ் சென்று, அவனுடைய சுற்றத்தார்க்கும், அவன் மனைவி முதலியோருக்கும், சொந்த உறவினனைப் போலப் பொருளுதவி செய்து, அவர்தம் பசித் துன்பத்தினைப் போக்கிப் பல ஆண்டுகள் காத்த, வறுமையாளரின் செம்மலே!

## 7. உம்மைப் பயன்கொல்?

இம்மைச் செய்தன யானறி நல்வினை;
உம்மைப் பயன்கொல், ஒருதனி உழந்து, இத்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது,
விருத்தகோபால! நீ'' என வினவக்—

"அறிவால் முதிர்ந்த கோவலனே! இப்பிறப்பிலே நீ செய்தனவாக நான் அறிந்தனவெல்லாம் நல்வினைகளே! முன்வினைப் பயன்போலும், தனியாக இங்கே வந்து துன்புற்று, இத் திருவினைப்போலும் மாணிக்கக் கொழுந்தான நின் மனைவியுடனும் வந்தது!" என, மாடலன் கோவலனை நோக்கி, மிகவும் மனவருத்தத்துடனே வினவினான்

## 8. கனவும் செலவும் !

கோவலன் கூறும்: "ஓர் குறுமகன்-தன்னால்
காவல் வேந்தன் கடிநகர்-தன்னில்,
நாறுஐங் கூந்தல நடுங்குதுயர் எய்த
கூறைகோள் பட்டுக் கோட்டுமா ஊரவும்,
அணித்தகு புரிகுழல் ஆய்-இழை தன்னொடும்
பிணிப்புஅறுத் தோர்-தம் பெற்றி எய்தவும்;
மாமலர் வாளி வறுநிலத்து எறிந்து,
காமக் கடவுள் கையற்று ஏங்க,
அணிதிகழ் போதி அறவோன்-தன்முன்,
மணிமே கலையை மாதவி அளிப்பவும்,
நனவுபோல நள்ளிருள் யாமத்துக்
கனவு கண்டேன்; கடிதீங்கு உறும்' என—

கோவலன் சொல்வான் : "காவல் வேந்தனின் பெரு நகரிலே ஒரு கீழ்மகனால், மணம்நாறும் ஐங்கூந்தலை உடையவளான இவள் நடுநடுங்கித் துயர் எய்தவும், யான் உடுத்த ஆடையும் பிறரால் கொள்ளப்பட்டுவிட, எருமைக் கடாவின்மீது ஊர்ந்து செல்லவும் கண்டேன். அதன்பின், அழகுமிகுந்த சுடைசுருண்ட கூந்தலினையுடைய என் ஆயிழையாளோடும், பிறவிப்பிணியை அறுத்தோர் பெறும் நிலையினை யான் எய்தினேன். தன் மலரம்புகளை வறண்ட நிலத்திலே எறிந்துவிட்டுக், காமக்கடவுள் செயலற்று ஏங்கி யழுமாறு, அணிதிகழும் போதி அறவோனின் முன்னிலை யிலே, மணிமேகலையை மாதவி ஆடைக்கலமாகக் கொடுத் தனள். நனவிலே நடப்பதுபோல, நள்ளிருள் சூழ்ந்த யாமத்திலே இப்படி நிகழ்ந்த ஒரு கனவைக் கண்டேன். அதனால், புகாரினை விட்டுவிட்டு இங்கே விரைந்துவந்து சேர்ந்தேன்" என்றான். (இதனால், புகாரில் துன்பம் நேரும் எனப் பயந்தே 'கோவலன் மதுரைக்கு உடனே புறப் பட்டான் எனலாம். மாதவியோடு ஊடியது முதலாயின இப்பயத்தின் விளைவாகத் திட்டமிட்ட செயல் என்பதும் காணப்படும்.)

## 9. ஆறுதல் உரைத்தனர்

'அறத்துஉறை மாக்கட்கு அல்லது, இந்தப்
புறச்சிறை இருக்கை பொருந்தாது; ஆகலின்,
அரைசர் பின்னோர் அகநகர் மருங்கின் நின்

உரையிற் கொள்வர்; இங்கு ஒழிகநின் இருப்பு;
காதலி-தன்னொடு கதிர்செல் வதன்முன்,
மாட மதுரை மாநகர் புகுக' என,
மாதவத்து ஆட்டியும் மாமறை முதல்வனும்
கோவலன் தனக்குக் கூறுங் காலை—

"அறத்துறையிலே ஈடுபட்டு வாழ்கின்றவர்களுக்கு அல்லாது, நின்போன்ற இல்லறவாழ்வு உடையவர்க்கு, இப் புறச்சிறை இருக்கை பொருந்தாது. மதுரையின் அகநகரி லுள்ள அரசர் பின்னோரான பெருவாணிகர்கள், நீ ஒரு சொற் கூறினாலே, நின்னைத் தம்பால் ஏற்றுக்கொள்வர். ஆதலால், இவ்விடத்தில் இருப்பதை விட்டுவிடுவாயாக. நின் காதலியோடு, ஞாயிறு மறைவதற்கு முன்னர், மாட மதுரைப் பேரூரினுள்ளே செல்வாயாக" என்று, கவுந்தியடி களும் மாடல மறையோனும், அப்போது, கோவலனுக்குக் கூறினர்.

## 10. மாதரி அடிதொழல்

அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கிக்குப்
பால்மடை கொடுத்துப் பண்பின் பெயர்வோள்,
ஆயர் முதுமகள், மாதரி என்போள்,
காவுந்தி ஐயையைக் கண்டு, அடி தொழலும்—

அவ் வேளையிலே, அறமே புரிகின்ற நெஞ்சம் உடை யோரான, அறவோர்கள் நிறைந்துள்ள புறஞ்சிறை மூதூரிலே, கோயில் கொண்டிருக்கும் பசுமையான அருட் பார்வையினை உடைய இயக்கிக்குப் பாற்சோறு படைத்து விட்டு வந்து கொண்டிருந்தாள், அவ்வூர் ஆயர்குடியினளும் மூதாட்டியுமான மாதரி என்பவள். கவுந்தியடிகளைக் கண்டதும், அந்த அம்மை, அவர் திருவடிகளைப் பணிந்தாள்.

## 11. அடைக்கலம் தந்தேன் !

('ஆகாத்து ஓம்பி, ஆப்பயன் அளிக்கும்)
கோவலர் வாழ்க்கை ஓர் கொடும்பாடு இல்லை;
தீதிலள்; முதுமகள்; செவ்வியள்; அளியள்;
மாதரி-தன்னுடன் மடந்தையை இருத்துதற்கு

ஏதம்இன்று; என எண்ணின ளாகி—
'மாதரி! கேள், இம் மடந்தை-தன் கணவன்
தாதையைக் கேட்கின், தன்குல வாணர்
அரும்பொருள் பெறுநரின் விருந்துஎதிர் கொண்டு
கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவர்;
உடைப்பெருஞ் செல்வர் மனைப்புகும் அளவும்
இடைக்குல மடந்தைக்கு அடைக்கலம் தந்தேன்—

'ஆநிரைகளைக் காத்துப் பேணி, அந்த ஆக்கள் தரும் பாற்பயன்களை யாவருக்கும் அளிக்கின்ற, கோவலர்களுடைய வாழ்க்கை கொடுமையுடையது அன்று. இவளோ தீது இல்லாத பண்பு உடையவள். மேலும் முதுமகளாயும், செவ்வியோளாயும், இரக்கமுள்ளவளாயும் இருக்கின்றனள். இம் மாதரியுடன் கண்ணகி மடந்தையை இருக்கவைப்பதிலே தவறில்லை'' என்று, அப்போது எண்ணினர் கவுந்தியடிகள்.

மாதரி! கேள் : இப்பெண்ணின் தந்தையும் இவள் கணவனின் தந்தையும் யாவரென்று கேட்டால், அவர்கள் குலத்தோர் பெறுவதற்கரிய செல்வத்தினைப் பெற்றவர் போலத் தம் விருந்தினராக எதிரேற்றுக் கொண்டு, இக் கரிய பெரிய கண்களை உடையவளோடு அவள் கணவனையும் பெரிய மாளிகையிலே இருக்கச் செய்வார்கள். அவ்வாறு அப் பெருஞ் செல்வம் உடைய பெருவாணிகர்களின் வீட்டிற்குச் செல்லுமளவும், இடைக்குல மடந்தையான நின்னிடம் அடைக்கலமாக இவளைத் தந்துள்ளேன்.

## 12. தாயாகித் தாங்கு !

"மங்கல மடந்தையை நன்னீர் ஆட்டிச்,
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் தீட்டித்,
தேமென் கூந்தல் சின்மலர் பெய்து;
தூமடி உடீஇத்; தொல்லோர் சிறப்பின்
ஆயமும், காவலும், ஆய்இழை தனக்குத்
தாயும் நீயே ஆகித் தாங்கு; ஈங்கு,
என்னொடு போந்த இளங்கொடி நங்கை-தன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்;
கடுங்கதிர் வெம்மையின் காதலன்-தனக்கு

நடுங்குதுயர் எய்தி நாப்புலர வாடித்
தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி;
இன்துணை மகளிர்க்கு இன்றி யமையாக்
கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்;
'வானம் பொய்யாது; வளம் பிழைப்பு அறியாது;
நீள்நில வேந்தர் கொற்றம் சிதையாது;
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு' என்னும்
அத்தகு நல்லுரை அறியா யோநீ?"

இம் மங்கல மடந்தையை நன்னீரிலே குளிப்பித்து, செங்கயல்போன்ற நெடுங்கண்களுக்கு அஞ்சனம் தீட்டி, மணமுள்ள மென்கூந்தலிலே சில மலர்களைச் சூட்டித், தூய ஆடையை உடுப்பித்துத், தொல்லோர் சிறப்பின் ஆயமும் காவலும் தாயும் ஆகி, இந்த ஆயிழையைத் தாங்குவாயாக. இவ்விடத்திற்கு என்னோடு வந்திருக்கும் இந்த இளங்கொடியனைய நங்கையின் வண்ணச் சீறடிகளை மண்மகள் இதற்கு முன்னர்க் கண்டறியாள். கதிரவனின் கொடிய வெம்மையானது தன் காதலனுக்கு நடுங்கும் துயரினைத் தந்ததை எண்ணி, நாவும் புலர வாட்டமுற்றுத், தன் துயரினையும் காணாது மறந்த பூங்கொடி இவள்! இனிய துணையாக விளங்கும் மகளிர்க்கு இன்றியமையாததான கற்புக் கடமையை மேற்கொண்ட தெய்வம் இவள்! இவளல்லது பொலிவுடைய தெய்வம் வேறு எதனையும் யாம் நேரிற் கண்டிலோம்! 'வானம் பொய்யாது; வளம் பிழைத்தலை அறியாது; நெடுநிலம் ஆள்கின்ற வேந்தனின் கொற்றமும் சிதையாது; பத்தினிப் பெண்டிர் இருந்த நாட்டின்கண்' என்று, ஆன்றோர் கூறும் அத் தகுதிவாய்ந்த நல்ல சொற்களை நீயும் அறியாயோ?"

## 13. தவத்தோர் அடைக்கலம்

த்வத்தோர் அடைக்கலம் தான்சிறிது ஆயினும்,
மிகப்பேர் இன்பம் தரும்; அது கேளாய்;
காவிரிப் படப்பைப் பட்டினம்—தன்னுள்
பூவிரி பிண்டிப் பொதுநீங்கு திருநிழல்,
உலக நோன்பிகள் ஒருங்குடன் இட்ட
இலகுஒளிச் சிலாதலம் மேல்இருந் தருளித்

தருமம் சாற்றுஞ் சாரணர்—தம்முன்
திருவில் இட்டுத் திகழ்தரு மேனியன்;
தாரன், மாலையன், தமனியப் பூணினன்;
பாரோர் காணாப் பலர்தொழு படிமையன்,
கருவிரற் குரங்கின் கையொரு பாகத்துப்
பெருவிறல் வானவன் வந்துநின் றோனைச்;
சாவகர் எல்லாம் சாரணர்த் தொழுது, "ஈங்கு
யாதிவன் வரவு?" என, இறையோன் கூறும்:

மேலும், தவமுடையோர் தரும் அடைக்கலம்தான் சிறிது என்றாலும், அதனை ஏற்பதனால், அவர்க்கது மிக்க பேரின்பம் தரும்' என்ற நியதியும் நீ கேளாய்.

'பூங்காக்கள் நிறைந்த தோட்டங்களுடைய காவிரிப் பூம்பட்டினத்தினுள், மலர் விரிந்த அசோகின் தனித்த திருநிழலிலே, சாவகர் பலரும் ஒருங்குசேர்ந்து அமைத்த ஒளியிலங்கும் சிலாதலத்தின் மேலிருந்து, அருளுடன் தருமங் களை எடுத்துச்சொல்லும் சாரணர்களின் முன்பாக, வான வில்லைப்போல ஒளிவிட்டுத் திகழும் மேனியும், தாரும், மாலையும், பொற்பூணும், உலகினர் காணாத பலரும் தொழுகின்ற தெய்வ வடிவமும், ஒரு பக்கத்துக் கை கருவிரலையுடைய குரங்கின் கையாகவும் உடைய, பேராற்ற லுடைய வானவன் ஒருவன் வந்து நின்றான். சாவகர் எல்லோரும், அச் சாரணனைத் தொழுது, இங்கே, நீவிர் வந்தது பற்றிய காரணம் யாதோ?' என்று வேண்டிக் கேட்டனர். அவன் கூறினான்:

## 14. குரங்குக்கை வானவன்!

"எட்டி சாயலன் இருந்தோன் தனது
பட்டினி நோன்பிகள் பலர்புகு மனையில், ஓர்
மாதவ முதல்வனை மனைப்பெருங் கிழத்தி
ஏதம் நீங்க எதிர்கொள் அமயத்து.
ஊர்ச்சிறு குரங்கு ஒன்று ஒதுங்கி உள்புக்குப்,
பாற்படு மாதவன் பாதம் பொருந்தி,
உண்டொழி மிச்சிலும் உகுத்த நீரும்
தண்டா வேட்கையின் தான் சிறிது அருந்தி,

எதிர்முகம் நோக்கிய இன்பச் செவ்வியை,
அதிராக் கொள்கை அறிவனும் நயந்து, நின்
மக்களின் ஓம்பு, மனைக்கிழத் தீ! என,
மிக்கோன் கூறிய மெய்ம்மொழி ஓம்பிக்,
காதற் குரங்கு கடைநாள் எய்தவும்,
தானம் செய்வுழி, அதற்கு ஒரு கூறு
'தீது அறுக' என்றே செய்தனள்; ஆதலின்,
மத்திம நன்னாட்டு வாரணம்—தன்னுள்,
உத்தர-கௌத்தற்கு ஒருமகன் ஆகி;
உருவினும், திருவினும், உணர்வினும் தோன்றிப்;
பெருவிறல் தானம் பலவும் செய்து; ஆங்கு
எண்ணால் ஆண்டின் இறந்தபிற் பாடு;
விண்ணோர் வடிவம் பெற்றனன்; ஆதலின்,
பெற்ற செல்வப் பெரும்பயன் எல்லாம்
தற்காத்து அளித்தோள் தானச் சிறப்பு; எனப்
பண்டைப் பிறப்பிற் குரங்கின் சிறுகை
கொண்டு ஒரு பாகத்துக், கொள்கையிற் புணர்ந்த
சாயலன் மனைவி தானம் தன்னால்
ஆயினன் இவ் வடிவு; அறிமினோ' எனச்
சாவகர்க்கு எல்லாம் சாற்றினன் காட்டத்
தேவ குமரன் தோன்றினன்'' என்றலும்—
சாரணர் கூறிய தகைசால் நன்மொழி
ஆர்அணங்கு ஆக, அறம்தலைப் பட்டோர்
அன்றுஅப் பதியுள் அருந்தவ மாக்களும்
தன்தெறல் வாழ்க்கைச் சாவக மாக்களும்,
இட்ட தானத்து எட்டியும், மனைவியும்,
முட்டா இன்பத்து முடிவுலகு எய்தினர்;
கேட்டனை யாயின், இத் தோட்டார் குழலியொடு
நீட்டித் திராது, நீ போக'' என்றே
கவுந்தி கூற—

எட்டிப் பட்டத்தையுடைய 'சாயலன்' என்னும் பெயருடைய ஒருவன், பட்டினி நோன்பிகள் பலருக்கும் உணவளித்

தான். பலரும் புகுந்து உணவருந்திய அம்மனையிலே, ஒரு மாதவ முதல்வனும் உணவு கொண்டான். அதன்பின், அவ் வீட்டுத் தலைவியான சாயலனின் மனைவி, தம் தீவினை ஒழிய வாழ்த்துமாறு அம் மாதவனை எதிர்கொண்டாள். அச் சமயத்திலே, அவ்வூரிலுள்ள குரங்கு ஒன்று அவ் வீட்டினுள் புகுந்தது. அருளறத்தின்பால் ஈடுபட்ட அம் மாதவனின் பாதங்களை வணங்கி, அவன் உண்டு ஒழிந்து கிடந்த எச்சிலையும், அவன் ஊற்றிய நீரையும், நீங்காத பசியின் காரணமாகச் சிறிது அருந்தித், தன் பசி தீர்ந்தபின் அவன் முகத்தை மகிழ்வுடன் எதிர்கொண்டு பார்த்தது. அதன் முகத்திலே தோன்றிய பசி நீங்கிய இன்பத்தின் தன்மையைக் கண்டு, பாசத்தால் அதிர்ச்சி கொள்ளாத கொள்கையை உடைய அறிவனும், அதன்பால் விருப்பங் கொண்டான். 'இவ்வீட்டின் தலைவியே! இதனையும் நின் மக்களைப் போலப் பேணுவாயாக' என்று கூறிச் சென்றான்.

அம் மேலோன் கூறிய சத்தியவாக்கினை அந்த அம்மையும் பேணினாள். அவள் அன்புக்குப் பாத்திரமான அக் குரங்கும் இறந்தது. பின்னர், அவள் தானம் செய்யும் போதெல்லாம் அந்தக் குரங்கிற்கும் ஒரு பகுதித் தானத்தை 'அதன் தீவினை நீங்குக' என்று செய்து வந்தாள். அதனால், நல்ல மத்திமதேசத்திலுள்ள வாரணவாசி என்னும் நகரிலிருந்த உத்திர கௌத்தன் என்பவனுடைய ஒரே மகனாக அக் குரங்கு சென்று பிறந்தது. உருவினும், திருவினும், உணர்வினும் மேம்பட்டு விளங்கிப், பெருஞ் சிறப்புடைய தானங்கள் பலவும் அம்மகன் செய்தான். தன் 32 முப்பத்திரண்டாவது வயதிலே அம்மகனும் இறந்தான். பின்னர், அவன் தேவர்களின் வடிவம் பெற்றனன். ஆகையால், 'பெற்ற செல்வத்தின் பெரும் பயன் எல்லாம், தன்னைக் காத்து அளித்து உதவியவளின் தானச் சிறப்பே யாகும்' என்று, தன் முன்னைப் பிறவியிற் கொண்டிருந்த குரங்கு உருவின் சிறுகையையும் ஒரு பாகத்திற்கொண்டு, 'தானம் செய்யும் கோட்பாட்டிலே பொருந்திய சாயலன் மனைவியின் தானத்தின் பயனால் இவ்வடிவு ஆயினேன்; இதனை நீவிரும் அறியுங்கள்' என்று உரைத்தனன்.

தகைமை சிறந்த நல்ல அறிவுரைகளைச் சாரணர் அவ்வாறு கூறினர். அந்த வீட்டுத் தலைவியும், அவள் கணவனும், சாரணர் சொன்னபடியே அறம்செய்யத் தலைப் பட்டனர். அவ்வூரிலே வாழ்ந்தவரான அருந்தவம் செய்பவர்

களுக்கும். தம் இச்சையை வென்று வாழ்ந்தவரான சாவக நோன்பிகளுக்கும், எட்டியும் அவன் மனைவியும் செய்த தானங்களின் பயனாக, அவர்களும் பேரின்ப உலகம் சென்றனர். என் உரையை நீயும் கேட்பாயேயானால் 'தொகுதி கொண்ட கூந்தலினை உடைய இக் கண்ணகி யோடும், காலம் தாழ்த்தாது நின் வீடுநோக்கிச் செல்வாயாக' என்றனர் கவுந்தியடிகள்.

## 15. ஆயர்கள் சூழ்ந்தனர்!

.........உவந்தனள் ஏத்தி.
வளர்இள வனமுலை, வாங்கு அமைப் பணைத்தோள்,
முளைஇள வெண்பல், முதுக்குறை நங்கையொடு,
சென்ற ஞாயிற்றுச் செல்சுடர் அமயத்துக்,
கன்றுதேர் ஆவின் கனைகுரல் இயம்ப,
மறித்தோள் நவியத்து உறிக்கா வாளரொடு
செறிவளை ஆய்ச்சியர் சிலர் புறம் சூழ—

மாதரி பெரிதும் மகிழ்ச்சியடைந்தவளாகிக் கவுந்தி அடிகளைப் போற்றினாள். கண்ணகியை ஏற்றுக்கொள்ளவும் இசைந்தாள்.

இளமையும் அழகும் பொருந்திய வளர்ச்சிபெற்ற முலைகளை உடையவள்; வளைந்த மூங்கில்போன்ற பணைத்த தோள்களை உடையவள்; நாணலின் இளமுளை போன்ற வெண்மையான பல்வரிசையினை உடையவள்; பேரறிவும் உடையவள்; கண்ணகி. அவளுடன், மாலை ஞாயிறு மேலைத்திசையிலே மறைகின்ற பொழுதில், மாதரி தன் வீடு நோக்கிச் சென்றனள். கன்றினுக்குப் பாலூட்டும் நேரம் வந்ததால், பசுக்கள் உரத்த குரலிட்டுக் கன்றுகளை நினைத்துக் கதறிக் கொண்டிருந்தன. ஆட்டுக்குட்டி ஒரு தோளிலும், கோடரியும் உறியும் மற்றொரு தோளிலுமாக வரும் ஆயர்கள் சிலரோடு, செறிந்த வளையணிந்தோரான ஆய்ச்சியர் சிலரும், அப்போது, அவர்களைச் சூழ்ந்து விட்டனர்.

## 16. மதுரைக் கோட்டை வாயில்

மிளையும், கிடங்கும், வளைவிற் பொறியும்,
கருவிரல் ஊகமும், கல்லுமிழ் கவணும்,
பரிவுறு வெந்நெயும்; பாகடு குழிசியும்,
காய்பொன் உலையும், கல்லிடு கூடையும்,

தூண்டிலும், தொடக்கும், ஆண்டலை அடுப்பும்,
கவையும், கழுவும், புதையும், புழையும்.
ஐயவித் துலா-மும் கைபெயர் ஊசியும்,
சென்றுஎறி சிரலும், பன்றியும், பணையும்,
எழுவும்; சீப்பும், முழுவிறற் கணையமும்,
கோலும், குந்தமும், வேலும், பிறவும்,
ஞாயிலும் சிறந்து,

காவற் காடும், அகழியும், வளைவான விற்பொறி யமைந்த கடமும், கருவிரற் குரங்கின் உருவில் அமைந்த பொறிகளும் கல்வீசும் கவண பொறிகளும், பகைவர்மீது கொதிக்க வைத்த என்ணெயைச் சொரியும் இடங்களும், சாணகங் கரைத்துக் கொதிக்கவைத்து ஊற்றும் மிடாக் களும், கற்களிட்ட கூடைகளும், தூண்டிற் பொறிகளும், தொடக்குப் பொறிகளும், ஆண்தலை அடுப்புப் பொறிகளும், கவறுபட்ட நெடுங்கொம்புகளும், கழுக்கோலும், அம்புக் கட்டுகளும், மறைந்து நின்று போரிடும் புழைகளும், தலை வாங்கும் ஐயவித் துலாங்களும், தொடுபவர் கையிலே ஊடுருவிச் சென்று வருத்தும் ஊசிகளும், பகைவர்மேற் சென்று தாக்கும் சிச்சிலிப் பொறிகளும், பன்றிப் பொறிகளும், கோட்டைக் கதவுகளுக்கு இட்டிருக்கும் எழுவும், சீப்பும், கணையமும், எறிகோலும், குந்தமும், வேலும், குருவித்தலைகளும், பிற பாதுகாப்பு ஏற்பாடுகளும், மதுரைக் கோட்டையிலே மிகுதியா யிருந்தன.

## 17. மாதரி மனை சேர்ந்தனர் !

—நாட்கொடி நுடங்கும்
வாயில் கழிந்து, தன் மனைபுக் கனளால்
கோவலர் மடந்தை-கொள்கையின் புணர்ந்து—என்.

நாள் முழுவதும் கோட்டை வாயிலிலே கொடி பறந்து கொண்டிருந்தது. இவை எல்லாம் நீங்கிக், கோட்டை வாயிலையும் கடந்து, மாதரி, இடைக்குல மாதர் பலரும் தன்னுடன் கூடிவரக், கோவலன் கண்ணகியருடன் தன் னுடைய வீட்டிற்கும் சென்று சேர்ந்தனள்.

# 16

# கொலைக்களக் காதை

[நிலைமண்டில ஆசிரியப்பா]

[கோவலன் கண்ணகியருக்கு ஒரு புது மனையிலே இடந்தந்து, பல்வகைப் பொருளும் தருகின்றாள் மாதரி. தன் மகளையும் கண்ணகிக்குத் துணையாக அமைக்கின்றாள். கண்ணகி சோறாக்கித் தன் கணவனை உண்பிக்க, அவனும் அவளைப் பாராட்டி, தன் நிலைக்கு வருந்துகின்றான். சிலம்புடன் அதனை விற்றுவரச் செல்பவன், பொற்கொல்லன் எதிர்ப்பட, அவனிடம் சிலம்பினைக் காட்டி, 'விற்றுத் தருவதற்கு இயலுமோ?' எனக் கேட்கின்றான். அதனையடுத்து, அவன் சூழ்ச்சியால், கோவலன் கொலையுண்டும் மடிகின்றான்.]

## 1. புதுமனை சேர்த்தாள்

அரும்பெறற் பாவையை அடைக்கலம் பெற்ற
இரும்பேர் உவகையின் இடைக்குல மடந்தை
அளைவிலை உணவின் ஆய்ச்சியர்-தம்மொடு
மிளைசூழ் கோவலர் இருக்கை அன்றிப்
பூவல் ஊட்டிய புனைமாண் பந்தர்க்
காவற் சிற்றில் கடிமனைப் படுத்துத்—

பெறுவதற்கு அருமையுடைய கண்ணகியை, அடைக்கலமாகப் பெற்ற மிகவும் பெரிதான உவகையினால், இடைக்குலத்தவளான மாதரி, அவளைச் சிறப்பாக உபசரிக்கத் தொடங்கினாள். மோர் விற்று உண்ணும் ஆய்ச்சியர்களுடைய, கட்டுவேலி சூழ்ந்த சேரியிலே அவர்களைத் தங்கச் செய்யவில்லை. அதனை அடுத்திருந்த, அழகமைந்த, பந்தரும் பாதுகாப்பும் உடைய, செம்மண் பூசிய ஓர் அழகான புதிய மனையிலே, அவர்களைத் தங்கி இருக்கச் செய்தாள்.

## 2. ஐயை தோழியானாள்

செறிவளை ஆய்ச்சியர் சிலருடன் கூடி,
நறுமலர்க் கோதையை நாள்—நீர் ஆட்டிக்
'கூடல் மகளிர் கோலங் கொள்ளும

ஆடகப் பைம்பூண் அருவிலை அழிப்பச்
செய்யாக் கோலமொடு வந்தீர்க்கு என்மகள்
ஐயை காணீர் அடித்தொழில் ஆட்டி:
பொன்னிற் பொதிந்தேன், புனைபூங் கோதை:
'என்னுடன் நங்கை ஈங்கு இருக்க' எனத் தொழுது,
மாதவத் தாட்டி வழித்துயர் நீக்கி,
ஏதம் இல்லா இடந்தலைப் படுத்தினள்;—

செறிந்த வளைகளுடன் விளங்கும் ஆயர்மகளிர் சிலருடன்கூடி, நறுமலர்க் கோதையினளான கண்ணகியைப் புநீரில் குளிப்பாட்டினள். "கூடல் மகளிர், தம்மை ஒப்பனை செய்து கொள்ளுகின்ற, பொன்னாற் செய்த பைம்பூண் கலன்களின் அரிய, மதிப்பினையெல்லாம் இல்லாதுபோகச் செய்வதற்கோ, எவ்விதமான நகைகளும் பூணாது வந்தீர்கள்?" என்று, கண்ணகியின் இயற்கையழகை வியந்தாள். 'இதோ! என் மகள் ஐயையைப் பார்த்தீர்களோ! நீங்கள் ஏவுவதை இவள் செய்வாள்' என்று, தன் மகளைக் காட்டிக் கூறினாள். 'அழகிய பூங்கோதையினையுடைய நங்கையே! பொன்போல உன்னைப் போற்றுவேன்; இவ்வீட்டிலே இருப்பாயாக" என்று பெருந்தவஞ்செய்த பேறு உடையவளான மாதரியானவள், கண்ணகி வழிநடந்து வந்த துயரினைப் போக்கி, எவ்விதக் குற்றமும் நேராத அந்த இடத்திலே, வசதியாக இருக்கவும் செய்தனள்.

## 3. மாமி முறை கொண்டாள்!

"நோதக வுண்டோ, நும்மக னார்க்குஇனி?
சாவக நோன்பிகள் அடிகள் ஆதலின்,
நாத்தூண் நங்கையொடு நாள்வழிப் படூஉம்
அடிசில் ஆக்குதற்கு அமைந்தநற் கலங்கள்
நெடியாது அளிமின், நீர்" எனக் கூற—

கண்ணகியின் உள்ளம், அந்த அன்னையின் அன்பினாலே நெகிழ்ந்தது. "நும் மகனார்க்கு இனியும் ஒரு கவலை உண்டோ? அவர் சாவக நோன்புடையவர். நாத்தூண் நங்கையான இவளோடும், பகலுணவு சமைப்பதற்கு வேண்டியன செய்வேன். அதற்கேற்ற நல்ல பாத்திரங்களைச் சீக்கிரமாகவே தாருங்கள்" என, உரிமையுடன் மாதரியிடம் வேண்டினாள்.

## 4. பொருள்கள் தந்தனர்

இடைக்குல மடந்தையர் இயல்பிற் குன்றா
மடைக்கலம் தன்னொடு மாண்புடை மரபின்
கோளிப் பாகல் கொழுங்கனித் திரள்காய்,
வாள்வரிக் கொடுங்காய், மாதுளம் பசுங்காய்,
மாவின் கனியொடு, வாழைத் தீங்கனி,
சாலி அரிசி, தம்பாற் பயனொடு,
'கோல்வளை மாதே! கொள்க' எனக் கொடுப்ப—

ஆயர் குலத்து மகளிர்கள், இயல்புகளிலே குறையாத சமையற் பாத்திரங்களுடன், மாண்புடையோரைப் போல ஏராளமாகக் காய்த்து உதவியிருக்கும் கோளிப் பாகலின் திரண்டு முதிர்ந்த காயும், வெள்ளிய வரிகளையுடைய வளைந்த வெள்ளரிக் காய்களும், மாதுளையின் இளங்காயும், மாம்பழம் வாழைப் பழம் செந்நெல் அரிசி ஆகியவையும், பால் நெய் மோருடன் 'திரண்ட வளையல்களை அணிந்த மாதே! கொள்வாயாக' எனக் கொடுத்தனர்.

## 5. சோறாக்கினாள்

"மெல்விரல் சிவப்பப் பல்வேறு பசுங்காய்
கொடுவாய்க் குயத்து விடுவாய் செய்யத்
திருமுகம் வியர்த்தது; செங்கண் சேந்தன;
கரிபுற அட்டில் கண்டனள் பெயர
வைஎரி மூட்டிய ஐயை தன்னொடு
கையறி மடைமையிற் காதலற்கு ஆக்கித்—

அவர்கள் கொடுத்த பல்வேறு பசுங்காய்களையும், தன் மெல் விரல்கள் சிவக்க அரிவாள் மணையிலே கண்ணகி அரிந்தனள். அழகிய முகம் வியர்த்தது. செவ்வரி படர்ந்த கண்கள் சிவந்தன. அந்நேரத்திலே பானையிலே கரிப்பற்றக் கண்டு, அங்கே சென்றனள். வைக்கோலால் அடுப்புக்குத் தீமூட்டிக் கொண்டிருந்த ஐயையுடன், தன் கையறிந்த சமையல் தொழிலினாலே, தன் கணவனுக்கு உணவும் சமைத்தனள்.

## 6. அமுதம் உண்க அடிகள்

தாலப் புல்லின் வால்வெண் தோட்டுக்
கைவல் மகடூஉக் கவின்பெறப் புனைந்த

செய்வினைத் தவிசிற் செல்வன் இருந்தபின்,
கடிமலர் அங்கையிற் காதலன் அடிநீர்
சுடுமண் மண்டையின் தொழுதனள் மாற்றி;
மண்ணக மடந்தையை மயக்கொழிப் பனள்போல், 40
தண்ணீர் தெளித்துத் தன் கையால் தடவிக்
குமரி வாழையின் குருத்தகம் விரித்து; ஈங்கு
அமுதம் உண்க அடிகள்! ஈங்கு' என;—

அமுதம் உண்க அடிகள்! ஈங்கு' என;— குருத்தோலையிலே, தடுக்கப் பனையின் வெண்மையான குருத்தோலையிலே, தடுக் பனையின் வெண்மையான அழகாகப் புனைந் குப் பின்னுவதில் கைதேர்ந்தவள் ஒருத்தி அழகாகப் புனைந் திருந்த, வேலைப்பாடமைந்த தடுக்கின்மேல் கோவலன் அமர்ந்தான். தன் மலர்போன்ற அங்கையினால், சுட்ட மண்பாத்திரத்தினாலே நீர் சொரிந்து, அவன் பாதங்களைக் கழுவித் துடைத்தாள் கண்ணகி. நிலமடந்தையினது வெம்மையைத் தீர்ப்பவளேபோலத் தண்ணீர் தெளித்துத் தன் கையாலேயே தரையைத் தடவியும் கொடுத்தாள். அதன்மேல், ஈனாத வழையின் குருத்தினை உட்புறமாக விரித்துப் போட்டு, 'இங்கிருந்து அடிகள் இவ்வேளை அமுதம் உண்க' என்றும் உபசரித்தாள்.

## 7. கோவலன் உண்டான்

அரசர் பின்னோர்க்கு அருமறை மருங்கின்
உரிய வெல்லாம் ஒருமுறை கழித்து-'ஆங்கு 45
ஆயர் பாடியின் அசோதைபெற் றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ,
நல்லமுது உண்ணும் நம்பி! ஈங்குப்
பல்வளைத் தோளையும் பண்டுநங் குலத்துத்,
தொழுனை யாற்றினுள் தூமணி வண்ணனை 50
விழுமம் தீர்த்த விளக்குக் கொல்!' என,
ஐயையும் தவ்வையும் விம்மிதம் எய்திக்
'கண்கொளா நமக்கு இவர் காட்சி, ஈங்கு' என—

பெருவாணிகர்கள் தாம் உண்ணும்போது செய்யவேண்டு மென அரிய மறைகளிலே சொல்லப்பட்ட வாறெல்லாம், முறையாகச் செய்து கழித்தபின், கோவலன், உணவு கொள்ளத் தொடங்கினான். 'இம் மதுரையின் ஆயர்பாடி யிலே இன்று வந்து இவ்வாறு அமுதுண்ணும் இவன், முன்னை நாளில் வடமதுரை ஆயர்பாடியிலே அசோதை பெற்ற

எடுத்த காயம்பூமேனிக் கண்ணனைப்போலவே இருக்கின்றான். பல வளையல்கள் அணிந்த இவளோ, பண்டு நம் குலத்திலே தோன்றித் தொழுனையாற்றினுள் தூய நீலமணி வண்ணனைத் துயர்தீர்த்த நப்பின்னை என்னும் நம் குல விளக்குப் போன்றிருக்கின்றாள்!' என்று கூறியவராக, ஐயையும், அவள் தாயும், அவர்களைப் பார்த்துப் பார்த்துச் சொல்லி விம்மிதம் எய்தினர், 'இவர்களின் காட்சி இங்கே கண்கொள்ளாக் காட்சி' என்று எண்ணியும், அவர்கள் மகிழ்ந்தனர்.

## 8. கோவலனின் உள்ளம்

உண்டுஇனிது இருந்த உயர்பே ராளற்கு
அம்மென் திரையலோடு அடைக்காய் ஈத்த
மைஈர் ஓதியை, 'வருக' எனப் பொருந்திக்,
"கல்லதர் அத்தம் கடக்க யாவதும்
வல்லுந கொல்லோ மடந்தைமெல் லடி!" என,
வெம்முனை அருஞ்சுரம் போந்ததற்கு இரங்கி,
"எம்முது குரவர் என்னுற் றனர்கொல்?
மாயம் கொல்லோ? வல்வினை கொல்லோ?
யானுளம் கலங்கி யாவதும் அறியேன்;
வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி, நெடுநகை புக்குப்,
பொச்சாப் புண்டு, பொருள்உரை யாளர்
நச்சுக்கொன் றேற்கு நன்னெறி உண்டோ?
இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்;
சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்;
வழு எனும் பாரேன்; மாநகர் மருங்கு ஈண்டு
எழுக என எழுந்தாய், என் செய்தனை?' என—

உண்டபின், இனிதாக ஒருபுறம் சென்றிருந்தான் உயர் பேராளனான கோவலன். அழகிய மெல்லிய வெற்றிலையோடு பாக்கும் அளித்து, அவன் அருகே சென்று நின்றவள் கண்ணகி. கருமையும் குளுமையும் பொருந்திய கூந்தலுடையவளான அவளைத், தன்பால் நெருங்கி வருகவென அழைத்து, அவள் வரவும், அவளைத் தழுவி அணைத்துக் கொண்டவனாகக், கோவலன், தன் உள்ளம் திறந்து சில பேசுகின்றான் :

'இந்த மடந்தையின் மெல்லிய பாதங்கள், பருக்கைக் கற்கள் மலிந்த காட்டுவழியெல்லாம் நடந்து கடப்பதற்கும் வல்லமை உடையனவோ?' என, வெம்மையுடைய அருஞ் சுரத்தினிடையே அவள் நடந்துவந்த துன்பத்தை நினைந்து இரங்கினான். 'எம் இருமுது குரவர்களும் இந்நேரம் என்ன கொடுந்துன்பம் அடைந்தார்களோ? மாயமோ? வல் வினையோ? யான் உள்ளங் கலங்கி, எதனையும் எண்ணிப் பாராதே, இவ்வாறு செய்துவிட்டேனே! வம்புப்பேச்சுப் பேசுபவரோடும், புதிய பரத்தைமை உடையவரோடும் கூடி வாழ்நாளைக் கழித்தேன். எங்கும் சிறுமையான பேச்சும், ஏளனமிக்க சிரிப்பும் என்னைக் குறித்து எழவும் காரணமா யினேன். ஒழுக்க நெறியெல்லாம் மறந்து திரிந்தேன். பொருளுடையன கூறுவோரின் சொற்களை நஞ்சாகக் கருதிப் பேணாது ஒதுக்கினேன். இனி, எனக்கு நல்லொழுக் கம் என வொன்றும் உண்டோ? இரு முதுகுரவரும் அவ்வப் போது என்னைத் திருத்துவதற்காக ஏவிய ஏவல்களையும் செய்யாது வழுவினேன். அறிவிற் சிறந்த, ஆனால் அறியாத சிறுபருவத்தினளான மாதவிக்கும் சிறுமைகளையே செய் தேன். உன்னை 'உடன் வருக' என அழைப்பது தவறா யிற்றே எனவும் யான் எண்ணிப் பார்க்கவில்லை. நம் பெரிய நகரினின்றும் இவ்விடம் நோக்கிப் புறப்படுக என்றேன். நீயும் உடனே எழுந்து என்னுடன் வந்துவிட்டனையே?" என்று பலவாறாகக் கூறித், தன் பொருந்தாச் செயல்களுக் காக மனம் வருந்தினான், அவன்.

## 9. கண்ணகி உரைத்தவை

'அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும்,
துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை, நும்
பெருமகள் தன்னொடும் பெரும்பெயர்த் தலைத்தாள்
மன்பெருஞ் சிறப்பின் மாநிதிக் கிழவன்,
முந்தை நில்லா முனிவுஇகந் தனனா,
அற்புளம் சிறந்தாங்கு அருண்மொழி அளைஇ
எற்பா ராட்ட, யானகத்து ஒளித்த
நோயும் துன்பமும் நொடிவது போலுமென்
வாய்அல் முறுவற்குஅவர் உள்ளகம் வருந்தப்
போற்றா ஒழுக்கம் புரிந்தீர்! யாவதும்

மாற்றா உள்ள வாழ்க்கையேன்! ஆதலின்,
ஏற்றெழுந் தனன், யான் என்றவள் கூறக்—

"அறநெறியாளர்க்கு உணவளித்தலும், அந்தணர்களைப் பேணுதலும், துறவியரை எதிர்கொண்டு உபசரித்தலும், நம் முன்னோரின் சிறந்த நிலையைப்போல வரும் விருந்தினை எதிரேற்று உபசரித்தலும் ஆகிய கடமைகளையெல்லாம் யான் இழந்தவளாக நின்றேன்! என்னை நும் தாயோடும், பெரும்புகழும் தலையான பொருளீட்டும் முயற்சிகளும் நிறைந்த பெருஞ்சிறப்பினை உடைய இருநிதிக் கிழவனான நும் தந்தையும் காண வந்தனர். அவ்வேளை, நும் தந்தை அதன்முன் என்றும் இல்லாதவாறு கொண்டிருந்த நும்பேரிலுள்ள முனிவையும் மறைத்துக் கொண்டனர். உள்ளத்திலே சிறந்த அன்பு உடையவராக, அருள்நிறைந்த பல சொற்களால் என்னைப் பாராட்டினர். என் உள்ளத்திலே ஒளித்துக் கொண்டிருந்த நும் பிரிவாலான நோயினையும், அதனால் விளைந்த துன்பத்தையும் அவருக்கு எடுத்துக் கூறுவதுபோல, என் வாயிலே நெளிந்த புன்சிரிப்பினைக் கண்டு, அவர்கள் மிகவும் உள்ளம் வருந்தினர். நல்லவர் மேற்கொள்ளாத ஒழுக்கங்களைச் செய்து விட்டீர். ஆனால், யானோ, எனக்கு நும்பாலுள்ள அன்பினை எதனாலும் மாற்றமுடியாத உள்ளத்துடனேயே வாழ்ந்து வந்தவள். அதனால், நீர் அழைக்கவும், அதற்கிசைந்து நும்மோடு உடனேயே புறப்பட்டு வந்துவிட்டேன்" என்றனள் கண்ணகி.

## 10. போற்றினான் புறப்பட்டான்!

'குடிமுதற் சுற்றமும் குற்றிளை யோரும்;
அடியோர் பாங்கும், ஆயமும் நீங்கி,
நாணமும், மடனும், நல்லோர் ஏத்தும்,
பேணிய கற்பும் பெருந்துணை யாக,
என்னொடு போந்து, ஈங்கு என்துயர் களைந்த
பொன்னே, கொடியே, புனைபூங் கோதாய்;
நாணின் பாவாய், நீணில விளக்கே!
கற்பின் கொழுந்தே, பொற்பின் செல்வி!
சீறடிச் சிலம்பின் ஒன்றுகொண்டு, யான்போய்
மாறி வருவன்; மயங்கா தொழிக' எனக்—
கருங்கயல் நெடுங்கண் காதலி தன்னை

ஒருங்குடன் தழீஇ, உழையோர் இல்லா
ஒருதனி கண்டு, தன் உள்ளகம் வெதும்பி,
வருபனி கரந்த கண்ணன் ஆகிப்
பல்லான் கோவலர் இல்லம் நீங்கி
வல்லா நடையின் மறுகிற் செல்வோன்—

'குடிக்கண் மூதகுசுற்றமான பெற்றோரையும், குற்றேவல் செய்யும் மகளிரையும், பிற வேலைக்காரர்களின் கூட்டத்தையும், தோழிமார் கூட்டத்தையும் விட்டுவிட்டு, நாணமும், மடனும், நல்லோர் போற்றுதலும், உள்ளத்திலே உறுதியாகக் கொண்ட கற்புமே பெருந்துணையாக, என்னுடன் புறப்பட்டு வந்தனை. இங்கும் என் மனத்துயரம் எல்லாம் போக்கினை. பொன்னே! பூங்கொடியே! புனைபூங் கோதாய்! நாணின் பாவாய்! நீள்நில விளக்கே! கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி! நின் சிறிய பாதங்களில் அணியாகவிருந்த சிலம்புகளுள் ஒன்றைக் கையிலே எடுத்துக் கொண்டு யான் நகருட்போய் விலைமாறி வருகிறேன்; நீ மயங்காதிருப்பாயாக!' என்று கூறினான். கருமையான கயல் மீன் போன்ற நெடுங்கண்களை உடையவளான தன் காதலியை உடலிறுகத் தழுவினான். அவளருகே ஏவற் பெண்டிர் எவரும் இல்லாதே இருக்கும் தனிமையைக் கண்டு தன் நெஞ்சம் கொதித்தான். நீர் நிறைந்த கண்களை உடையவனும் ஆயினான். பல பசுக்களை உடைய ஆயர்களின் வீடுகளைக் கடந்து, தளர்ந்த நடையுடன் வீதியிலே இறங்கியும் சென்றான்—கோவலன்.

## 11. கடைவீதி சேர்ந்தான்

இமிலேறு எதிர்ந்தது; இழுக்கென அறியான்,
தன்குலம் அறியும் தகுதிஅன்று ஆதலின்—
தாதெரு மன்றம் தானுடன் கழிந்து,
மாதர் வீதி மறுகிடை நடந்து,
பீடிகைத் தெருவில் பெயர்வோன்—

(மூரிப்பினை உடைய ஏறு ஒன்று அவன் எதிரே வந்தது; அவன் குலத்தினர் அதனைக் குற்றமாகக் கருதும் இயல்பினர் அல்லர்.) ஆதலின், அவனும் அது இழுக்கு என அறியவில்லை. பூந்தாதுகள் துகள்பட்டுக் கிடக்கின்ற மன்றத்தினைக் கடந்து, கோயிற் பணிப்பெண்கள் வாழும் தெருவழியாக நடந்து, கடைவீதி வழியாகச் சென்று கொண்டிருந்தான்.

## 12. பொற்கொல்லன் எதிர்ப்பட்டான்

—ஆங்கண்
கண்ணுள் வினைஞர், கைவினை முற்றிய
நுண்வினைக் கொல்லர், நூற்றுவர் பின்வர
மெய்ப்பை புக்கு விலங்குநடைச் செலவின்
கைக்கோற் கொல்லனைக் கண்டன னாகித்,
'தென்னவன் பெயரொடு சிறப்புப் பெற்ற
பொன்வினைக் கொல்லன் இவன்' எனப்
பொருந்திக்,
'காவலன் தேவிக்கு ஆவதோர் காற்கு அணி
நீ விலை யிடுதற்கு ஆதியோ' என—

அவ்விடத்திலே, கண்கவரும் நுண்ணிய வேலைப்பாடுகளிற் சிறந்தோரான, கைவினைத்தொழிலிலே நிறைந்த திறனுடைய, நுட்பமான வினைத்திறன் அமைந்த பொற்கொல்லர் நூற்றுக் கணக்கானவர் தன் பின்னாக வந்துகொண்டிருக்கச், சட்டை அணிந்தவனாக, விலகிவிலகி நடக்கும் நடையுடையவனாகக், கையிற் கோலுங் கொண்டவனாக வரும் பொற்கொல்லனைக் கண்டான். 'பாண்டியன் பெயரோடு சேர்ந்து அரண்மனைப் பொற்கொல்லனாகச் சிறப்புப்பெற்ற, பொன்வினைக் கொல்லரிற் சிறந்தோன் இவன் போலும்' எனக் கருதினான். அவனை அணுகிக், 'காவலன் தேவிக்குப் பொருத்தமானவோர் காலுக்குரிய அணிகலன்; நீ அதனை விற்றுத் தருவதற்கு இயலுமோ?' என வினவினான்.

## 13. கொல்லன் பார்த்தான்

'அடியேன் அறியேன்; ஆயினும், வேந்தர்
முடிமுதற் கலன்கள் சமைப்பேன் யான்' எனக்
கூற்றத் தூதன் கைதொழுது ஏத்தப்
போற்று-அரும் சிலம்பின் பொதிவாய் அவிழ்த்தனன்;
மத்தக மணியோடு வயிரம் கட்டிய
பத்திக் கேவணப் பசும்பொன் குடைச்சூல்
சித்திரச் சிலம்பின் செய்வினை எல்லாம்
பொய்த்தொழிற் கொல்லன் புரிந்துடன் நோக்கிக்;

"அதனை செய்வதற்கு அறியேன். ஆயினும், வேந்தரின் முடி முதலிய அணிகலன்களை யான் நன்கு சமைப்பவன்"

என்று காலனின் தூதனைப் போன்ற அவன், கைதொழுது போற்றிக் கூறினான். கோவலன் சிலம்பினை அவன்பால் தர, அவனும் அதன் மூட்டுவாயை அவிழ்த்து அதனை நன்கு ஆராய்ந்தான். உள்ளிடு பரலாகத் தலைசிறந்த மாணிக்கப் பரல்களும், வயிரம் பதித்த கேவண வரிசையும், பசும்பொன்னாற் புடைப்பாகச் செய்யப்பட்டு விளங்கிய உட்கருவுமுடைய, அச் சித்திரச்சிலம்பின் தொழில் நுணுக்கங்களை எல்லாம், பொய்த்தொழிலை உடையவனான அக் கொல்லன் உடனே பார்த்து, நன்கு அறிந்து கொண்டான்.

## 14. கொல்லனின் சூழ்ச்சி

''கோப்பெருந் தேவிக்கு அல்லதை, இச்சிலம்பு
யாப்புறவு இல்லை' என, முன் போந்து,
விறன்மிகு வேந்தற்கு விளம்பி யான்வர; என்
சிறுகுடில் அங்கண் இருமின் நீர்'' எனக்,
கோவலன் சென்றக் குறுமகன் இருக்கையோர்
தேவ கோட்டச் சிறையகம் புக்கபின்—
'கரந்துயான் கொண்ட கால்அணி ஈங்கு,
பரந்து வெளிப்படா முன்னம், மன்னற்குப்,
புலம்பெயர் புதுவனிற் போக்குவன் யான்' எனக்,
கலங்கா உள்ளம் கரந்தனன் செல்வோன்—

சிலம்பைக் கோவலனிடம் தந்தவனாக, 'அரசனுடைய பட்டத்துத் தேவிக்கு அல்லாது, இச் சிலம்பு பிறருக்குப் பொருந்தும் நிலையிலே இல்லை. வெற்றிமிக்க வேந்தனுக்கு இதுபற்றி அறிவித்து வருவேன். அவ்விடத்தே என் சிறு குடில்; அங்கே சென்று நீவிர் இருப்பீராக' என்றான்.

கோவலனும் அதை ஏற்று, அக் கீழ்மகனின் இருப்பிடமான, கோயிலுக்குப் பக்கத்திலேயிருந்த வீட்டிற்சென்று இருந்தான். அவன் சென்று இருந்ததன்பின், 'யான் கரந்து கொண்டிருக்கும் தேவியின் காற்சிலம்பு பற்றிய செய்தி, இவ்விடத்து இவனுக்கும் வந்து வெளியாவதற்கு முன்னர், மன்னவனுக்குத் தன் நாடுவிட்டு வந்துள்ள இப் புதியோனைக் காட்டி, அக் களவினைப்பற்றிய பழியைப் போக்குவேன்' என உள்ளத்தில் எண்ணினான். பழிச்செயலுக்குக் கலங்காத உள்ளங்கொண்ட அவன், தன் பழியை மறைத்து, நல்லவனே போலவும் சென்றான்.

## 15. பாண்டியனைக் கண்டான்

'கூடல் மகளிர் ஆடல் தோற்றமும்,
பாடற் பகுதியும், பண்ணின் பயங்களும்,
காவலன் உள்ளம் கவர்ந்தன' என்று, தன்
ஊடல் உள்ளம் உள்கரந்து ஒளித்துத்,
தலைநோய் வருத்தம் தன்மேல் இட்டுக்,
குலமுதல் தேவி கூடாது ஏக,
மந்திரச் சுற்றம் நீங்கி, மன்னவன்
சிந்தரி நெடுங்கண் சிலதியர் —தம்மொடு
கோப்பெருந் தேவி கோயில் நோக்கிக்
காப்புடை வாயிற் கடைகாண் அகவையின்—
வீழ்ந்தனன் கிடந்து, தாழ்ந்து பல ஏத்திக்—

'கூடல் நகரத்து நாடக மகளிரது ஆடலின் கவர்ச்சியும் அவரது பாடலின் பகுதிகளும், பண்ணின் இனிமைகளும் காவலனது உள்ளத்தைக் கவர்ந்தன' என்று, தன் ஊடல் கொண்ட உள்ளத்தை உள்ளே மறைத்து ஒளித்துக்கொண்டவளாகித், "தலைநோய் வருத்தம்" என்று தன்மேல் ஒன்றைச் சுமத்திக்கொண்டு, பட்டத்து முதல்தேவியானவள் அரசனோடுங் கூடியிராது, அந்தப்புரம் சென்று விட்டாள். அதனால் மந்திரச் சுற்றத்தினரைப் பிரிந்து, மன்னவன், அரி செறிய நெடுங்கண்களையுடைய பணிப் பெண்டிர் சிலருடனே, கோப்பெருந்தேவியின் கோயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். காவலையுடைய வாயிற் கடையிடத்து அவனைக் கண்டபோது, பொற்கொல்லன், அம்மன்னவனின் காலடிமுன் வீழ்ந்துகிடந்து வணங்கினான். தாழ்மையுடன் மன்னனைப் பலவாறாகப் போற்றிப் புகழவும் செய்தான்.

## 16. பழி கூறினான்

"கன்னகம் இன்றியும் கவைக்கோல் இன்றியும்,
துன்னிய மந்திரம் துணைஎனக் கொண்டு,
வாயி லாளரை மயக்குதுயில் உறுத்துக்
கோயிற் சிலம்பு கொண்ட கள்வன்
கல்லென் பேர்ஊர்க் காவலர்க் கரந்து, என்
சில்லைச் சிறுகுடில் அகத்துஇருந்தோன்' என—

அதன்பின், "கன்னக்கோல் இல்லாமலும், கவைக்கோல் இல்லாமலும், அனைவரையும் துயிற்படுத்தும் மந்திரம் ஒன்றே தனக்குத் துணை என்று மேற்கொண்டு, வாயிற் காப்போரையெல்லாம் மயங்கித் துயிலுறும்படி செய்து, அரண்மனைச் சிலம்பினைக் களவாடிக்கொண்டு சென்ற கள்வன், ஆரவாரம் உடைய நம் பேரூரின் காவலர்களுக்கும் மறைந்து, என்னுடைய இழிந்த சிறிய குடிலின்கண் வந்து இருக்கின்றனன்' என்றான்.

## 17. அரசனின் ஆணை

வினைவிளை காலம் ஆதலின், யாவதும்
சினைஅலர் வேம்பன் தேரான் ஆகி,
ஊர்காப் பாளரைக் கூவி, "ஈங்கு என்
தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கையது ஆகின்,
கொன்று, அச்சிலம்பு கொணர்க ஈங்கு" எனக்—

வினையானது தோன்றி அதன் பயனை நுகர்விக்கும் காலம் ஆதலால், வேப்பந்தார் அணிவோனான பாண்டியன் மேற்கொண்டு எதுவும் ஆராயாதவனாயினான். ஊர்காப் பாளரைக் கூவி அழைத்தான்; அவரும் வந்தனர். அவரிடம் 'இங்கே என் விருப்பிற்குரிய பூங்கோதையுடையாளின் காற்சிலம்பு, அடிப்பட்ட அக் கள்வனின் கையகத்தே இருந்தது என்றால், அவனைக் கொன்றுவிட்டு, அச் சிலம்பினையும் கைக்கொண்டு இங்கே வருக!' என்றான்.

## 18. காவலருடன் சென்றான்

காவலன் ஏவக் கருந்தொழிற் கொல்லனும்,
'ஏவல் உள்ளத்து எண்ணியது முடித்து எனத்,
தீவினை முதிர்வலைச் சென்றுபட் டிருந்த
கோவலன் தன்னைக் குறுகின னாகி—
'வலம்படு தானை மன்னவன் ஏவச்
சிலம்பு காணிய வந்தோர் இவர்' எனச்,
செய்வினைச் சிலம்பின் செய்தி எல்லாம்
பொய்வினைக் கொல்லன் புரிந்துடன் காட்ட—

காவலன் ஊர்காப்பாளரை ஏவச், கொலைத் தொழிலுக்குத் துணிந்த பொற்கொல்லனும், "உள்ளம் தூண்ட

நினைத்ததை முடிப்பேன்" என்று, தீவினையாகிய வலை தன்னைச் சூழ விரிக்கப் பட்டிருப்பவும், அதனை அறியாத வனாகத் தானே அதற்குள் வீழ்ந்துபட்டு இருந்த கோவலனைச் சென்று அணுகினான். அணுகி, "வென்றி காணும் படையினையுடைய மன்னவனின் ஏவலோடு, நின் கையிலுள்ள சிலம்பினைக் காண்பதற்காக வந்தவர் இவர்" என்றான். சிறந்த வேலைப்பாடுடைய அச் சிலம்பினைப் பற்றிய செய்திகளையெல்லாம், கொல்லன் பொய்ம்மை யாகக் கற்பித்து, 'அதுவே அரசியின் காற்சிலம்பு; அவன் களவாடிய கள்வன்' என, வந்த காவலருக்குக் காட்டியும் கூறினான்.

## 19. காவலரின் ஐயம்

'இலக்கண முறைமையின் இருந்தோன், ஈங்கு, இவன்
கொலைப்படு மகனலன்' என்று கூறும்
அருந்திறல் மாக்களை, அகநகைத்து உரைத்துக்,
கருந்தொழிற் கொல்லன் காட்டினன் உரைப்போன்:

'நல்லவனுக்கு உரிய இலக்கண முறைமையோடும் கூடிய வனாக இருக்கின்றான்; இங்கிருக்கும் இவன் களவாடிக் கொலை செய்யப்படுவதற்கு உரிய இழிமகன் அல்லன்' என்றனர் காவலர். கள்வரை அறிவதிலே அரிய ஆற்றலு டைய அவர்களைப் பொற்கொல்லன் எள்ளி நகையாடி னான். கோவலனைக் காட்டியவாறே, கொலைத் தொழிலினை மேற்கொண்ட அக்கொல்லன், மேலும் சொல் வானானான்:

## 20. கள்வர் திறன்

'மந்திரம், தெய்வம், மருந்தே நிமித்தம்,
தந்திரம், இடனே, காலம், கருவி என்று
எட்டுடன் அன்றே இழுக்குடை மரபின்
கட்டுண் மாக்கள் துணைஎனத் திரிவது;
மருந்திற் பட்டீர் ஆயின், யாவரும்,
பெரும்பெயர் மன்னனின் பெருநவைப் பட்டீர்;
மந்திரம் நாவிடை வழுத்துவர் ஆயின்,
இந்திர குமரரின் யாம்காண் குவமோ?
தெய்வத் தோற்றம் தெளிகுவர் ஆயின்,
கையகத்து உறுபொருள் காட்டியும் பெயர்குவர்.

மருந்தின் நங்கண் மயக்குவர் ஆயின்,
இருந்தோம் பெயரும் இடனுமார் உண்டோ?
நிமித்தம் வாய்த்திடின் அல்லது யாவதும்
புகற்கிலர், அரும்பொருள் வந்துகைப் புகுதினும்,
தந்திர-கரணம் எண்ணுவர் ஆயின்,
இந்திரன் மார்பத்து ஆரமும் எய்துவர்;
இவ்விடம் இப்பொருள் கோடற்கு இடம்எனின்,
அவ்விடத்து அவரை யார்காண கிற்பார்;
காலங் கருதி அவர்பொருள் கையுறின்,
மேலோர் ஆயினும் விலக்கலும் உண்டோ?
கருவி கொண்டுஅவர் அரும்பொருள் கையுறின்,
இருநில மருங்கின் யார்காண் கிற்பார்?
இரவே பகலே என்று இரண்டு இல்லை;
கரவுஇடம் கேட்பின், ஓர் புகலிடம் இல்லை;

மந்திரம், தெய்வம், மருந்து, நிமித்தம், தந்திரம், இடம், காலம், கருவி என்ற எட்டுவகையான சூழ்நிலைகளின் துணையால், குற்றம் பொருந்தின மரபினரான களவாடி உண்ணும் வாழ்வினர் திரிபவராவர். அவரது மருத்தின்கண் நீர் அகப்பட்டீரானால், பெரும் புகழையுடைய மன்னவனாற் பெருந்துயருக்கு உள்ளாவீர்கள். அவர் மந்திரத்தைத் தம் நாவினால் உச்சரித்தனராயின், அவரை இந்திரகுமாரர்களைப் போலவும் யாம் காண்போமே! தெய்வத் தோற்றத்தை அவர் தெளிவாக நினைப்பாரானால், தம் கையிலே உள்ள பொருளை நம்மிடம் காட்டிக் கொண்டே, நாம் செயலிழந்து நிற்கத் தாம் போய் விடுவாரே! மருந்தினால் நம்மை மயக்குவாரானால், இருந்த இடத்தைவிட்டு நாம் எழுந்து செல்வதற்கும் ஒரு வகை உண்டோ? 'நன்னிமித்தம்' வாய்க்கப் பெற்றால் அல்லாது, அரும்பொருள் தாமே வந்து தம் கையிற் புகினும், அதனை அவர்கள் சிறிதும் விரும்பாதவராயிற்றே! களவு நூலிற் கூறியுள்ள தந்திரக் கரணங்களை அவர்கள் எண்ணினரென்றால், இந்திரன் மார்பிடத்துக் கிடக்கும் ஆரத்தையும் அடைந்து விடுவார்களே! 'இவ்விடத்தில், இப்பொருளைக் களவாடுவதற்கு ஏற்ற இடம்' என்று அவர்கள் ஆராய்ந்து செய்தால், அவ்விடத்தில் அவரை யாரால்தான் காண முடியும்? ஏற்ற காலத்தை ஆராய்ந்து அவர் ஒரு பொருளிலே கைவைத்தால், மேலோராயிருந்தாலும், அதனை அவ்வாறு

செய்யாது விலக்குதல் உள்ளதாமோ? கருவிகொண்டு அவர் அரும்பொருளைக் கையாட முனைந்தால், இப் பெரிய உலகத்திலும் அவரைக் காண்பவர் யாரே? இரவு பகல் என்ற இரண்டுமே அவருக்குக் கிடையாதே! அவர் களவாடக்கூடிய இடத்தைக் கேட்டால், அவரினின்றும் தப்பிக்க நமக்கோர் புகலிடமும் ஏதும் கிடையாதே!

## 21. பழைய களவு

தூதர் கோலத்து வாயிலின் இருந்து,
மாதர் கோலத்து வல்லிருள் புக்கு,
விளக்கு நிழலில் துளக்கிலன் சென்று, ஆங்கு
இளங்கோ வேந்தன் துளங்கொளி ஆரம்
வெயிலிடு வயிரத்து, மின்னின் வாங்கத்
துயில்கண் விழித்தோன் தோளிற் காணான்
உடைவாள் உருவ, உறைகை வாங்கி,
எறிதொறும் செறித்த இயல்பிற்கு ஆற்றான்,
மல்லிற் காண, மணித்தூண் காட்டிக்
கல்வியின் பெயர்ந்த கள்வன்-தன்னைக்
கண்டோர் உளரெனிற் காட்டும்; ஈங்கிவர்க்கு
உண்டோ உலகத்து ஒப்போர்?' என்று அக்
கருந்தொழிற் கொல்லன் சொல்ல—

“அரச தூதனைப் போன்ற தோற்றத்துடன், அரண்மனை வாயிலிலே ஒருவன் இருந்தான். பெண்ணுருவுடன் அவன் நள்ளிருளிலே அரண்மனையுட் புகுந்தான். விளக்கின் நிழலிலே, யாருமறியாதவாறு மறைந்து சென்று, அங்கே துயின்று கொண்டிருந்த இளவரசனின் கழுத்திற் கிடந்த ஒளிபொருந்திய வயிரத்தையுடைய ஆரத்தையும் கவர்ந்தான். துயிலினின்றும் கண்விழித்த இளவரசன், தோளில் ஆரத்தைக் காணாது, உடை வாளை உருவிக் கள்வனை வெட்டுவதற்கு முயன்றான். அவனோ, அதனுறையினைக் கையிற் பற்றியவாறே, அவன் குத்தும் போதெல்லாம் தடுத்துக் கொண்டான். அதனால், அதனை விடுத்து அவனை மற்போரிட்டு வீழ்த்த எண்ணி இளவரசன் முயலவும், மணித்தூணினைத் தன்போல் மயக்கிக் காட்டி விட்டுத், தன் உருவுகரந்து மறையும் ஆற்றலால், அக்கள்வன் மறைந்தும் போயினான்! இன்றுவரை அவனைக் கண்டவர்

எவராவது இருந்தால் காட்டுங்கள் பார்க்கலாம். இவருக்கு நிகரானோர் இவ்வுலகிலே எவரேனும் உளரோ?" இவ்வாறெல்லாம் அக் கருந்தொழிற் கொல்லன் கூறினான்.

## 22. இளையோன் கூற்று

—ஆங்கு ஓர்,
திருந்துவேல் தடக்கை இளையோன் கூறும்;
"நிலனகழ் உளியன், நீலத் தானையன்,
கலன்நசை வேட்கையின் கடும்புலி போன்று,
மாரி நடுநாள் வல்லிருள் மயக்கத்து,
ஊர்மடி கங்குல் ஒருவன் தோன்றக்,
கைவாள் உருவஎன் கைவாள் வாங்க,
எவ்வாய் மருங்கினும் யானவன் கண்டிலேன்;
அரிதிவர் செய்தி; அலைக்கும் வேந்தனும்—
உரியது ஒன்று உரைமின், உறுபடை யீர்!" என,

அங்கே, திருந்திய வேலினைத் தன் அகன்ற கையிலே ஏந்தியவனாக இருந்த இளையோன் ஒருவன், அதனைக் கேட்டுக் கூறுவான் :

"தன் கையிடத்திலே நிலத்தினை அகழ்கின்ற உளியினை உடையவனாகவும், கருநீல உடை உடுத்தவனாகவும், அணிகலன்களைத் திருடுகின்ற ஆசையினாற் கடும்புலியினைப் போன்று, மழைக்காலத்து நள்ளிரவிலே, ஊரெல்லாம் அயர்ந்து உறங்கும் பொழுதிலே, ஒரு கள்வன் என்முன் தோன்றினான். அவன் தன் கைவாளை உருவ, யானும் என் கைவாளினை உருவினேன். அவனை எவ்விடத்தும் யான் கண்டிலேன். அவன் அங்கிருந்தும் மறைந்து போயினான். கள்வர் செயல் மிகவும் அரியது! வேந்தனும் நம்மை வருத்துவான். ஏதோ, செய்வதின்னதென்று சொல்லுங்கள். படைக்கலன் உடையவரே!"

## 23. கோவலன் வீழ்ந்தான்

கல்லாக் களிமகன் ஒருவன், கையில்
வெள்வாள் எறிந்தனன்! விலங்கூடு அறுத்தது;
புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப,
மண்ணக மடந்தை வான்துயர் கூரக்,

காவலன் செங்கோல் வளைஇய, வீழ்ந்தனன்,
கோவலன் பண்டை ஊழ்வினை உருத்து—என்.

அவ் வேளையிற், கள்வரைப் பற்றிய மெய்ப்பாடுகளைக் கல்லாத களிமகன் ஒருவன், தன் கையிலிருந்த வெள்ளிய வாளினாலே வீசினான். வாள், கோவலனின் உடலில் குறுக்காகப் பாய்ந்தது. புண்ணிலிருந்து உதிரம் குதித்துக் கொப்புளித்து எங்கும் பரந்தது. மதுரைக்கு அதிதேவதையான மதுராபதியென்னும் நிலமடந்தை மிக்க துயரத்தினை அடையவும், காவலனின் செங்கோல் வளையவும், கோவலனும் வெட்டுப்பட்டு வீழ்ந்தான். பண்டை ஊழ்வினையானது அவ்வாறு சினந்து வந்து அவனைப் பழிதீர்த்துக் கொண்டது!

## 24. வெண்பா

நண்ணும் இருவினையும் நண்ணுமின்கள், நல்அறமே;
கண்ணகி தன் கேள்வன் காரணத்தால்—மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே; பண்டை
விளைவாகி வந்த வினை.

பண்டை விளைவாகி வந்த வினையால் உலகிலே அதுவரை வளையாத செவ்விய ஆட்சியினையுடைய பாண்டியரின் செங்கோனும், கண்ணகியின் கணவனான கோவலனைக் காரணமாகக் கொண்டு வளைவுற்றது. அதனால் அனைவரும், 'இருவினையும் தவறாது வந்து சேரும் என்பதனை அறிந்து, என்றும் நல்லறமே செய்வீராக!

['பாண்டியனின் செங்கோல் வளையப் பழவினை காரணமும் கோவலன் வாயிலும் ஆயினான். கோவலனின் உயிர்போக அவன் பழவினை காரணமும், பாண்டியனது ஏவல் வாயிலும் ஆயிற்று.]

## 17

# ஆய்ச்சியர் குரவை

[கொச்சகக்கலி]
(உரை விரவி வந்தது)

[ஆயர் சேரியிலே பல தீய நிமித்தங்கள் தோன்றவும், அதனால் தீமை நேருமென்று அஞ்சிய ஆயமகளிர்கள், தம் குலதெய்வமான கண்ணனை வேண்டிக் குரவைக் கூத்து ஆடுகின்றனர்.]

## 1. தயிர் கடைய முற்பட்டனர்

'கயல் எழுதிய இமய நெற்றியின்
அயல் எழுதிய புலியும் வில்லும்
நாவலம் தண்பொழில் மன்னர்
ஏவல் கேட்பப் பார்அரசு ஆண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன் கோயிலிற்
காலை முரசம் கனைகுரல் இயம்பும்; ஆகலின்
நெய்ம்முறை நமக்குஇன்று ஆம் என்று
ஐயை தன் மகளைக் கூஉய்,
கடைகயிறும் மத்தும் கொண்டு
இடை முதுமகள் வந்துதோன்றும்-மன். 1

இமயநெற்றியிலே தன் அரசச்சின்னமாகிய கயல்மீனைப் பொறித்தவன் பாண்டியன். அதற்கு அயலாகப் புலியும் வில்லும் சோழராலும் சேரராலும் முறையே பின்னர்ப் பொறிக்கப்பட்டன. அச் சேரசோழரும், நாவலந்தீவில் அந் நாளிலுள்ள ஏனைய மன்னரும், தன் ஆணையைக் கேட்டு அதன்படியே நடந்துவர, இந்நிலவுலகம் முழுவதனையும் ஒரு குடைக்கீழ் அரசாண்டவன் பாண்டியன். அவன் முத்து மாலை அணிந்திருப்பவன்; வெண்கொற்றக் குடையினை உடையவன். அவன் அரண்மனையிலே காலைமுரசம் உரத்த குரலுடன் முழங்கிற்று. அதனைக் கேட்ட மாதரி, "அரண்மனையிலே இன்று நமக்கு நெய்ம்முறை" என்று, தன்

மகள் ஐயையைக் கூவி அழைத்தாள். கடைகயிறும் மத்தும் கொண்டவராக, மாதரியும் அவள் மகளும், தயிர்த்தாழி இருக்கின்ற இடத்திற்கு வந்து தோன்றினர்.

## 2. தீய குறிப்புகள்

[உரைப்பாட்டு மடை]

குடப்பால் உறையா; குவிஇமில் ஏற்றின்
மடக்கண்நீர் சோரும்; வருவது ஒன்று உண்டு; 2
உறிநறு வெண்ணெய் உருகா; உருகும்.
மறிதெறித்து ஆடா; வருவது ஒன்று உண்டு; 3
நான்முலை ஆயம் நடுங்குபு நின்றிரங்கும்;
மான்மணி வீழும்; வருவது ஒன்று உண்டு; 4

"குடங்களிலே உறையிட்டிருந்த பால் உறையாதிருக்கின்றது; திரண்ட திமில்களையுடைய ஆனேற்றின் அழகிய கண்களினின்றும் நீர் வழிந்துகொண்டிருக்கின்றது; அதனால் நமக்கு வருவதோர் தீமை ஒன்று உண்டு!

முதல்நாள் உறியிலே எடுத்துவைத்திருந்த மணமுள்ள வெண்ணெய், உருகவைத்தும் உருகாதிருக்கின்றது; துள்ளி விளையாடும் ஆட்டுக்குட்டிகள் ஆடாவாய் அசையாவாய்ச் சோர்ந்து கிடக்கின்றன. அதனால் நமக்கு வருவதோர் தீமை ஒன்று உண்டு!

நான்கு முலைக்காம்புகளையுடைய பசுநிரைகள், தம் உடல் நடுங்க நின்று கதறுகின்றன; அவற்றின் கழுத்திலே கட்டியிருந்த மணிகள் அற்று நிலத்திலே வீழ்கின்றன. அதனால், நமக்கு வருவதோர் தீமை ஒன்று உண்டு!"

(இவ்வாறு தீய நிமித்தங்கள் தோன்றக்கண்ட மாதரி, தன் மகளுடன் சொல்லிக் கவலைப்பட்டாள்.)

## 3. கருப்பம்

'குடத்துப்பால் உறையாமையும்,
குவி இமில் ஏற்றின்
மடக்கண் நீர்சோர்தலும்
உறியில் வெண்ணெய் உருகாமையும்,
மறி முடங்கி ஆடாமையும்,

மான்மணி நிலத்து அற்று வீழ்தலும்,
வருவதுஓர் துன்பம் உண்டு' என,
மகளை நோக்கி, "மனம் மயங்காதே!
மண்ணின் மாதர்க்கு அணி ஆகிய
கண்ணகியும் தான் காண
ஆயர்பாடியில் எருமன்றத்து
மாயவனுடன் தம்முன் ஆடிய
வாலசரிதை நாடகங்களில்,
வேல்நெடுங்கண் பிஞ்ஞையோடு ஆடிய
குரவை ஆடுதும் யாம்' என்றாள்—
'கறவை கன்று, துயர் நீங்குக எனவே.'

"குடத்திலிட்டு வைத்த பாலோ உறையவில்லை. குவிந் திமிலினை உடைய ஏற்றின் அழகிய கண்களோ நீர் சொ இன்றன. உறியில் வைத்திருந்த வெண்ணெயோ உருக்கவு உருகாது போயிற்று. ஆட்டுக்குட்டிகள் துள்ளியாடாவா முடங்கிக் கிடக்கின்றன. ஆநிரைகளின் கழுத்து மணிக நிலத்திலே அறுந்து வீழ்கின்றன. அதனால் நமக்கு வருவ தோர் துன்பம் உண்டு" என்று, மாதரி தன் மகளை நோக்கி கூறினாள். பின்னர் அவளைத் தேற்றுவாளாகி, மகளை நோக்கி, "மனம் மயங்காதே, மண்ணிலுள்ள மாதர்களுக் எல்லாம் அணிபோல்பவளாகிய கண்ணகியும் உடனிருந் காணுமாறு, ஆயர்பாடியிலே பூந்தாதுகள் நிறைந்த மன்ற திலே, தன் முன்னோனாகிய பலராமனுடன் கண்ண விளையாடிய வாலசரிதை நாடகங்களில், வேல்போன் நெடுங்கண்களையுடைய பிஞ்ஞைப் பிராட்டியோடு அவ ஆடிய குரவைக் கூத்தினை, நாமெல்லாம் இப்போத ஆடுவோம். 'கறவைகளும் கன்றுகளும் துயர் நீங்குக' என வேண்டி, நாம் குரவையாடலாம்' வருக!' என்றாள்.

## 4. கொளு

'காரி கதன் அஞ்சான் பாய்ந்தானைக் காமுறும், இவ்
வேரி மலர்க் கோதையாள்;

தேன் நிறைந்த மலர்க்கோதையினை அணிந்திருப்பவ இவள். கருநிறமுடைய எருதின் சீற்றத்தினைக் கண் அஞ்சாது பாய்ந்து, அதனைத் தழுவி அடக்கியவனை இவள் காதலிக்கின்றாள்.

மான்மணி நிலத்து அற்று வீழ்தலும்,
வருவதுஓர் துன்பம் உண்டு' என,
மகளை நோக்கி, "மனம் மயங்காதே!
மண்ணின் மாதர்க்கு அணி ஆகிய
கண்ணகியும் தான் காண
ஆயர்பாடியில் எருமன்றத்து
மாயவனுடன் தம்முன் ஆடிய
வாலசரிதை நாடகங்களில்,
வேல்நெடுங்கண் பிஞ்ஞையோடு ஆடிய
குரவை ஆடுதும் யாம்'என்றாள்—
'கறவை கன்று, துயர் நீங்குக எனவே.' 5

"குடத்திலிட்டு வைத்த பாலோ உறையவில்லை. குவிந்த திமிலினை உடைய ஏற்றின் அழகிய கண்களோ நீர் சொரிகின்றன. உறியில் வைத்திருந்த வெண்ணெயோ உருக்கவும் உருகாது போயிற்று. ஆட்டுக்குட்டிகள் துள்ளியாடாவாய் முடங்கிக் கிடக்கின்றன. ஆநிரைகளின் கழுத்து மணிகள் நிலத்திலே அறுந்து வீழ்கின்றன. அதனால் நமக்கு வருவதோர் துன்பம் உண்டு" என்று, மாதரி தன் மகளை நோக்கிக் கூறினாள். பின்னர் அவளைத் தேற்றுவாளாகி, மகளை நோக்கி, "மனம் மயங்காதே, மண்ணிலுள்ள மாதர்களுக்கு எல்லாம் அணிபோல்பவளாகிய கண்ணகியும் உடனிருந்து காணுமாறு, ஆயர்பாடியிலே பூந்தாதுகள் நிறைந்த மன்றத்திலே, தன் முன்னோனாகிய பலராமனுடன் கண்ணன் விளையாடிய வாலசரிதை நாடகங்களில், வேல்போன்ற நெடுங்கண்களையுடைய பிஞ்ஞைப் பிராட்டியோடு அவன் ஆடிய குரவைக் கூத்தினை, நாமெல்லாம் இப்போது ஆடுவோம். 'கறவைகளும் கன்றுகளும் துயர் நீங்குக' என வேண்டி, நாம் குரவையாடலாம்' வருக!' என்றாள்.

## 4. கொளு

'காரி கதன் அஞ்சான் பாய்ந்தானைக் காமுறும், இவ்
வேரி மலர்க் கோதையாள்; 6

தேன் நிறைந்த மலர்க்கோதையினை அணிந்திருப்பவள் இவள். கருநிறமுடைய எருதின் சீற்றத்தினைக் கண்டும் அஞ்சாது பாய்ந்து, அதனைத் தழுவி அடக்கியவனையே இவள் காதலிக்கின்றாள்.

## 5. இவனுக்கு இவள்!

(சுட்டு)

நெற்றிச் செகிலை அடர்த்தாற்கு உரிய, இப்
பொற்றொடி மாதராள் தோள். 7
மல்லல் மழவிடை ஊர்ந்தாற்கு உரியள், இம்
முல்லையம் பூங்குழல்-தான். 8
நுண்பொறி வெள்ளை அடர்த்தாற்கே ஆகும், இப்
பெண்கொடி மாதர்-தன் தோள். 9
பொற்பொறி வெள்ளை அடர்த்தாற்கே ஆகும் இந்
நற்கொடி மென்முலை தான். 10
வென்றி மழவிடை ஊர்ந்தாற்கு உரியள், இக்
கொன்றையம் பூங்குழ லாள். 11
தூநிற வெள்ளை அடர்த்தாற்கு உரியள், இப்
பூவைப் புதுமல ராள். 12

நெற்றியிலே சிவந்த சுட்டியையுடைய காளையை அடக்கியவனுக்கே, இப் பொன்னாலாகிய தொடியணிந்த பெண்ணின் தோள்கள் தழுவுதற்கு உரியன! வலிமிக்க அவ் இளைய ஏற்றினைத் தழுவி அதனை ஏற் ஊர்ந்தவனுக்கே இம் முல்லை மலரினைச் சூட்டிய பூங்குழலாள் உரியவளாவாள்! நுண்மையான புள்ளிகளையுடைய வெள்ளை யேற்றினை வென்றவனுக்கே கொடி போன்ற இப்பெண்ணின் அழகிய தோள்கள் உரியனவாகும்! அழகிய பொன்னிறப் புள்ளிகளையுடைய வெள்ளை ஏற்றினை வென்றவனுக்கே, இந்த அழகிய கொடிபோன்றவளின் மென்முலைகள் தழுவுதற்கு உரியன! அனைவரையும் வெற்றிகொண்ட இந்த இளைய ஏற்றினை ஊர்ந்தானுக்கே, இக் கொன்றைப்பழம் போலும் பூங்குழலாள் உரியவளாவாள். தூய நிறமான அவ்வெள்ளையை வென்றவனுக்கே, இப் பூவைப் புதுமலராள் உரியவளாவாள்.

## 6. பெயரிட்டனள்

(எடுத்துக் காட்டு)

ஆங்கு,
'தொழுவிடை ஏறு குறித்து வளர்த்தார்
எழுவர் இளங் கோதை யார்'—

என்று, தன் மகளை நோக்கித்
தொன்றுபடு முறையால் நிறுத்தி,
இடைமுது மகள்இவர்க்குப்
படைத்துக்கோள் பெயர் இடுவாள்
குடமுதல் இடமுறை யாக்: குரல், துத்தம்,
கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என,
விரிதரு பூங்குழல் வேண்டிய பெயரே.

"இவ்வாறாக, இடைக்குலக் கன்னியரான இள கோதையர் எழுவர், தமக்கென ஒவ்வொரு ஏற்றினைக் குறிப்பிட்டு, மேற்சொன்னபடி ஏழு எருதுகளைத் தம் மனை வினைப் போட்டிக்காக வளர்த்தனர்" என்று, தன் மகளை நோக்கி மாதரி கூறினாள். பின்னைத் தொன்றுதொட்டு வருகின்ற முறைமைப்படி அப்பெண்களை நிறுத்தி, அவர்களுக்குப் 'படைத்துக்கோட் பெயர்' இடுவாளாயினாள். குடதிசையிலே 'குரல்' நரம்பு முதலாகவும், பின் இடமுறையாகக் கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பவையே விரிதரு பூங்குழலாள் இடுவதற்கு விரும்பிய பெயர்களாகும். [இவ்வாறு ஆடுவார்க்குத் தனித்தனி இசைப் பெயர்களையிடுதல் மரபு.]

## 7. வரிசையாக நின்றனர்

(படைத்துக்கோள் பெயர்)

மாயவன் என்றாள், குரலை; விறல்வெள்ளை
ஆயவன் என்றாள், இளி தன்னை; ஆய்மகள்
பின்னையாம் என்றாள், ஓர் துத்தத்தை; மற்றையார்
முன்னையாம் என்றாள் முறை.

மாயவன் சீர் உளார், பிஞ்ஞையும் தாரமும்,
வால்வெள்ளை சீரார், உழையும் விளரியும்,
கைக்கிளை பிஞ்ஞை இடத்தாள்; வலத்துளாள்
முத்தைக்கு நல் விளரி-தான்:
அவருள்,
வண்துழாய் மாலையை மாயவன் மேலிட்டுத்
தண்டாக் குரவை-தான் உட்படுவாள்,—'கொண்ட
வையம் அளந்தான்-தன் மார்பில் திருநோக்காப்

பெய்வளைக் கையாள்நம் பின்னை-தான் ஆம் என்றே'
'ஐ!' என்றாள் ஆயர் மகள். 16

'குரல்' நரம்பின் பெயருடையவளை, 'மாயவன்' என்றாள். வெற்றிமிக்க வெள்ளை நிறத்தோனான 'பலராமன்' என்று இளிப்பெயர் இடப்பட்டவளைக் கூறினாள். துத்தத்தைப் 'பின்னை' என்றாள். மற்றையவரை 'முன்காலத்து அவனோடிருந்த நம் ஆயமகளிர்' என்றாள். 'மாயவன்' எனக் கூறப்பட்ட (குரல்)வளின் பின்னர்ப் பின்னையும் தாரமும் நின்றனர். 'பலதேவன்' எனப் பெயர் பெற்ற பெண்ணினை அடுத்து உழையும் விளரியும் நின்றனர். 'கைக்கிளை' என்பவள் பின்னைக்கு இடப்பக்கமாக நின்றாள். 'முத்தை' என்னும் சிறப்புப்பெற்ற தார நரம்பிற்கு வலப்பக்கத்திலே 'விளரி' என்பவள் நின்றாள்.

அவ் வேழு மகளிரும் அவ்வாறு முறைப்படி நின்றபின், மாயவனின் கழுத்திலே வளமான துளபமாலையைப் பின்னை இட்டனள். இட்டபின், 'கூத்தநூல்' இயல்பினின்றும் மாறுபடாத வகையிலே, அவர்கள் குரவையாடத் தொடங்கினர். 'சிறப்பினைக் கொண்ட வையத்தினை அளந்தவன். தன் மார்பிலே இருக்கும் திருமகளினையும் நோக்காதபடி செய்த வளைபெய்த கையினை உடையாள், நம் பின்னைதாம்' என்று வியந்து கூறி, ஆர்ப்பரித்தாள் ஆயர்மகளான மாதரி.

## 8. ஆடுவோம் வருக

(கூத்துள் படுதல்)

அவர்—தாம்,
செந்நிலை மண்டிலத்தாற் கற்கடகக் கைகோஒத்து
அந்நிலையே ஆடற்சீர் ஆய்ந்துளார்—முன்னைக்
குரற்கொடி தன்கிளையை நோக்கிப், 'பரப்பு உற்ற
கொல்லைப் புனத்துக் குருந்து ஒசித்தான் பாடும்,
முல்லைத் தீம் பாணி' என்றாள். 17

எனாஅக்,
குரல்மந்தம் ஆக, இளி சமன் ஆக,
வரன்முறையே துத்தம் வலியா, உரனிலா
மந்தம் விளரி பிடிப்பாள், அவள் நட்பின்
பின்றையைப் பாட்டெடுப் பாள்; 18

இவ்வாறு, குரல் முதலாகப் பெயரிடப்பட்ட பெண்கள், முதலிற் சமநிலையாக நின்று, பின் வளையமாகக் கற்கடகக் கைகோத்து நின்றுகொண்டு, அந்நிலையே ஆடுதற்கான தாள உறுப்புக்களை ஆராய்ந்தனர். மாயவனாகக் குறிக்கப் பட்டவள் தன் இளையாகிய பின்னையாகக் குறிக்கப்பட்ட வளை நோக்கி, 'அகன்ற கொல்லையாகிய புனத்தின்கண் குருந்த மரத்தினை ஒடித்த நம் கண்ணனை முல்லைப்பண் ணால் பாடிக் குரவையாடுவோம், வருக' என்றாள்.

அங்ஙனம் பாடத் தொடங்கியவர்களுள், குரல் தானத்தி விருந்தவளின் குரல் மந்தசுரமாகவும், இளி தானத்திலிருந்த வளின் குரல் சமசுரமாகவும், வரன்முறைப்படி துத்த ஸ்தானத்தில் இருந்தவளின் குரல் வல்லொலியாவும் ஒலித் தன. வலியில்லாத மந்தசுரத்தினைப்பற்றி மாயவன் தானத் திலிருந்த விளரி என்பவள் பாட, அவளுக்கு நட்பு ஆகிய துத்த நரம்பினையும் பின்னைப் பிராட்டியையும் குறித்து நின்றவளும் அவளைத் தொடர்ந்து பாட்டுப் பாடினாள்.

## 9. மாயவனைப் பாடல்

(பாட்டு)

கன்று குணிலாக் கனிஉதிர்த்த மாயவன்
இன்று நம் ஆனுள் வருமேல், அவன் வாயிற்
கொன்றையம் தீம்குழல் கேளாமோ! தோழீ! 19

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் ஆனுள் வருமேல், அவன் வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ, தோழீ! 20

கொல்லையம் சாரல் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் ஆனுள் வருமேல், அவன் வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ! தோழீ! 21

தொழுனைத் துறைவனோடு ஆடிய பின்னை—
அணிநிறம் பாடுகேம் யாம்! 22

இறுமென் சாயல் நுடங்க நுடங்கி
அறுவை ஒளித்தான் வடிவென்கோ யாம்?
அறுவை ஒளித்தான் அயர, அயரும்
நறுமென் சாயல் முகமென்கோ யாம்? 23

வஞ்சம் செய்தான் தொழுனைப் புனலுள்
நெஞ்சங் கவர்ந்தான் நிறைஎன் கோயாம்?
நெஞ்சங் கவர்ந்தான் நிறையும் வளையும்
வஞ்சம் செய்தான் வடிவென் கோயாம்? 24
தையல் கலையும் வளையும் இழந்தே
கையில் ஒளித்தாள் முகமென் கோயாம்?
கையில் ஒளித்தாள் முகங்கண்டு அழுங்கி
மையல் உழந்தாள் வடிவென் கோயாம்? 25

தோழி! கன்றினையே குறுந்தடியாகக் கொண்டு, விளாங் கனியினை உதிர்த்தான் மாயவன். இன்று, அவன் நம் ஆநிரையுள் வருவானானால், அவன் வாயிலிருந்து வரும் கொன்றைக் குழலின் இனிய ஒலியை நாமும் கேட்போமோ?

பாம்பையே மத்தின் கயிறாகச் சுற்றிப், பாற்கடலைக் கடைந்தான் மாயவன். இவ்விடத்தே, நம் ஆநிரையுள் அவன் வந்தால், அவன் வாயினால் ஊதி எழுப்பும் ஆம்பற் குழலோசையினை, நாமும் கேட்போமோ?

கொல்லையைச் சார்ந்த இடத்திலே, முன்னர்க் குருந்த மரத்தையே முறித்துவிட்டவன் கண்ணன். இன்று பகல் வேளையிலே, அவன் நம் ஆநிரையுள் வந்தானென்றால், அவன் வாயினால் ஊதுகின்ற, முல்லைக்கொடி சுற்றிய இனிய குழலின் ஓசையினை, நாமும் கேட்போமோ?

இற்றுவிடுவது போன்ற நுண்ணிடையும் மென்சாயலும் கொண்டு, இடைத்துவளும் வண்ணம் அசைந்தசைந்து வருபவளது, புடைவையை எடுத்து ஒளித்துவைத்துக் கொண்டான் அந்த மாயவன். அதனால், அவள் நாணத்தால் உடல் ஒடுங்கி அயர்ந்தாள். அவ்வேளை, அந்த நெறிய மென்சாயலுடையவளது முகத்தின் தோற்றத்தை, என்னவென்று சொல்லுவோம்?

அவன் வஞ்சம் செய்தான். காளிந்தியாற்று நீருள் அவன் அவள் நெஞ்சினைக் கவர்ந்தான். அவள் உள்ளத்தின் நிறையினை யாம் என்ன சொல்வதோ? 'நெஞ்சம் கவர்ந்தவளின் நிறையும் வளையும் வஞ்சம் செய்தவனின் வடிவாயிற்றே' என்றுதான் கூறுவோமோ?

அந் தையலாள், தன் கலையினையும் அவன் வஞ்சத்தால் இழந்தாள். அவன் அருளாமையினால் தன் வளைகளையும் தோற்றாள். தன்னைச் சூழ்ந்த நாணத்தினையும் கையினாலே மறைத்தாள். அவள் முகத்தின் தன்மையை

# 18

## துன்ப மாலை

[மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா]

[குரவையின் முடிவிலே, மாதரி வையையிலே நீராடி விட்டு வரப் போயினாள். கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேட்டுக் கண்ணகி புலம்பினாள். காய்கதிர்ச் செல்வனை விளித்துக் கேட்டாள். "நின் கணவன் கள்வனல்லன்" என்ற குரல் ஒன்று வானில் எழுந்தது.]

### 1. விரைவொடு வந்தாள்

ஆங்கு,
ஆயர் முதுமகள்; ஆடிய சாயலாள்,
பூவும், புகையும், புனைசாந்தும், கண்ணியும்,
நீடுநீர் வையை நெடுமால் அடிஏத்தத்
தூவித் துறைபடியப் போயினாள்; மேவிக்
குரவை முடிவிலோர் ஊர்அரவங் கேட்டு,
விரைவொடு வந்தாள் உளள்;

குரவை முடிந்தபின்னர், ஆயர்முதுமகளான மாதரி தளர்ந்த நடையினளாகப், பூவும், புகைப்பொருள்களும், புனைவதற்கான சாந்தும், கண்ணியும் எடுத்துக்கொண்டு, நீர்நிறைந்த வையைக் கரையிலிருந்த நெடுமால் திருவடிகளைப் போற்றவும், மலர்தூவி வழிபட்டு வரவும், வையைத் துறையிலே நீராடி வரவும் போயினாள். அவ்வேளையிலே, ஊரிலே எழுந்தவோர் ஆரவாரத்தைக் கேட்டு, ஆயர்பாடிக்கு விரைந்து வந்தாள் ஆயமகள் ஒருத்தி.

### 2. கண்ணகியின் துடிதுடிப்பு

அவள்-தான்,
சொல்லாடாள், சொல்லாடா நின்றாள்; அந் நங்கைக்குச்
சொல்லாடும், சொல்லாடுந் தான்:
'எல்லா! ஓ!—
காதலற் காண்கிலேன்; கலங்கிநோய் கைம்மிகும்;
ஊதுலை தோற்க உயிர்க்குமென் நெஞ்சன்றே;

ஊதுலை தோற்க உயிர்க்குமென் நெஞ்சாயின்,
ஏதிலார் சொன்னது எவன்? வாழி யோ, தோழீ!
நன்பகற் போதே நடுக்குநோய் கைம்மிகும்;
அன்பனைக் காணாது அலவுமென் நெஞ்சன்றே;
அன்பனைக் காணாது அலவுமென் நெஞ்சாயின்,
மன்பதை சொன்னது எவன்? வாழி யோ; தோழீ!
தஞ்சமோ தோழீ! தலைவன் வரக் காணேன்;
வஞ்சமோ உண்டு; மயங்குமென் நெஞ்சன்றே,
வஞ்சமோ உண்டு; மயங்குமென், நெஞ்சாயின்
எஞ்சலார் சொன்னது எவன்? வாழி யோ, தோழீ!

அங்ஙனம் வந்தவள், யாருடனும் பேசாதும், எதுவும் உரையாதும் நின்றாள். அவள் நிலைகண்டு பலரும் அவளுடன் சொல்லாடி, 'என்ன செய்தி' என அறிய முயன்றனர்.

'எல்லாவோ! மதுரை நகருள் சென்ற என் காதலனை வரக் காணேன். உள்ளம் கலங்குகின்றேன். துன்பம் கட்டுக் கடங்காத தாகின்றது. துருத்திமுனை நெருப்பின் வெம்மையும் தோற்குமாறு என் நெஞ்சம் அழல்எழ உயிர்க்கின்றது. அதனால் அயலார்கள் சொன்னதுதான் என்னவோ?

'நல்ல பகற்பொழுதிலேயே என்னை நடுங்கச் செய்கின்ற துன்பம் எல்லை கடந்து விட்டது. அன்பனைக் காணாமல் என் நெஞ்சம் வருந்துகின்றது. அதனால் ஊர் மக்கள் சொன்னதுதான் யாதோ, தோழீ!

'தோழீ! தலைவனை வரக்காணேன். இனி யார் தஞ்சமோ அறிகிலேன்! ஏதோ வஞ்சகம் நடந்திருக்கின்றதென்றே என் நெஞ்சம் மயங்குகின்றது. அதனால், ஊரிலுள்ளார் சொன்னதுதான் யாதோ?" என்று கேட்டாள் கண்ணகி.

## 3. அவள் சொன்னது

சொன்னது:—
'அரைசுறை கோயில் அணியார் ஞெகிழம்
கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே,
கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே,
குரைகழல் மாக்கள் கொலைகுறித் தனரே!'

'அரசன் வாழ்கின்ற அரண்மனையிலிருந்த அழகுமிக்க சிலம்பினைச் சிறிதேனும் அரவம் எழாமல் கவர்ந்த கள்வ

னாரும் என்று, வீரக் கழல் அணிந்த ஊர்காவலர், நின் கணவனைக் கொலை செய்துவிட்டனர்'' என்றாள் அவள்.

## 4. ஏங்கி மயங்கினாள்

எனக் கேட்டுப்
பொங்கி எழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கள் முகிலொடுஞ் சேணிலம் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள்; தன் கேள்வனை
'எங்கணாஅ!' என்னா இனைந்து, ஏங்கி, மாழ்குவாள்.

அவள் அப்படிச் சொல்லக் கேட்டதும், கண்ணகி பொங்கி எழுந்தாள். நிலவுபொழியும் திங்கள் தன்னைச் சூழ்ந்துள்ள கார்மேகத்தோடும் பெருநிலத்திலே வீழ்ந்தது போலத் தரையிலே முகஞ்சேர அந்நிலையே மயங்கி விழுந்தாள். செங்கண் சிவக்க அழுதாள். தன் கணவனை 'என் கண்ணா! என் கண்ணா' என்று கூவியழைத்தபடி குரலெடுத்து அரற்றி, ஏங்கி ஏங்கி, மயங்கினாள்!

## 5. ஏங்கி அழுவலோ?

'இன்புறு தங்கணவர் இடர்எரி அகம்மூழ்கத்
துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப் போல்
மன்பதை அலர்தூற்ற, மன்னவன் தவறிழைப்ப,
அன்பனை இழந்தேன்யான் அவலம்கொண் டழிவலோ?
நறைமலி வியன்மார்பின் நண்பனை இழந்தேங்கித்
துறைபல திறம்மூழ்கித் துயர்உறு மகளிரைப்போல்
மறனொடு திரியும்கோல் மன்னவன் தவறிழைப்ப,
அறன்எனும் மடவோய் யான் அவலம்கொண் டழிவலோ?
தம்முறு பெருங்கணவன் தழல்எரி அகம்மூழ்கக்,
கைம்மைகூர் துறைமூழ்கும் கவலைய மகளிரைப்போல்
செம்மையின் இகந்தகோல் தென்னவன் தவறிழைப்ப,
இம்மையும் இசைஒரீஇ, இனைந்து ஏங்கி அழிவலோ?

இன்புறுதற்குரிய தம் கணவர் இடர்செய்யும் நெருப்பின் அகத்திலே மூழ்கவும், தம் உடல் துன்புறுவனவாய் நோன்புகளை நோற்றுக், கைம்மை பூண்டு துயரமுறும் பெண்டிர்களைப் போல, மக்களெல்லாம் பழித்துப் பேசுமாறு,

மன்னவன் தவறினைச் செய்விக்க அதனால் அன்பனை இழந்த யானும், அவலங்கொண்டு அழுவேனோ?

மணமிகுந்த பரந்த மார்பினையுடைய கணவரை இழந்து ஏக்கமுற்றுப், புண்ணிய தீர்த்தங்கள் பலதிறப்பட்டவற்றினும் நீராடித் துயருறும் மகளிரைப்போல, மறனொடு திரிவுற்ற செங்கோலனாகிய மன்னவன் என் கணவனுக்குத் தவறுசெய்ய, அறன் என்னும் அறிவற்றோய்! யானும் அவலத்தினை ஏற்றுக்கொண்டு அழிவேனோ?

தம்முடன் மணந்து வாழ்ந்த பெருமைமிக்க கணவர் சுடுகின்ற தீயிடத்தே மூழ்கவும், கைம்மை நோன்பு என்று கூறப்படுவனவற்றுள் மூழ்கி வருந்தும், கவலையே உருவான மகளிரைப் போல, செம்மையினின்றும் நீங்கிய செங்கோலினை உடையவனாகித் தென்னவன் தவறு இழைத்தால், இம்மையிலும் புகழைவிட்டுப் பழிக்கு ஆளாகி, ஏங்கி ஏங்கி யானும் அழிவேனோ?

## 6. கதிரவன் சொன்னது!

'காணிகா,
வாய்வதின் வந்த குரவையின் வந்தீண்டும்
ஆய மடமகளிர் எல்லீருங் கேட்டீமின்;
ஆய மடமகளிர் எல்லீருங் கேட்டைக்க;
பாய்திரை வேலிப் படுபொருள் நீஅறிதி;
காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்?'—
'கள்வனோ அல்லன்; கருங்கயற்கண் மாதராய்!
ஒள்ளெரி உண்ணும், இவ்வூர்' என்றது, ஒருகுரல்.

எல்லாரும் பாருங்கள்! தீநிமித்தம் ஏற்பட்டது கருதி நன்மை வரும் பொருட்டாக நிகழும் இக் குரவைக் கூத்தினுள் வந்து திரண்ட ஆயர் மடமகளிரான எல்லாருமே கேளுங்கள்! பரந்த அலைகளையுடைய கடலினை வேலியாகவுடைய இவ்வுலகின்கண் நிகழ்கின்ற பொருள்களை எல்லாம் நீஅறிவாயே! காய் கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்?" என்று கேட்டுக் கண்ணகி குமுறினாள்.

'கருங்கயல் போன்ற கண்களையுடைய மாதராளே! அவன் கள்வனல்லன்; இவ்வூரினைப் பெருந்தீ உண்ணப் ,போகின்றது' என்றெழுந்தது ஒரு குரல்.

# 19

## ஊர்சூழ் வரி

[அயன்மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா]

[எழுந்து ஒலித்த அக்குரலை அனைவருமே கேட்டனர். கண்ணகியும், தன்பாலிருந்த மற்றொரு சிலம்பினைத் தன் கையிலே எடுத்துக் கொண்டவளாகத், தன் கணவனின் உடலினைக் காணப் புறப்பட்டாள். அவன் கிடந்த நிலையைக் கண்டு அரற்றினாள். அவன் வாய்திறந்து பேசவும் கேட்டாள். பின்னர், அரசனிடம் செல்ல நினைந்து புறப்பட்டு, அரண்மனையையும் சென்று அடைந்தாள்.]

### 1. ஈதொன்று கேட்பீர்!

என்றனன் வெய்யோன் இலங்கீர் வளைத்தோளி
நின்றிலள்—நின்ற சிலம்பொன்று கையேந்தி,
'முறையில் அரசன்-தன் ஊரிருந்து வாழும்
நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்காள்! ஈதொன்று:
பட்டேன், படாத துயரம், படுகாலை
உற்றேன்; உறாதது; உறுவனே? ஈதொன்று:
கள்வனோ அல்லன் கணவன்; என் காற்சிலம்பு
கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றாரே ஈதொன்று
மாதர்த் தகைய மடவார்கண் முன்னரே,
காதற் கணவனைக் காண்பனே! ஈதொன்று:
காதற் கணவனைக் கண்டால், அவன் வாயில்
தீதறு நல்உரை கேட்பனே! ஈதொன்று:
தீதறு நல்உரை கேளா தொழிவேனேல்,
நோதக்க செய்தாள் என்று எள்ளல்! ஈதுஒன்று—என்று

வெய்யோன் அவ்வாறு கூறினான். அரும்பு வேலைப் பாடமைந்த தோள்வளையினளான கண்ணகி, அவ்விடத்தே சிறிது நேரமும் நின்றிலள். தன்பால் எஞ்சிநின்ற சிலம்பாகிய மற்றொன்றினைத் தன் கையிலே ஏந்தியவளாக, நகரினுள்ளே புறப்பட்டாள். "முறையற்ற இவ்வரசனுடைய பேரூரில் இருந்து வாழ்கின்ற நிறையுடைய பத்தினிப் பெண்டிர்களே! இஃது ஒன்று கேட்பீராக :

# 19

## ஊர்சூழ் வரி

[அயன்மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா]

[எழுந்து ஒலித்த அக்குரலை அனைவருமே கேட்டனர். கண்ணகியும், தன்பாலிருந்த மற்றொரு சிலம்பினைத் தன் கையிலே எடுத்துக் கொண்டவளாகத், தன் கணவனின் உடலினைக் காணப் புறப்பட்டாள். அவன் கிடந்த நிலையைக் கண்டு அரற்றினாள். அவன் வாய்திறந்து பேசவும் கேட்டாள். பின்னர், அரசனிடம் செல்ல நினைந்து புறப்பட்டு, அரண்மனையையும் சென்று அடைந்தாள்.]

### 1. ஈதொன்று கேட்பீர்!

என்றனன் வெய்யோன் இலங்கீர் வளைத்தோளி
நின்றிலள்—நின்ற சிலம்பொன்று கையேந்தி,
'முறையில் அரசன்-தன் ஊரிருந்து வாழும்
நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்காள்! ஈதொன்று;
பட்டேன், படாத துயரம், படுகாலை
உற்றேன்; உறாதது; உறுவனே? ஈதொன்று;
கள்வனோ அல்லன் கணவன்; என் காற்சிலம்பு
கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றாரே ஈதொன்று
மாதர்த் தகைய மடவார்கண் முன்னரே,
காதற் கணவனைக் காண்பனே! ஈதொன்று;
காதற் கணவனைக் கண்டால், அவன் வாயில்
தீதறு நல்உரை கேட்பனே! ஈதொன்று;
தீதறு நல்உரை கேளா தொழிவேனேல்,
நோதக்க செய்தாள் என்று எள்ளல்! ஈதுஒன்று—என்று

வெய்யோன் அவ்வாறு கூறினான். அரும்பு வேலைப் பாடமைந்த தோள்வளையினளான கண்ணகி, அவ்விடத்தே சிறிது நேரமும் நின்றிலள். தன்பால் எஞ்சிநின்ற சிலம்பாகிய மற்றொன்றினைத் தன் கையிலே ஏந்தியவளாக, நகரினுள்ளே புறப்பட்டாள். "முறையற்ற இவ்வரசனுடைய பேரூரில் இருந்து வாழ்கின்ற நிறையுடைய பத்தினிப் பெண்டிர்களே! இஃது ஒன்று கேட்பீராக :

'என் துன்பமெல்லாமே ஒருவழியாக மறைந்து கொண்டிருந்த வேளையிலே, படமுடியாத பெருந்துயரம் யான் பட்டேன். இதுவரை யான் அடையாத பெருந்துன்பத்தினை இப்போது பெற்றுவிட்டேன். இனி, இஃது ஒன்றும் செய்வேன். என் கணவன் கள்வனல்லன். என் காற்சிலம்பினைக் கொள்ளும் விலையின்பொருட்டாக என் கணவனையே கொன்றனரே! இஃதோர் அறக் கேடு.

'தன் கணவரால் காதலிக்கும் தகுதியுடைய மடவார்களின் கண்முன்னரே, என் அன்புடைய கணவனை யான் காண்பேன். இஃது ஒன்று உறுதி. என் காதற் கணவனைக் கண்டால், அவன் வாய்திறந்து கூறும் தீதற்ற நல்ல சொற்களையும் கேட்பேன். இதுவும் ஓர் உறுதி. அவ்வாறு தீதற்ற சொற்களை அவன் வாயாற் கேளாது போவேனாயின், 'அவன் வருந்தத்தக்கன செய்தவள் இவளே' என்று, என்னை இகழுங்கள். இதுவும் ஒன்று.'

## 2. ஊரவர் மயங்கினர்!

அல்லலுற்று ஆற்றாது, அழுவாளைக் கண்டு, ஏங்கி,
மல்லல் மதுரையார் எல்லாருந் தாம் மயங்கிக்—
'களையாத துன்பம் இக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்தது இதுவென்கொல்?
மன்னவர் மன்னன் மதிக்குடை வாள்வேந்தன்
தென்னவன் கொற்றம் சிதைந்தது இதுவென்கொல்?
மண்குளிரச் செய்யும் மறவேல், நெடுந்தகை
தண்குடை வெம்மை விளைத்தது இதுவென்கொல்?
செம்பொற் சிலம்பு ஒன்று கைஏந்தி நம்பொருட்டால்
வம்பப் பெருதெய்வம் வந்தது இதுவென்கொல்?
ஐஅரி உண்கண் அழுது ஏங்கி அரற்றுவாள்
தெய்வம்உற் றாள்போலும் தகையள், இதுவென்கொல்?'

இவ்வாறு வருத்தமுற்றுப் புலம்பித் தன் துயரத்தினைப் பொறுக்கமாட்டாது அழுகின்ற கண்ணகியைக் கண்டு ஏங்கி, வளமிகுந்த மதுரை நகரத்தினர் எல்லாரும், தாமும் செய்வது அறியாது மயங்கினர். 'நீக்கவொண்ணாத பெருந் துன்பத்தினை இக் காரிகைக்குக் காட்டி, இதுவரை வளையாத நம் மன்னவனின் செங்கோல் முறைமையும் வளைந்ததே! இஃது என்னவோ?' எனக் கலங்கினர்.

மன்னவர் மன்னன், திங்கள் போன்ற அருள்விளங்கும் வெண்கொற்றக் குடையினையும், வாள் வலிமையினையும் உடைய வேந்தன், தென்னவன்! அவன் கொற்றமும் இவ்வாறு சிதைந்ததே! இஃது என்ன காரணமோ?'' என மயங்கினர்.

'தன் ஆட்சிக்குட்பட்ட நிலமெல்லாம் தன் அருளால் குளிருமாறு செய்கின்ற, வெற்றிவேலும், சிறந்த தகுதியும் உடையவனது தண்மை நிரம்பிய குடை நிழலோ, இவ்வாறு வெம்மை விளைத்தது! இஃது என்ன கேட்டிற்கோ?' எனக் கலங்கினர்.

'செம்பொற் சிலம்பு ஒன்றைக் கையிலே ஏந்தியவாறு புதிய பெருந்தெய்வம் ஒன்று வந்ததே! இது என்ன காரணத்திற்கோ?' என்று அயர்ந்தனர்.

'அழகிய செவ்வரி பரந்த, மைதீட்டப்பெற்ற கண்களை உடையவள்; இப்படியாக அழுது ஏங்கி அரற்றுகின்றாள்; தெய்வம் வந்து உற்றவளே போலத் தோற்றுகின்றாள்! இஃது என்ன காரணமோ?' என அஞ்சினர்!

## 3. கண்டாள் கணவனை!

என்பன சொல்லி, இனைந்து ஏங்கி, ஆற்றவும்
மன்பழி தூற்றும் குடியதே மாமதுரைக்
கம்பலை மாக்கள் கணவனைத் தாங்காட்டச்
செம்பொற்கொடி அனையாள் கண்டாளைத்
தான் காணான்.
மல்லன்மா ஞாலம் இருளூட்டி, மாமலைமேல்,
செவ்வென் கதிர்சுருங்கிச் செங்கதிரோன்
சென்றொளிப்பப்
புல்லென் மருள்மாலைப் பூங்கொடியாள் பூசலிட,
ஒல்லென் ஒலி படைத்தது ஊர்.
வண்டார் இருங்குஞ்சி மாலைதன் வார்குழல்மேற்
கொண்டாள், தழீஇக் கொழுநன்பாற், காலைவாய்;
புண்தாழ் குருதி புறம்சோர, மாலைவாய்,
கண்டாள், அவன் தன்னைக்: காணாக் கடுந்துயரம்!

என்பனவாகப் பலப்பல சொல்லி வருத்தமுற்று ஏங்கினர் மதுரையின் மக்கள். மன்னனைப் பழிதூற்றுகின்ற குடிமக்களுடையதாயிற்று மாமதுரை. ஆரவாரத்தோடு வந்தவர்

சிலர், அவள் கணவனை அவளுக்குக் காட்டினர். செம்... கொடி போன்ற கண்ணகி, அவனைக் காணவும், அவன் அவளைக் காணாதேயே தரையிற் கிடந்தான்.

வளம் நிறைந்த பேருலகத்திலே எங்கும் இருள் ஊட்டி விட்டுப், பெருமலைமேல் தன் சிவந்த கதிர்களைச் சுருக்கிக் கொண்டவனாச் செங்கதிரோனும் சென்று மறைந்தான்! 'புல்' லென்ற மருட்சியினை உடைய "மாலை" என்னும் பூங்கொடியானவள் பூசலிட, அதனால் "... லென்னும் பேரொலியை உடையதாயிற்று மதுரைப்பெரு...

அற்றைக் காலைப்பொழுதிலே தன் கணவனைத் தழுவி அவனிடத்திலிருந்து, வண்டுகள் சூழ்கின்ற கரிய அவன் நறு மயிரிற் சூடிய மாலையை ஆர்வமுடன் வாங்கித் தன் நீண்ட குழலிலே சூட்டி மகிழ்ந்தவள் அவள்! மாலை வேளையிலே வெட்டுண்ட புண்ணினின்றும் குதித்த குருதி அவனைச் சுற்றிலும் பெருகிக் கிடக்க, அவன் வெட்டுண்டு வீழ்ந்து கிடந்ததையும் கண்டனள். அவன், தன்னைக் கண்திறந்து காணாது கிடக்கும் காணச் சகிக்காத கடுந்துயரத்தினையும் அவள் கண்டு விட்டாள்!

## 4. உரையீரோ! உரையீரோ!

என்னுறு துயர் கண்டும், "இடருறும் இவள்" என்னீர்;
பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ?
மன்னுறு துயர்செய்த மறவினை அறியாதேற்கு
"என்னுறு வினைகாண், ஆ; இது" என, உரையீரோ?
யாருமில் மருள்மாலை, இடருறு தமியேன்முன்,
தார்மலி மணிமார்பம் தரைமூழ்கிக் கிடப்பதோ?
பார்மிகு பழிதூற்றப், பாண்டியன் தவறிழைப்ப,
"ஈர்வது ஓர் வினைகாண்; ஆ! இது" என உரையீரோ?
கண்பொழி புனல்சோரும் கடுவினை உடையேன்முன்,
புண்பொழி குருதியிராய்ப் பொடியாடிக் கிடப்பதோ?
மன்பதை பழிதூற்ற, மன்னவன் தவறுஇழைப்ப,
"உண்பதோர் வினைகாண்; ஆ! இது" என
உரையீரோ?

"எனக்குற்ற துயரத்தினைக் கண்டும், இவள் து... வாளே என்று நினையீரோ? பொன்போன்ற நும்...

மேனி இவ்வாறு புழுதியிலே புரண்டதாய்க் கிடப்பதோ? மன்னவன் இக் கொடுந்துயரைச் செய்ததற்குக் காரணமான தீச்செயல் என்னவென்று அறியாத எனக்கு, 'எனக்குற்ற தீவினையின் காரணம் இதுதான்' என்று, நும் வாய்திறந்து உரையீரோ?"

"யாருமற்ற, மருட்சிபடர்ந்த இம் மாலை வேளையிலே, இடருற்ற தனியளான என்முன், மாலைகள் நிறைந்த அழகிய நும் மார்பகம் தரையிலே இப்படி மூழ்கிக் கிடப்பதோ? உலகம் உம்மை மிகவும் பழிதூற்ற, 'அறந் தவறாத பாண்டியனும் இவ்வாறு தவறுசெய்ய நிகழ்வித்த வொரு தீவினை இதுகாண் என்று எனக்குச் சொல்லீரோ?"

"கண்கள் பொழிகின்ற நீர் சோர்ந்து வீழ்கின்ற தீவினை உடையேனின்முன், புண்ணினின்றும் வடிகின்ற குருதியினராய்ப் புழுதியிலே படிந்து கிடப்பதோ? மக்களெல்லாம் பழி தூற்றவும், மன்னவன் தவறு இழைப்பவும், வந்து பயன் கொண்ட தீவினை இதுகாண் என்று உரையீரோ!

## 5. உண்டுகொல்! உண்டுகொல்!

பெண்டிரும் உண்டுகொல்! பெண்டிரும் உண்டுகொல்?
கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டுகொல்?
சான்றோரும் உண்டுகொல்? சான்றோரும் உண்டு
கொல்?
ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம்
சான்றோரும் உண்டுகொல்? சான்றோரும் உண்டு
கொல்?
தெய்வமும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?
வைவாளின் தப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?

பெண்டிரும் உள்ளாரோ? பெண்டிரும் உள்ளாரோ? கொண்ட கொழுநர்க்கு உற்றதொரு இத்தகைய குறை பாட்டைத் தாங்கிக்கொள்ளும் பெண்டிரும், என்போல் எவரேனும் உள்ளாரோ?

சான்றோரும் உள்ளாரோ? சான்றோரும் உள்ளாரோ? பிறர் ஈன்ற குழந்தையைத் தாங்கிப் பேணுகின்ற சான்றோரும், இவ்வூரிலே உள்ளாரோ?

தெய்வமும் உள்ளதோ? தெய்வமும் உள்ளதோ? கூரிய வாளின் வினையிலே அறம் தவறிய மன்னவனின் கூடல் நகரிலே, நீதிகாக்கும் தெய்வமும் உள்ளதோ?

## 6. நீ இருப்பாயாக!

என்றிவை சொல்லி அழுவாள் கணவன்-தன்
பொன்துஞ்சு மார்பம் பொருந்தத் தழீஇக் கொள்ள,
நின்றான், எழுந்து! 'நிறைமதி வாள்முகம்
கன்றியது!' என்றவள் கண்ணீர் கையான் மாற்ற—
அழுதேங்கி, நிலத்தின் வீழ்ந்து, ஆயிழையாள்
தன் கணவன்
தொழுதகைய திருந்தடியைத் துணைவளைக்கை
யாற்பற்றப்
பழுது ஒழிந்து எழுந்திருந்தான் பல்லமரர் குழாத்துளான்,
'எழுதெழில் மலர் உண்கண், இருந்தைக்க' எனப்
போனான்.

இவ்வாறு சொல்லிச் சொல்லி அழுதவள், தன கணவனுடைய செல்வம் தங்கிய மார்பினைத் தன் மார்போடே பொருந்துமாறு எடுத்துத் தழுவிக் கொண்டாள். அவன் எழுந்து நின்றான். 'நிறைமதி போன்ற ஒளியினை உடைய நின் முகம் இப்படிக் கன்றிவிட்டதே?' என்று சொல்லியபடி அவள் கண்ணீரைத் தன் கையால் துடைத்து மாற்றினான்.

அதுகண்ட ஆயிழையாள், அழுது ஏங்கி, நிலத்திலே வீழ்ந்து, தன் கணவனின் தொழத்தக்க திருவடிகளைத் தன் வளையணிந்த இருகைகளாலும் பற்றிக்கொண்டாள். பழுதுபட்ட தன் உடலினை நீத்து எழுந்திருந்தவன், பல அமரர்களும் வந்து கூடிய கூட்டத்திலே தானும் ஒருவனாகி, 'எழுதிய, அழகிய மலர்போலும் மைபூசிய கண்களை உடையவளே! நீ இங்கே இருப்பாயாக' என்று சொல்லிப் போய்விட்டான்.

## 7. கண்ணகியின் அவலம்!

'மாயங்கொல்? மற்றென்கொல்? மருட்டியதோர் தெய்வம்
கொல்?
போயெங்கு நாடுகேன்? பொருள் உரையோ இதுவன்று'

காய்சினம் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்;
தீ வேந்தன் தனைக்கண்டு. இத் திறம்கேட்பல் யான்!
என்றாள்.

"ஈதென்ன மாயமோ? மற்று யாதோ? மயக்கியது ஒரு தெய்வமோ? போய் எங்குத் தேடுவேன்? பொருள் பொதிந்த பேச்சும் இதுவன்றே! என்னைக் காய்கின்ற என் சினம் தணிந்தாலன்றி என் கணவனோடு கைகூடேன். தீமை செய்த வேந்தனைக் கண்டு, இதன் காரணத்தை யானே கேட்பேன்" என்றாள்.

## 8. அரசனைக் காண்பேன்

என்றாள் எழுந்தாள்; இடருற்ற தீக்கனா
நின்றாள் நினைந்தாள் நெடுங்கயற்கண் நீர்சோர;
நின்றாள் நினைந்தாள், நெடுங்கயற்கண் நீர்துடையாச்
சென்றாள், அரசன் செழுங்கோயில் வாயில்முன்.

தன் ஊரிற்கண்ட தீய கனவினை நின்று நினைந்தாள். கயல் போன்ற கண்களிலே நீர் வழிந்தது. மீண்டும் அரசனைக் காண்பதை நினைந்தாள். கண்ணீரைத் துடைத்துவிட்டுச் சினத்துடன் நடந்து, பாண்டியனின் வளமான அரண்மனை வாயிலின் முன்னர்ச் சென்றும் சேர்ந்தாள்.

[இந்தப் பகுதியிலே கண்ணகியின் அவல மிகுதியைக் காண்கின்றோம். குலமகளாகப் பொறுமையின் வடிவமாகத் துயரங்களைத் தாங்கி அமைதியோடிருந்தவள் கொதித்து, பலரும் அஞ்சி ஒதுங்க, வம்பப் பெருந்தெய்வம்போல, மன்னன் அரண்மனை நோக்கி அறம் கேட்கப் போகும் நிலையையும் காண்கின்றோம்.]

# 20

# வழக்குரை காதை

[பாண்டிய மன்னனின் முன்னர்ச் சென்று கண்ணகி வழக்கு உரைக்கின்றாள். தன் தவறினை உணர்ந்த மன்னன், தான் இருந்த அரசுகட்டிலிலேயே விழுந்து உயிரைத் துறக்கின்றான். அவன் கோப்பெருந்தேவி, தானும் அவனுடன் அந்நிலையே வீழ்ந்து மாய்கின்றாள்.]

## (1) அரசியின் தீக் கனவு!

ஆங்குக்
குடையொடு கோல்வீழ நின்று நடுங்கும்
கடைமணி யின்குரல் காண்பென்-காண் எல்லா!
திசையிரு நான்கும் அதிர்ந்திடும்; அன்றிக்
கதிரை இருள்விழுங்கக் காண்பென்-காண், எல்லா!
விடுங்கொடி வில்லிர வெம்பகல் வீழும்
கடுங்கதிர் மீன்; இவை காண்பென்-காண், எல்லா!"

"தோழி! நம் மன்னனது வெண்கொற்றக் குடையோடு செங்கோலும் கீழே விழுந்ததேடீ! இடைவிடாது அசையும் கடைவாயில் மணியின் ஓசையினையும் கனவிலே யான் கேட்டேனடீ!

"எட்டுத் திசைகளும் அப்போது அதிர்ந்தன. அதுவுமல்லாமலும், ஞாயிற்றினை இருள் விழுங்கவும் அப்போது கண்டேனடீ!

"இரவு நேரத்து வானத்திலே வானவில் தோன்றக் கண்டேன். நண்பகற் பொழுதிலே வானத்துத் தாரகைகள் எரிகொள்ளிகளாகப் பூமியை நோக்கி வீழவும் கண்டேன். இஃதெல்லாம் ஏனோடீ?"

## 2. கருப்பம்

செங்கோலும், வெண்குடையும்,
செறிநிலத்து மறிந்து வீழ்தரும்
நங்கோன்-தன் கொற்றவாயில்
மணிநடுங்க, நடுங்கும் உள்ளம்;

இரவு வில்லிடும்; பகல் மீன்விழும்
இரு-நான்கு திசையும் அதிர்ந்திடும்;
வருவதோர் துன்பம் உண்டு
மன்னவற்கு யாம் உரைத்தும்' என—

"செங்கோலும் வெண்குடையும் செறிந்த நிலத்தின்கண் மடங்கிக் கீழே சரிந்தன. நம் கோமானது கொற்றவாயிலின் கண்ணே மணியானது நடுங்கநடுங்க, எம் உள்ளமும் அதனால் நடுங்கியது. இரவிலே வானம் வில்லிடும். பகற் காலத்தே விண்மீன்கள் எரிந்து கீழே விழும். எட்டுத் திசைகளும் அதிர்ந்திடும். ஆகலான், நமக்கு வரக்கூடிய துன்பமும் ஒன்று உண்டு. அதனை நம் மன்னவனுக்கு யாம் சென்று உரைப்போம்" என்று, கோப்பெருந் தேவியானவள் எழுந்தாள். அவள், மன்னன் இருக்குமிடம் நோக்கிச் செல்லவும் தொடங்கினாள். அப்போது:—

## 3. அரசியின் வருகை!

ஆடி ஏந்தினர், கலன் ஏந்தினர்,
அவிர்ந்து விளங்கும் அணி இழையினர்;
கோடி ஏந்தினர், பட்டு ஏந்தினர்,
கொழுந் திரையலின் செப்பு ஏந்தினர்,
வண்ணம் ஏந்தினர் சுண்ணம் ஏந்தினர்,
மான் மதத்தின் சாந்து ஏந்தினர்,
கண்ணி ஏந்தினர், பிணையல் ஏந்தினர்,
கவரி ஏந்தினர், தூபம் ஏந்தினர்,

கூனும், குறளும், ஊமும் கூடிய
குறுந்தொழில் இளைஞர் செறிந்து சூழ்தர,
நரை விரைஇய நறுங் கூந்தலர்,
உரை விரைஇய பலர் வாழ்த்திட;
'ஈண்டு நீர் வையம் காக்கும்
பாண்டியன் பெருந்தேவி வாழ்க' என,
ஆயமும் காவலும் சென்று
அடியீடு பரசி ஏத்தக்

கோப்பெருந் தேவிசென்று, தன்
தீக்கனாத் திறம்உரைப்ப—
அரிமான் ஏந்திய அமளிமிசை இருந்தனன்,
திருவீழ் மார்பின் தென்னவர் கோவே:—இப்பால்

கண்ணாடி ஏந்தி வந்தனர் சிலர். அணிகலன்களை ஏந்தியவாறே வந்தனர் சிலர். ஒளிவிட்டு விளங்கும் அழகிய அணிகலன்களைத் தாமும் பூண்டவராக வந்தனர் சிலர். புதிய பருத்தி நூலாடையும் பட்டு நூலாடையும் ஏந்தி வந்தனர் சிலர். கொழுவிய வெற்றிலைச் செப்பினை ஏந்தி வந்தனர் சிலர். வண்ணமும் சுண்ணமும் கத்தூரிக்குழம்பும் ஏந்தி வந்தனர் சிலர். கண்ணி, பிணையல், மாலை, கவரி, அகிற் புகை முதலியன ஏந்தி வந்தனர் சிலர். கூனராயும் குறளராயும் ஊமராயும் கூடிய குற்றேவல் மகளிர் பலரும் நெருங்கிச் சூழ்ந்து அரசியுடன் வந்தனர். நரைமுடி கலந்த நல்ல கூந்தலையுடைய முதுமகளிர் பலரும், "கடல் சூழ்ந்த இவ் வையகத்தைக் காக்கும் நம் பாண்டியனின் பெருந்தேவி வாழ்க!' என உள்ளன்புடன் வாழ்த்தி வந்தனர். சேவிக்கும் தோழியரும், அந்தப்புரக் காவன்மகளிரும், அரசமாதேவி அடியெடுத்து வைக்குந்தோறும், அவளைப் புகழ்ந்து போற்றியவாறே உடன்வந்தனர். இவ்வாறு தன் பரிவாரத்துடன் கோப்பெருந் தேவியானவள் சென்று, தன் தீய கனவிலே நிகழ்ந்த நிலையினையெல்லாம், தன் நாயகனான பாண்டியனிடம் சொல்லிக்கொண்டிருந்தாள்! திருமகள் விரும்பும் மார்பினையுடையவனான தென்னவர் கோமான் சிங்கஞ் சுமந்த அமளியின்மீதிலே இருந்து அதனைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவ் வேளையிலே—

## 4. கணவனை இழந்தாள் கடையகத்தாள்!

"வாயிலோயே! வாயிலோயே;
அறிவுஅறை போகிய பொறியறு நெஞ்சத்து,
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே!
'இணை அரிச் சிலம்பொன்று ஏந்திய கையள்,
கணவனை இழந்தாள், கடையகத் தாள்' என்று
அறிவிப் பாயே! அறிவிப் பாயே!' என—
வாயிலோன், வாழி! எம் கொற்கை வேந்தே வாழி!
தென்னம் பொருப்பின் தலைவ, வாழி!

கோப்பெருந் தேவிசென்று, தன்
தீக்கனாத் திறம்உரைப்ப—
அரிமான் ஏந்திய அமளிமிசை இருந்தனன்,
திருவீழ் மார்பின் தென்னவர் கோவே:—இப்பால்!

கண்ணாடி ஏந்தி வந்தனர் சிலர். அணிகலன்களை ஏந்தியவாறே வந்தனர் சிலர். ஒளிவிட்டு விளங்கும் அழகிய கலன்களைத் தாமும் பூண்டவராக வந்தனர் சிலர். புதிய பருத்தி நூலாடையும் பட்டு நூலாடையும் ஏந்தி வந்தனர் சிலர். கொழுவிய வெற்றிலைச் செப்பினை ஏந்தி வந்தனர் சிலர். வண்ணமும் சுண்ணமும் கத்தூரிக்குழம்பும் ஏந்தி வந்தனர் சிலர். கண்ணி, பிணையல், மாலை, கவரி, அகிற் புகை முதலியன ஏந்தி வந்தனர் சிலர். கூனராயும் குறளராயும் ஊமராயும் கூடிய குற்றேவல் மகளிர் பலரும் நெருங்கிச் சூழ்ந்து அரசியுடன் வந்தனர். நரைமுடி கலந்த நல்ல கூந்தலையுடைய முதுமகளிர் பலரும், "கடல் சூழ்ந்த இவ் வையகத்தைக் காக்கும் நம் பாண்டியனின் பெருந்தேவி வாழ்க!' என உள்ளன்புடன் வாழ்த்தி வந்தனர். சேவிக்கும் தோழியரும், அந்தப்புரக் காவன்மகளிரும், அரசமாதேவி அடியெடுத்து வைக்குந்தோறும், அவளைப் புகழ்ந்து போற்றியவாறே உடன்வந்தனர். இவ்வாறு தன் பரிவாரத்துடன் கோப்பெருந் தேவியானவள் சென்று, தன் தீய கனவிலே நிகழ்ந்த நிலையினையெல்லாம், தன் நாயகனான பாண்டியனிடம் சொல்லிக்கொண்டிருந்தாள்! திருமகள் விரும்பும் மார்பினை யுடையவனான தென்னவர் கோமான் சிங்கஞ் சுமந்த அமளியின்மீதிலே இருந்து அதனைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவ் வேளையிலே—

## 4. கணவனை இழந்தாள் கடையகத்தாள்!

"வாயிலோயே! வாயிலோயே;
அறிவுஅறை போகிய பொறியறு நெஞ்சத்து,
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே!
'இணை அரிச் சிலம்பொன்று ஏந்திய கையள்,
கணவனை இழந்தாள், கடையகத் தாள்' என்று
அறிவிப் பாயே! அறிவிப் பாயே!' என—
வாயிலோன், வாழி! எம் கொற்கை வேந்தே வாழி!
தென்னம் பொருப்பின் தலைவ, வாழி!

பழியொடு படராப் பஞ்சவ வாழி
செழிய வாழி! தென்னவ வாழி!
அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்;
அறுவர்க்கு இளைய நங்கை, இறைவனை
ஆடல் கண்டருளிய அணங்கு, சூர் உடைக்
கானகம் உகந்த காளி, தாருகன்
பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள்;
செற்றனள் போலும், செயிர்த்தனள் போலும்,
பொற்றொழிற் சிலம்பு ஒன்று ஏந்திய கையள்,
கணவனை இழந்தாள் கடையகத் தாளே!
கணவனை இழந்தாள் கடையகத் தாளே" என—

"வாயிற் காவலனே! வாயிற் காவலனே! அறிவு முற்றுமே அற்றுப்போனவனான நல்லறமற்ற நெஞ்சத்துடன் தன் இறைமுறை பிழைத்தானின் வாயிற் காவலனே! 'இணையற்ற அரிகளுடைய சிலம்பு ஒன்றைக் கையிலே ஏந்தியவள்; தன் கணவனை இழந்தவள்; நம் கடைவாயிலின்கண் உள்ளாள்' என்று, நின் மன்னனிடம் சென்று அறிவிப்பாய்" என்றனள் கண்ணகி. வாயிற்காவலனும் அரசன்முன் வந்தான்.

"எம் கொற்கைப்பதியின் வேந்தனே, வாழ்க! தென் திசைப் பொதியமலைக்கு உரிமையுடையவனே, வாழ்க! செழியனே, வாழ்க! தென்னவனே, வாழ்க! [illegible] வாழ்க! [illegible] அடர்த்து எழும் குருதிக் [illegible] பிடர்த்தலைப் பீடத்திலே ஏறியிருந்த இளங் கொடியாகிய, வெற்றி வேலினைத் தன் தடக்கையிலே கொண்டிருக்கும் கொற்றவையோ எனில், அவளும் அல்லள்! [illegible] இளையாளான பிடாரியோ எனில், அவளும் அல்லள்! இறைவனை நடனமாடக் கண்டருளிய அணங்கோ எனில், அவளும் அல்லள்! காட்டிடை [illegible] காளியோ எனில், அவளும் அல்லள்! தாருகாசுரனுடைய அகன்ற மார்பினைப் பிளந்த துர்க்கையோ எனில், அவளும் அல்லள்! உள்ளத்திலே [illegible] கொண்டவள் போல

வும், மிகவும் சினங்கொண்டவள் போலவும் தோன்று கின்றாள். பொன்னிலே அழகிய வேலைப்பாடமைந்த சிலம்பு ஒன்றனைக் கையிலே ஏந்தியவளாகவும் இருக் கின்றாள்! கணவனை இழந்தவளாம்! நம் கடைவாயிலின் கண் உள்ளாள்!" என்றான்.

## 5. யாரையோ நீ?

'வருக, மற்று அவள் தருக, ஈங்கு' என—
வாயில வந்து, கோயில் காட்டக்
கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி—
'நீர்வார் கண்ணை, எம்முன் வந்தோய்!
யாரை யோ, நீ மடக்கொடி யோய்?' என—
'தேரா மன்னா! செப்புவது உடையேன்,
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன்; அன்றியும்,
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்;
பெரும்பெயர்ப் புகார்என் பதியே; அவ்வூர்
ஏசாச் சிறப்பின், இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை ஆகி,
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா! நின்னகர்ப் புகுந்து, ஈங்கு
என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி, நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி!
கண்ணகி என்பது என் பெயரே' எனப்—

'அவள் இங்கே வருக! அவளை இவ்விடத்துக் கொணர்க' என்றனன் மன்னன்.

வாயிற் காவலன், அரசனிடமிருந்து மீண்டும் வந்து, அரண்மனையிலே மன்னனிருக்கும் இடத்தைக் காட்ட, அரசனைக் கண்ணகியும் அணுகிச் சென்றவிடத்து, "நீர் ஒழுகும் கண்களுடன் எம்முன்னே வந்திருப்பவளே! இளங்கொடியே, நீதான் யாரோ?" என வினவினான் அவன்.

'உண்மை தெரியாத மன்னவனே! சொல்லுகிறேன் கேள்: இகழ்தலில்லாத சிறப்பினை உடையவரான இமையவரும் வியப்படையுமாறு புறாவின் துயரினைத் தீர்த்தவன்; அவனல்லாமலும், கடைவாயில் மணியின் நாவானது அசையப், பசுவின் கடைக்கண்களினின்றும் வழிந்த கண்ணீர் தன் நெஞ்சினைச் சுடத், தானே தன் பெறுதற்கரிய புதல்வனைத் தேர்ச்சக்கரத்திலிட்டுக் கொன்றவன்; ஆகிய சோழர்களது, பெரும்பெயர் பெற்ற புகார் நகரமே என் ஊராகும். அவ்வூரிலே, பழியற்ற சிறப்புடன் புகழ்விளங்கும் பெருங்குடி வாணிகனான மாசாத்துவான் என்பவனின் மகனாகப் பிறந்து, வாழ்க்கை நடத்துவதற்காக வேண்டி ஊழ்வினை செலுத்துதலால்—வீரக் கழலணிந்த மன்னவனே! —நின் மதுரைமா நகரிலே புகுந்து, இங்கு என்னுடைய காற்சிலம்பினை விற்பதற்கு விரும்பிவந்து, நின்னிடத்துக் கொலைக்களப்பட்ட கோவலனின் மனைவி யான்! கண்ணகி என்பது என் பெயர்'' என்றனள்.

## 6. காற்சிலம்பு உடைத்தாள்!

—'பெண்ணணங்கே!
கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று:
வெள்வேற் கொற்றம்—காண்' என—ஒள்ளிழை
'நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!
என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே' எனத்—
'தேமொழி! உரைத்தது செவ்வை நன்மொழி;
யாமஉடைச் சிலம்பு முத்துஉடை அரியே;
'தருக' எனத் தந்து, தான்முன் வைப்பக்,
கண்ணகி அணிமணிக் காற்சிலம்பு உடைப்ப,
மன்னவன் வாய்முதல் தெறித்தது, மணியே—

'பெண் அணங்கே! கள்வனைக் கொல்விப்பது கடுங்கோன்மை அன்றே! முறை தவறாத அரசநீதியே என்பதைக் காண்பாயாக' என்றனன் மன்னன்.

அவ்வளவிலே, ஒளிர்கின்ற ஆபரணமணிந்த அவள், 'நல்ல முறையிலே நியாயத்தைத் தெளிந்து செயலாற்றாத கொற்கை வேந்தனே! என் காற் பொற்சிலம்பு மாணிக்கக் கற்களை உள்ளிடு பரல்களாக உடையது' என்றனள்.

'இனிமையாகப் பேசுபவளே! நீ உரைத்தவை செவ்வையான நல்ல சொற்கள். எம் உடைமையான சிலம்பு முத்துக்களை உள்ளீடு பரல்களாக உடையது' என்றான் மன்னன்.

'அச் சிலம்பினை என்னிடம் தருக' என்று மன்னவன் கேட்பக், காவலர் அதனை அவன்முன் வைத்தனர். கோவலனிடமிருந்து பெற்ற, கண்ணகியின் அணியான அந்த அழகிய காற்சிலம்பினை எடுத்து அவள் உடைக்கவும், அரசனின் வாயருகே மாணிக்கப் பரல் ஒன்று தெறித்துச் சென்று விழு தரையில் வீழ்ந்தது.

## வீழ்ந்த மன்னனும் மன்னியும்

மணி கண்டு,
தாழ்ந்த குடையன், தளர்ந்தசெங் கோலன்,
'பொன்செய் கொல்லன்-தன்சொற் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்!
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதற் பிழைத்தது; கெடுகஎன் ஆயுள்!' என
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே; தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்,
'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்' என்று
இணையடி தொழுதுவீழ்ந் தனளே, மடமொழி—

மாணிக்க மணி கண்டு மன்னன் பதறினான். "யான் தாழ்ந்த குடையன்! தளர்ந்த செங்கோலன்; பொன் தொழில் செய்யும் கொல்லனின் சொற்களைக் கேட்டு நடந்த யானோ இந்நாட்டின் அரசன்? யானே கள்வன்!" என்று பதறினான். குடிமக்களைக் காத்துப் பேணுகின்ற இத் தென்னாட்டின் பாண்டியராட்சி என் காரணமாகப் பிழைத்து விட்டதே! என் ஆயுள் அழிக!' என்றான். அந் நிலையே மயங்கி வீழ்ந்தும் இறந்தான்.

தென்னவனின் அரசமாதேவி உள்ளங் குலைந்து நடுங்கினாள். 'கணவனை இழந்தோர்க்குப் புகலிடமாகக் காட்டுவது யாதும் இல்லை' என்று எண்ணிய அம் மடமொழியாள், தன் கணவனின் பாதங்களைப் பணிந்து வீழ்ந்து தானும் அக்கணமே தன் உயிரினைத் துறந்தாள்.

## 8. வெண்பாக்கள்

'அல்லவை செய்தார்க்கு அறங்கூற்றம் ஆம்' என்னும்
பல்லவையோர் சொல்லும் பழுதன்றே—பொல்லா
வடுவினையே செய்த வயவேந்தன் தேவி!
கடுவினையேன் செய்வதூஉம் காண்! 1

'அறம் அல்லாதவைகளைச் செய்தவர்களுக்கு அறமே கூற்றமாக அமையும்' என்னும், பல அவையோர்களின் சொல்லும் பழுதல்லவே! பொல்லாத வடுப்பட்ட செயலையே செய்த வெற்றிவேந்தனின் தேவியே! கடிய வினைக்கு ஆட்பட்ட யான் இனிச் செய்வதுவும் காணாய்!

காவி உகுநீரும், கையில் தனிச்சிலம்பும்,
ஆவி குடிபோன அவ்வடிவும்—பாவியேன்
காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலும், கண்டஞ்சிக்
கூடலான் கூடா யினான்! 2

மலர் விழிகள் சொரிகின்ற கண்ணீரும், கையிலே ஒற்றைச் சிலம்பும், உயிர்ப்பிழந்த என் வடிவும், பாவியேனின் காடுபோல விரிந்து உடலினைச் சூழ்ந்திருந்த கருங்குழலும், கூடல்நகருக்கு இறைவன் கண்டு, தானே அந்நிலைக்குக் காரணமாயினமைக்கு அஞ்சி, உயிர்துறந்து வெற்று உடம்பாய் விட்டான்!

மெய்யிற் பொடியும், விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோன்றான் அக்காரிகைதன் சொற் செவியில்
உண்டளவே தோற்றான் உயிர். 3

உடலிலே படிந்த புழுதியும், விரிக்கப்பட்ட கருங்கூந்தலும், கையிலே ஒற்றைச் சிலம்பும், கண்ணீரும், வையைக் கோமான் கண்ட அளவிலேயே தன் நெஞ்சின் ஆற்றலை இழந்தான்; அக் காரிகையின் சொற்களைத் தன் செவியாற் கேட்டலுமே, தன் உயிரையே அவன் இழந்துவிட்டான்.

[இம்மூன்று வெண்பாக்களும் தனிச் சிறப்பு உடையவை. அறத்தின் சால்பை விளக்குபவை. பண்டைத் தமிழரசரின் செங்கோன்மைச் செறிவைக் காட்டுபவை.]

'இனிமையாகப் பேசுபவனே! நீ ... எம் உடைமையான சிலம்பு முத்துடையான நல்ல சொற்கள். எம் உடைமையான சிலம்பு முத்துக்களை உள்ளிடு பரல்களாக உடையது' என்றான் மன்னவன்.

'அச் சிலம்பினை என்னிடம் தருக' என்று மன்னவன் கேட்பக், காவலர் அதனை அவன்முன் வைத்தனர். கோவலனிடமிருந்து பெற்ற, கண்ணகியின் அணியான அந்த அழகிய காற்சிலம்பினை எடுத்து அவள் உடைக்கவும், அரசனின் வாயருகே மாணிக்கப் பரல் ஒன்று தெறித்துச் சென்று ஓமே தரையில் வீழ்ந்தது.'

## 7. வீழ்ந்த மன்னனும் மன்னியும்

மணி கண்டு,
தாழ்ந்த குடையன், தளர்ந்தசெங் கோலன்,
'பொன்செய் கொல்லன்-தன்சொற் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்!
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதற் பிழைத்தது; கெடுகஎன் ஆயுள்!' என
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே; தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்,
'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்' என்று
இணையடி தொழுதுவீழ்ந் தனளே, மடமொழி—

மாணிக்க மணி கண்டு மன்னன் பதறினான். "யான் தாழ்ந்த குடையன்! தளர்ந்த செங்கோலன்; பொன் தொழில் செய்யும் கொல்லனின் சொற்களைக் கேட்டு நடந்த யானோ இந்நாட்டின் அரசன்? யானே கள்வன்!" என்று பதறினான். குடிமக்களைக் காத்துப் பேணுகின்ற இத் தென்னாட்டின் பாண்டியராட்சி என் காரணமாகப் பிழைத்து விட்டதே! என் ஆயுள் அழிக!' என்றான். அந் நிலையே மயங்கி வீழ்ந்தும் இறந்தான்.

தென்னவனின் அரசமாதேவி உள்ளங் குலைந்து நடுங்கினாள். 'கணவனை இழந்தோர்க்குப் புகலிடமாகக் காட்டுவது யாதும் இல்லை' என்று எண்ணிய அம் மடமொழியாள், தன் கணவனின் பாதங்களைப் பணிந்து வீழ்ந்து தானும் அக்கணமே தன் உயிரினைத் துறந்தாள்.

# 21

# வஞ்சின மாலை

[பாண்டியன் உயிர்விட்ட அக்காட்சி கண்ணகியைத் திகைப்படையச் செய்தது. கோப்பெருந்தேவியது கற்பின் செவ்வி அவளைப் பெரிதும் வியப்படையவும் செய்தது. எனவே, தானும் கற்புடை மகளிர் பலர் பிறந்த நகரிலே பிறந்தவள் என்றும், பத்தினியே என்றும், அரசோடு மட்டும் அமையாது மதுரை நகரினையும் அழிப்பேனென்றும் வஞ்சினம் கூறிச் சென்று, தீக்கடவுளையும் மதுரைமீது ஏவுகின்றாள்.]

## 1. கேட்டின் இயல்பு!

கோவேந்தன் தேவி! கொடுவினை யாட்டியேன்;
யாவுந் தெரியா இயல்பினேன்; ஆயினும்,
முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய-காண்!

பேரரசனாகிய நெடுஞ்செழியனின் தேவியே! யான் ஒரு கொடுவினை யாட்டியே! நுங்கள் தகுதிகள் எவையும் முன்னரே தெரியாத இயல்பினேன். ஆயினும், 'முற்பகல் வேளையிலே பிறனுக்குக் கேடு செய்தவன், அதன் பயனாகப் பிற்பகலிலே தானும் கெடுவான்' என்பதை நேரிற் கண்டனை. தீவினையின் தகைமையும் இத்தகையதே!

## 2. கற்பு மகளிர்கள்

—நற்பகலே

வன்னி மரமும் மடைப்பளியுஞ் சான்றாக
முன்னிறுத்திக் காட்டிய மொய்குழ லாள்;

நல்ல பகற்பொழுதிலேயே, வன்னி மரமும் மடைப்பள்ளியும் தனக்குச் சான்றாக வந்து உரைக்கும் பொருளாக, அறவோர் பலர் முன்னிலையிலே கொணர்ந்து காட்டினாள், மொய்த்த கூந்தலினை உடையவளான ஒரு பத்தினி, [திருப்புறம்பயத்து நடந்ததாக இக் கதை போல்வதொரு கதை

யினைத் திருவிளையாடற் புராணத்துள்ளே காணலாம். கணவன் அரவு தீண்டி இறந்தபோது, அவனை உயிரோடு பெற்ற கதை இது.]

2

—பொன்னிக்
கரையில் "மணற் பாவை நின் கணவன் ஆம்" என்று,
உரைசெய்த மாதரொடும் போகாள், திரைவந்து
அழியாது சூழ்போக, ஆங்குஉந்தி நின்ற
வரிஆர் அகலல்குல் மாதர்;

பொன்னிக் கரையின்கண், தன்னொத்த மகளிரொடு மணற்பாவை புனைந்தாடியபோது, 'அதுவே நின் கணவனாகும்' எனத் தோழியர் உரைத்தனர். அப்படி உரைத்ததனால் அவர்களோடு அவளும் வீடு திரும்பவில்லை. திரை வந்து அதனை அழியாது சுற்றிப் போகுமாறு. அதனைச் சுற்றிலும் மணலைக் குவித்து, ஆற்றிடைக் குறைபோல அமைத்து, அங்கேயே அப் பாவையைக் காத்து நின்றாள்—வரிபடர்ந்த அகன்ற அல்குலையுடைய ஒரு நங்கை!

3

—உரைசான்ற
மன்னன் கரிகால் வளவன் மகள் வஞ்சிக்கோன்
தன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று,
"கன்னவில் தோளாயோ," என்னக் கடல் வந்து
முன்னிறுத்திக் காட்ட, அவனைத் தழீஇக் கொண்டு,
பொன்னங் கொடிபோலப் போதந்தாள்;

புகழ்மிக்க பேரரசன் கரிகால் வளவன். அவன் மகள் ஆதிமந்தி. அவள், வஞ்சிக் கோமானான ஆட்டனத்தியை மணந்தாள். அவனை ஒருசமயம் காவிரிப் பெருவெள்ளம் அடித்துச் சென்றுவிட்டது. அப்போது, அவள் நீரோட்டத்தின் வழியே கரைமீது தொடர்ந்து சென்றாள். இறுதியில். கடற்கரையில் நின்று, அவன் கடலுள் அடித்துச் செலல்பட்டது கண்டு, 'மலையொத்த தோளாயோ!' என்று கதறினாள். கடல் அவனைக் கொண்டுவந்து அவள் முன்னர் நிறுத்தி காட்டியது. காட்டவும், அவனைத் தழீவிக் கொண்டு, பொலிவுபெற்ற பூங்கொடிபோல, அவளும் மகிழ்வோடோ ஊர் திரும்பினாள்.

4

—மன்னி
மணன் மலி பூங்கானல் வருகலன்கள் நோக்கிக்
கணவன் வரக் கல்லுருவம் நீத்தாள்;

மணல் செறிந்த அழகிய கடற்கானலிலே நின்று, கரை நோக்கி வரும் மரக்கலங்களை நோக்கியவாறே கல்லுருவா யிருந்து, கணவன் வரவும், தன் நல்லுருவம் பெற்று, அவனோடே சேர்ந்து மகிழ்ந்தாள் ஒருத்தி.

5

—இணையாய
மாற்றாள் குழவி விழத் தன் குழவி யும்கிணற்று
வீழ்த்து, ஏற்றுக் கொண்டு எடுத்த வேற்கண்ணாள்;

தன்னொடு ஒத்த மாற்றாளின் குழந்தையானது கிணற்றுள் விழுந்துவிடத், தன் குழந்தையையும் கிணற்றுள் வீழ்த்துப், பின்னர் இரு குழந்தைகளையும் எவ்விதக் கேடுமின்றி எடுத்துக்கொணர்ந்த, வேல்போன்ற கண்ணினை யுடையவள் ஒருத்தி.

6

—வேற்றொருவன்
நீள்நோக்கம் கண்டு, 'நிறைமதி வாள்முகத்தைத்
தானோர் குரக்கு முகம் ஆக,' என்று, போன
கொழுநன் வரவே, குரக்குமுகம் நீத்த
பழுமணி அல்குற்பூம் பாவை;

வேற்றானொருவனின் தொடர்ந்து நோக்கும் காமநோக்கினைக் கண்டாள்; நிறைமதிபோல மாட்சியுடன் விளங்கிய தன் முகத்தைத் தானே 'ஒரு குரங்கு முகம் ஆகுக' என்று கூறி, அவ்வாறே ஆகவும் பெற்றாள். போன கொழுநன் ஊரினின்றும் மீண்டும் வரவே, தன் குரங்கு முகத்தையும் போக்கிக்கொண்டாள், சிறந்த மணிகள் பதித்த மேகலை யணிந்த அல்குலினையுடைய பூம்பாவை ஒருத்தி!

7

"விழுமிய
பெண்ணறிவு என்பது பேதைமைத்தே" என்றுரைத்த
நுண்ணறிவினோர் நோக்கம்; நோக்காதே, எண்ணிலேன்

வண்டர் அயர்விடத்து; யானோர் மகள் பெற்றால்
ஒண்டொடி! நீயோர் மகன் பெறின், கொண்ட
கொழுநன் அவளுக்கு என்று, யான் உரைத்த மாற்றம்
கெழுமியவள் உரைப்பக் கேட்ட விழுமத்தால்
சிந்தை நோய் கூரும் திருவிலேற்கு' என்று எடுத்துத்
தந்தைக்குத் தாயுரைப்பக் கேட்டாளாய், முந்தியோர்
கோடிக் கலிங்கம் உடுத்துக் குழல்கட்டி
நீடித் தலையை வணங்கித் தலைசுமந்த
ஆடகப்பூம் பாவை அவள்;

'எவ்வளவு சிறந்ததானாலும் பெண்ணறிவு என்பது பேதைமையுடையதே' என்று நுண்மையான அறிவினை உடையவர்கள் சொல்லிய கருத்தினை யான் உணரவில்லை. பின் வருவது பற்றியும் எண்ணவுமில்லை. வண்டல் இழைத்து விளையாடிய காலத்து, 'ஒண்டொடி! யான் ஒரு மகள் பெற்றேனென்றால், நீயும் ஒருமகன் பெற்றனையென்றால், என் மகளுக்கு நின் மகனே கணவனாவான்' என்றேன். அன்று யான் உரைத்த சொற்களை என் தோழியானவள் உண்மையாகவே கொண்டு இன்று வந்து சொல்லவும், அதனைக் கேட்ட துன்பத்தால் என் சிந்தையிலே அவலம் மிகுந்துள்ளது. யான் செல்வமற்றவளாயினேன்'' என்று, தந்தைக்குத் தன் தாய் எடுத்துச் சொன்னதைக் கேட்டாள் ஒரு கன்னி. அவ்வளவிலே, தானே அவனை மணக்க முற்பட்டு, ஒரு கோடிப் புடைவையை உடுத்துக்கொண்டு, தன் குழலினையும் வாரி முடித்துக்கொண்டு, தன் தாய் வார்த்தையைத் தலைமேற்கொண்டு அவனையே மணந்தனள், பொலிவு பெற்ற பூம்பாவை ஒருத்தி.

### 3. யானும் பத்தினியானால்!

—போல்வார் நீடிய
மட்டார் குழலார் பிறந்தபதிப் பிறந்தேன்;
பட்டாங்கு யானும் ஓர் பத்தினியே ஆமாகில்
ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையும்! என்
பட்டிமையும் காண்குறுவாய் நீ' என்னா விட்டு அகலா—

மற்றும் இப்படிப்பட்டவரான, நீண்ட தேனிறைந்த குழலினையுடைய கற்புடைய மாதர்கள் பிறந்த புகார் நகரத்திலேயே யானும் பிறந்தேன்.

"உண்மையிலே யானும் ஒரு பத்தினியே யாருமானால், நின்னைப்போல, யானும் என் கணவனோடே இறந்து விடேன். அரசோடுமட்டுமன்றி இம் மதுரையையும் ஒழிப்பேன். என்னுடைய வஞ்சத்தின் தன்மையையும் காண்பாயாக" என்று கூறியவளாக, அரண்மனையை விட்டு வெளியேறினாள் கண்ணகி.

## 4. எல்லோரும் கேளுங்கள்!

'நான்மாடக் கூடன் மகளிரும் மைந்தரும்,
வானக் கடவளரும், மாதவருங் கேட்டீமின்;
யானமர் காதலன் தன்னைத் தவறுஇழைத்த
கோநகர் சீறினேன்; குற்றமிலேன் யான்' என்று—

"நான்மாடக் கூடலின் மகளிரும், மைந்தரும், வானத்துக் கடவுளரும், மாதவமுடையவரும் கேட்டுக் கொள்ளுங்கள்: யான் விரும்பிய காதலனைத் தவறாகக் கொன்ற மன்னவனின் நகராதலினால், இதன்பாலும் யான் வெகுண்டேன், யான் குற்றமேதும் இல்லேன்' என்றனள் கண்ணகி.

## 5. இடமுலை எறிந்தாள்

இடமுலை கையால் திருகி, மதுரை
வலமுறை மும்முறை வாரா, அலமந்து,
மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்து,
விட்டாள் எறிந்தாள், விளங்கு இழையாள்—

அதன்பின், மதுரை நகரத்தினை மூன்றுமுறை வலமாகச் சுற்றிவந்து துயரமுற்றுத், தேன் நிறைந்த மறுகிடத்தே, விளங்கிய அணியினளான கண்ணகி, தன் இடப்பக்கத்து முலையினைக் கையினால் திருகி, வட்டித்து விட்டெறிந்தாள்.

## 6. தீக்கடவுள் வந்தான்

—வட்டித்த

நீல நிறத்துத் திரிசெக்கர் வார்சடைப்
பால்புரை வெள்ளெயிற்றுப் பார்ப்பனக் கோலத்து
மாலை எரியங்கி வானவன் தான் தோன்றி,
'மாபத்தினி! நின்னை மாணப் பிழைத்த நாள்
பாயெரி இந்தப் பதியூட்ட, பண்டேயோர்
ஏவல் உடையேனால்: யார்பிழைப்பார், ஈங்கு? என்னப்

வடித்தெடுத்த நீல நிறத்தினையும், புரியுடைய சிவந்த நீண்ட சடையினையும், பாலினையொத்த வெள்ளைப் பற்களையும் உடையவனாக, அனைத்தையும் எரிக்கும் அங்கி என்னும் வானவன், பார்ப்பனக் கோலத்திலே அவள்முன் வந்து தோன்றினான். "மாபத்தினியே! நினக்குப் பெருந் தவறு இழைத்த அந்நாளிலே, இந்நகரினைப் பாய்ந்து எரியூட்ட யானோர் ஏவலை முன்னரே உடையவன்; இங்கே பிழைக்க வேண்டுவார் யாவரோ?" என்று கேட்டான்.

## 7. இவரை எரியாது கைவிடுக!

'பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர்,
மூத்தோர், குழவி எனும் இவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க' என்று, காய்த்திய 55
பொற்றொடி ஏவப், புகைஅழல் மண்டிற்றே
நற்றேரான் கூடல் நகர்.

'பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்கள், முதுமையாளர், குழந்தைகள் என்னும் இவரைக் கைவிட்டுத் தீய தன்மையுடையவர் பக்கமே சேர்க' என்று, சினங் கொண்ட பொற்றொடியாள் தீக்கடவுளை ஏவினாள். ஏவவும், நல்ல தேரையுடைய பாண்டியனின் கூடல் நகரிலே, புகையோடுங் கூடிய பேரழல் எழுந்து மண்டிற்று.

## 8. வெண்பா

பொற்பு வழுதியும், தன் பூவையரும், மாளிகையும்,
விற்பொலியும் சேனையும், மா வேழமும்—கற்புஉண்ணத்
தீத்தரு வெங்கூடல் தெய்வக் கடவுளரும்
மாத்துவத் தான்மறைந்தார் மற்று.

பொற்பினையுடைய பாண்டியனும், அவன் மனைவியும், மாளிகையும், வில்லேந்திய சேனைவீரர் பெருக்கமும், குதிரைகளும், யானைகளும் எல்லாம் கற்பானது உண்ணுமாறு விட்டுவிட்டு, இனியனவே தரும் கூடலின் தெய்வங்களும் கடவுள்களும்கூட, அதனை மாற்றுவதற்கின்றித் தாம் வெளியேறி மறைந்து விட்டனர்.

# அழற்படு காதை

[தீத் தெய்வத்தைக் கண்ணகி மதுரைமீது ஏவினாள். அதன் பயனாக மதுரை மூதூரினை எரிபற்றி உண்ணத் தொடங்கிற்று. நால்வகை வருணபூதங்களும் பிறவும் நகரைவிட்டு விலகிப் போயின. இவைபற்றிய செய்திகள்.]

## 1. எரிமுகம் திறந்தது

ஏவல் தெய்வத்து எரிமுகம் திறந்தது;
காவல் தெய்வம் கடைமுகம் அடைத்தன:

கற்புத்தெய்வத்தின் ஏவலால், தீத்தெய்வத்தின் எரிமுகம் திறந்தது. நகரெங்கும் நெருப்புச் சுட்டெரிக்கத் தொடங்கிற்று. காவல் தெய்வமும் தன் கோயிற்கதவினை அடைத்தபடி உள்ளேயே இருந்து விட்டது.

## 2. அறம் விளைத்த தெய்வங்கள்!

அரைசர் பெருமான், அடுபோர்ச் செழியன்
வளைகோல் இழுக்கத்து உயிர்ஆணி கொடுத்து, ஆங்கு
இருநில மடந்தைக்குச் செங்கோல் காட்டப்
புரைதீர் கற்பின் தேவி—தன்னுடன்
அரைசு கட்டிலில் துஞ்சியது அறியாது:

அரசர் பெருமான், பேராற்றல் மிக்க நெடுஞ்செழியன்! அவனது செங்கோன் முறைமை வளைந்து குறைப் பட்டதனை அறிந்த அந்நொடியே, தன் உயிராகிய ஆதாரத் தினை ஈடாகக் கொடுத்து, அதனைச் சீர்ப்படுத்தித் தன் செங்கோன் முறைமையினை—இதன் திட்பத்தை—உலகிற்குக் காட்டுபவனைப்போல, அவன் அரசகட்டிலேயே வீழ்ந்து உயிர்துறந்தான். அஃதறிந்த கோப்பெருந்தேவியும், குற்றமற்ற கற்புடையவளாதலினால், அவனோடு அந்நிலையே தானும் துஞ்சினாள் நிகழ்ந்த அந்நிலையினை எவருமே அறியாது போயினர்!

## 3. அனைவரும் கலங்கினர்

ஆசான், பெருங்கணி, அறக்களத்து அந்தணர்,
காவிதி; மந்திரக் கணக்கர்-தம்மொடு
கோயில் மாக்களும், குறுந்தொடி மகளிரும்,
ஓவியச் சுற்றத்து உரையவிந்து இருப்ப—

காழோர், வாதுவர், கடுந்தேர் ஊருநர்;
வாய்வாள் மறவர் மயங்கினர் மலிந்து,
கோமகன் கோயில் கொற்ற வாயில்
தீமுகம் கண்டு, தாம் விடை கொள்ள—

புரோகிதன், பெருங்கணி, தன்மாசனத்துக் கர்த்தாக்கள், வரிபிலார், மந்திரவோலை எழுதுவோர் ஆகியோரும், அரண்மனையிலிருந்த பிற பணியாளர்களும், குறுந்தொடி அணிந்தோரான ஏவற்பெண்டிரும், ஓவியத் திரள்போலப் பேச்சும் இழந்தவராக மயங்கி இருந்தனர்.

குதிரை வீரர்கள், வாசிவாரியர், விரைந்து தேரினைச் செலுத்தும் தேர்ப்பாகர், வெற்றிவாள் ஏந்திய வீரமறவர் ஆகியோரெல்லாம், நடந்ததனை அறியாது திகைத்தனர். மன்னவனின் கொற்றவாயிலிலே நெருப்பு எழக்கண்டதும், அனைவரும் அங்கிருந்து விரைந்து அகன்றனர்.

## 4. ஆகிப் பூதம்

நித்திலப் பைம்பூண் நிலாத்திகழ் அவிர்ஒளி
தண்கதிர் மதியத் தன்ன மேனியன்;
ஒண்கதிர் நித்திலம் பூணொடு புனைந்து,
வெண்ணிறத் தாமரை, அறுகை, நந்தி, என்று
இன்னவை முடித்த நன்னிறச் சென்னியன்;
நுரைஎன விரிந்த நுண்பூங் கலிங்கம்
புலராது உடுத்த உடையினன்; மலரா
வட்டிகை இளம்பொரி, வன்னிகை, சந்தனம்,
கொட்டமொடு அரைத்துக் கொண்ட மார்பினன்;
தேனும், பாலும், கட்டியும் பெட்பச்
சேர்வன பெறூஉம் தீம்புகை மடையினன்:
தீர்த்தக் கரையும், தேவர் கோட்டமும்,
ஓத்தின் சாலையும், ஒருங்குடன் நின்று,
பின்பகற் பொழுதில் பேணினன் ஊர்வோன்;
நன்பகல் வர அடிஊன்றிய காலினன்;
விரிகுடை, தண்டே, குண்டிகை, காட்டம்,
பிரியாத் தருப்பை, பிடித்த கையினன்;
நாவினும் மார்பினும் நவின்ற நூலினன்:

முத்தீ வாழ்க்கை முறைமையின் வழாஅ,
வேத முதல்வன் கேள்விக் கருவியொடு,
ஆதிப் பூதத்து அதிபதிக் கடவுளும்—

பசுமையான முத்துக்கோத்த வடங்கள் அணிந்தவன்; அவ்வடங்கள் ஒளிவீச, முத்தீ வாழ்க்கையினை உரிய மரபினின்றும் வழுவாது பேணி ஒழுகி வருபவன்; ஆதிப்பூதத்தின் அதிபதி—அவனும் வெளியேறினான்.

## 5. அரைச பூதம்

[வென்றி வெங்கதிர் புரையும் மேனியன்;
குன்றா மணிபுனை பூணினன்; பூணொடு
முடிமுதற் கலன்கள் பூண்டனன்; முடியொடு
சண்பகம், கருவிளை, செங்கூ தாளம்,
தண்கமழ் பூநீர்ச் சாதியோடு இனையவை
கட்டும் கண்ணியும் தொடுத்த மாலையும்
ஒட்டிய திரணையோடு ஒசிந்த பூவினன்,
அங்குலி கையெறிந்து அஞ்சுமகன் விரித்த
குங்கும வருணங் கொண்ட மார்பினன்;
பொங்கொளி யரத்தப் பூம்பட்டு உடையினன்;
முகிழ்த்தகைச்
சாலி அயினி பொற்கலத்து ஏந்தி,
ஏலும் நற்சுவை இயல்புளிக் கொணர்ந்து;
வெம்மையின் கொள்ளும் மடையினன்; செம்மையில்]
பவளச் செஞ்சுடர் திகழொளி மேனியன்;
ஆழ்கடல் ஞாலம் ஆள்வோன் தன்னின்,
முரைசொடு வெண்குடை கவரி, நெடுங்கொடி
உரைசால் அங்குசம், வடிவேல், வடிகயிறு,
எனவிவை பிடித்த கையினன் ஆகி,
எண்ணருஞ் சிறப்பின் மன்னரை ஓட்டி,
மன்னகங் கொண்டு, செங்கோல் ஓச்சிக்

[இக் குறியீடுகளுக்கு உட்பட்டவை இடைச் செருகல்களாகக் கருதப்படுபவை. எனவே, தெளிவுரை தரப்படவில்லை.]

கொடுந்தொழில் கடிந்து கொற்றம் கொண்டு,
நடும்புகழ் வளர்த்து, நானிலம் புரக்கும்
உரைசால் சிறப்பின் நெடியோன் அன்ன
அரைச பூதத்து அருந்திறல் கடவுளும்—

பவளத்தின் செம்மை ஒளிபோல ஒளிவீசும் மேனியுடையவன்; ஆழ்கடல் சூழ்ந்த இந்நிலவுலகினை ஆண்டு வருபவன்; தனது இனிதான வெற்றி முரசுடன், வெண்குடை, கவரி, நெடுங்கொடி, புகழ்பெற்ற அங்குசம், வடித்த வேல், வடிகயிறு என்ற இவற்றை ஏந்திய கையினன்; அளவிடுதற்கரிய சிறப்புனை உடையவரான பகைமன்னர்களை எல்லாம் போரிலே புறங்கொண்டு ஓட்டி, மண்ணகம் முழுவதும் கைக்கொண்டு செங்கோல் நடாத்தி வருபவன்; கொடுந்தொழில்களை எல்லாம் போக்கி, நீதியினை எங்கும் நிலைநிறுத்தித், தன் புகழினை என்றென்றும் நிலைத்து நிற்குமாறு வளர்த்து நிறுத்தியவன்; இவ்வாறு நானிலங்களையும் காத்து வருகின்ற, பலரும் புகழ்ந்து பேசும் சிறப்பினை உடைய திருமாலைப் போன்ற, அரைச பூதமாகிய அரிய ஆற்றல்களையுடைய கடவுளும் வெளியேறினான்.

## 6. வாணிகப் பூதம்

செந்நிறப் பசும்பொன் புரையும் மேனியன்;
மன்னிய சிறப்பின் மறவேன் மன்னவர்
அரைசு முடிஒழிய அமைத்த பூணினன்,
வாணிக மரபின் நீணிலம் ஓம்பி,
நாஞ்சிலும் துலாமும் ஏந்திய கையினன்;
[உரைசால் பொன்னிறம் கொண்ட உடையினன்;
வெட்சி, தாழை, கட்கமழ் ஆம்பல்,
சேடல், நெய்தல், பூளை, மருதம்
கூட முடித்த சென்னியன், நீடு ஒளிப்
பொன்னென விரிந்த நன்னிறச் சாந்தம்
தன்னொடு புனைந்த மின்னிற மார்பினன்;
கொள்ளும், பயறும், துவரையும், உழுந்தும்,
நள்ளியம் பலவும் நயந்துஉடன் அளைஇக்
'கொள்' எனக் கொள்ளும் மடையினன்' புடைதரு

நெல்லுடைக் களனே, புள்ளுடைக் கழனி,
வாணிகப் பீடிகை நீள்நிழற் காஞ்சிப்,
பாணிகைக் கொண்டு முற்பகற் பொழுதில்
உள்மகிழ்ந்து உண்ணு வோனே; அவனே
நாஞ்சிலம் படையும், வாய்ந்துறை துலாமும்
சூழ்ஒளித் தாலும்; யாழும் ஏந்தி,
வினைந்துபதம் மிகுந்து, விருந்துபதம் தந்து,
மலையவும் கடலவும் அரும்பலம் கொணர்ந்து;
விலைய ஆக வேண்டுநர்க்கு அளித்து, ஆங்கு]
உழவுதொழில் உதவும் பழதில் வாழ்க்கைக்
கிழவன் என்போன் துளர்ஒளிச் சென்னியின்
இளம்பிறை சூடிய இறையவன் வடிவின்ஓர்
விளங்கொளிப் பூத வியன்பெரும் கடவுளும்—

செந்நிறப் பசும்பொன் போன்ற மேனிவண்ணமுடையவனும், பெரும் சிறப்பினையுடைய வெற்றிவேல் மன்னவரது அரசமுடி யொன்றுதவிரப் பிறவெல்லாம் பூண்டிருப்பவனும், வாணிக மரபினால் இவ்வுலகினைக் காத்துக் கலப்பையும் துலாக்கோலும் கையேந்தி விளங்குபவனும், உழவும் தொழிலும் செய்து உலகிற்கு உதவும் பழுதற்ற வாழ்க்கையினை உடையவனும், ஒளிகிளர் செஞ்சடையிலே இளம்பிறையினைச் சூடிய இறைவனின் திருமேனியினைப்போன்ற ஒப்பற்ற வடிவமுடையவனுமான, வாணிக பூதமாகிய மிகவும் பெரிய கடவுளும்—வெளியேறினான்.

## 7. வேளாண் பூதம்

[கருவிளை புரையும் மேனியன்; அரியொடு
வெள்ளி புனைந்த பூணினன்; தெள்ளொளிக்
காழகம் செறிந்த உடையினன்; காழகில்
சாந்து புலர்ந்து அகன்ற மார்பினன்; ஏந்திய
கோட்டினும், கொடியினும், நீரினும், நிலத்தினும்,
காட்டிய பூவிற் கலந்த பித்தையன்;
கம்மியர் செய்வினைக் கலப்பை ஏந்திச்,
செம்மையின் வருஉம் சிறப்புப் பொருந்தி,]
மண்ணுறு திருமண் புரையும் மேனியன்;

சாந்து படிந்த இளையதான நிமிர்ந்த அழகிய முலைகளையும், கரிய பெரிய கண்களையும் உடைய மகளிர், தத்தம் காதலரோடும் கூடிச், செப்பு வாய்விரிந்த இனிமை மிக்க நல்ல மணமலர்கள் இதழ்விரித்து மணம் நிறைக்கும், கருமையான தம் தலையிலே சூடிய மாலைகளினின்றும் உதிர்ந்த பூந்துகளும், குங்குமக் குழம்பு பூசிய முலைமுற்றத் திடத்திலே உள்ள முத்தாரம் ஆகியவையும் உதிர்ந்து, அசைவற்றுப் பரந்துகிடக்கும் தூய மென்மையான படுக்கை யிடத்திலே, துணையின் பதத்தினைப் பாராதவராகிக், காமக்கள்ளுண்டு ஆடுதலையும் மறந்து, மயங்கிக் கிடந்தனர்.

## 12. தாயும் புதல்வரும்

திதலை அல்குல் தேங்கமழ் குழலியர்
குதலைச் செவ்வாய்ச குறுநடைப் புதல்வரொடு
பஞ்சிஆர் அமளியில் துஞ்சுதுயில் எடுப்பி,
வானரைக் கூந்தல் மகளிரொடு போத;

தேமல் பொருந்திய அல்குலினையும், நறுமணங் கமழும் கூந்தலினையும் உடைய மகளிர், தம்முடைய மழலை தவழும் செவ்வாயினையும் குறுகுறு நடையினையும் உடைய புதல்வருடன், பஞ்சணை விரித்த படுக்கையிலே கிடந்து உறங்கும் உறக்கத்தினின்றும் பதறி விழித்து, நரைத்த தலையினை யுடைய முதுபெண்டிரின்பாற் சென்று, அஞ்சி ஒதுங்கினர்.

## 13. முதுபெண்டிர் ஏத்தினர்

வருவிருந்து ஓம்பி மனையறம் முட்டாப்
பெருமனைக் கிழத்தியர் பெருமகிழ்வு எய்தி,
'இலங்குபூண் மார்பிற் கணவனை இழந்து,
சிலம்பின் வென்ற சேயிழை நங்கை,
கொங்கைப் பூசல் கொடிதோ அன்று' எனப்
பொங்கெரி வானவன் தொழுதனர் ஏத்தினர்:

தம்மை நாடிவரும் விருந்துகளைப் பேணிவாழும் அறவாழ்வினின்றும் பிறழாத பெருமையுடைய இல்லத் தலைவியர் பெரிதும் மகிழ்வெய்தினர். "பூணாரம் பூண்ட மார்பினைத் தழுவுதற்குரிய தன் கணவனை இழந்தாள்; அந்தத் தவறுக்குப் பாண்டிய மன்னனையே சிலம்பினால் வென்ற சேயிழை இவள்! இவள் கொங்கையால் விளைத்த

இந்தப் போராட்டம் கொடியதாகுமோ? அந்
என்று கூறி, மிக்கெரியும் தீக்கடவுளைத்
போற்றினர்.

### 14. நடன மாதர் வருத்தம்

எண்-நான்கு இரட்டி இருங்கலை பயின்ற,
பண் இயல் மடந்தையர் பயங்கெழு வீதித்,
தண்ணுமை முழவம், தாழ்தரு தீங்குழல்,
பண்ணுக்கிளை பயிரும் பண்ணியாழ்ப் பாணியொடு,
நாடக மடந்தையர் ஆடரங்கு இழந்து, ஆங்கு,
'எந்நாட் டாள்கொல்? யார்மகள் கொல்லோ?
இந்நாட்டு இவ்வூர் இறைவனை இழந்து,
தேரா மன்னனைச் சிலம்பின் வென்று, இவ்
வூர்தீ யூட்டிய ஒரு மகள்' என்ன—

அறுபத்து நான்கு எனப்படும் பரந்த கலைகளையெ
பயின்றவரான, பண்களின் இயல்புகள் நிரம்பிய இ
ஞானம் உடைய மகளிர்களின், பயன்செழுமிய வீதி
நெருப்புப் பற்றியது. தண்ணுமை, முழவம், தாழ்
ஒலியோடு விளங்கும் இனிய குழல் ஆகியவற்றைப், பண்
வகைகளை இசைக்கும் பண்ணுதல் நிரம்பிய யாழ்
யோடும், ஆடும் அரங்கினோடும், அவர்கள் இழந்தன.
'எந்நாட்டவளோ இவள்? யார் மகளோ இவள்? இ
நாட்டின், இவ்வூரிலே தன் கணவனை இழந்து, தெளிவற்
மன்னனைச் சிலம்பினாலே வென்று, இவ்வூருக்குத் தீமூட்டி
இப் பெண் யாவளோ?' என அஞ்சி வியந்தனர்.

### 15. மாலை ஒய்ந்து கிடந்தது

அந்தி விழவும், ஆரண ஓதையும்,
செந்தீ வேட்டலும், தெய்வம் பரவலும்,
மனைவிளக் குறுத்தலும், மாலை அயர்தலும்;
வழங்குகுரல் முரசமும், மடிந்த மாநகர்—

அந்தி வேளையிலே நிகழ்கின்ற விழாக்களும், வேத
களை ஓதுகின்ற ஒலியும், செந்தீ வேட்டலும், தெய்
களைப் போற்றித் துதித்தலும், மாலையிலே வீட்டின்க
விளக்கேற்றுதலும், மாலைக் களியாட்டங்களும், மாலை
முழங்கும் முரசொலியும், எல்லாம் மதுரைமா நகரி
அன்று நிகழாதனவாகி ஒழிந்தன.

## 16. மதுரைமா தெய்வம்

காதலற் கெடுத்த நோயொடு: உளங்கனன்று,
ஊதுஉலைக் குருகின் உயிர்த்தனள்; உயிர்த்து,
மறுகிடை மறுகும், கவலையிற் கவலும்,
இயங்கலும் இயங்கும், மயங்கலும் மயங்கும்,
ஆரஞர் உற்ற வீரபத் தினிமுன்
கொந்தழல் வெம்மைக் கூர்எரி பொறாஅள்
வந்து தோன்றினள் மதுராபதி—என்.

கணவனை இழந்துவிட்ட பிரிவுத் துயரோடு உள்ளம் கொதித்து, உலைக்களத்துத் துருத்திமுனைச் செந்தீயைப் போலச் சுடுமூச்செறிந்தாள் கண்ணகி. அங்ஙனம் சுடுமூச் செறிந்தவளாகத் தெருக்களிலே கால்போன இடமெல்லாம் அவள் சுழன்று திரிந்தாள். குறுந்தெருக்களிலே கவலையுடன் நிற்பாள். போய்க்கொண்டும் இருப்பாள். மயங்கிச் செயலழிந்தும் நிற்பாள். இவ்வாறு பெருந்துன்பம் அடைந்த வீரபத்தினியின் முன்னர், மலர்ந்த அழலின் வெம்மைமிக்க நெருப்பினைப் பொறாதவளான 'மதுராபதி' என்னும் மதுரைமா தெய்வம் வந்து தோன்றினாள்.

## 17. வெண்பா

மாமகளும், நாமகளும், மாமயிடன் செற்றுகந்த
கோமகளும், தாம்படைத்த கொற்றத்தாள்;—நாம
முதிரா முலைகுறைத்தாள்; முன்னரே வந்தாள்;
மதுரா பதிஎன்னும் மாது.

திருமகளும், கலைமகளும், பெரிய மயிடன் என்பவனைக் கொன்று மகிழ்ந்த கோமகளான மலைமகளும், தாம் ஒருங்கு கூடிப் படைத்தாற் போன்ற வெற்றியை உடையவளும், அச்சத்தைச் செய்யும் இளைய முலையினைக் குறைத்தவளு மான வீரபத்தினியின் எதிரே, 'மதுராபதி' என்னும் தேவ மாதானவள் அப்போது வந்து தோன்றினாள். [கண்ணகியை மூவேறு சக்திகளும் ஒன்றுகூடிய ஆதிசக்தியின் உருவாகவே பாவித்துப் போற்றுகிறது இந்த வெண்பா.]

நாக இலச்சினை யுடைமையால் நாகரெனப் பெயர்பெற்ற ஒரு வகை மக்கள் வாழும் நாடு நாகநாடு என்பர். இந்நாட்டின் பெயர் பின்னரும் இந்நூலிற் பலவிடத்து வந்துளது. தம, அ - ஆறனுருபு நீங்கலும் நீங்கார் என்னும் அடுக்கினுள் பின்னது பொது வினையாகும்; முன்பு, "சுழலலுஞ் சுழலும், ஓடலு மோடும் ஒரு சிறை யொதுங்கி, நீடலும் நீடும்," (3 : 111-3) என வந்தமையுங் காண்க.

மாமணிப் பீடிகை, அறத்தகையாசனம், தரும பீடிகை என்பன ஒரு பொருள் மேல் வந்தன. அழுவோள் முன்னர்ப் பீடிகை தோன்றிய தென்க.

இவள் இன்னணமாக, மணிபல்லவத்திடைத் துயிலெழும் அஞ்சிலோதி, போன்று காணளாய்க் கண்டு திருவே வாவென்று அழுவோள் முன்னர்த் தரும பீடிகை ஆங்குத் தோன்றியதென்க.

**மணிபல்லவத்துத் துயருற்ற காதை முற்றிற்று.**

✿ ✿ ✿

# 9. பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை

(பீடிகையைக் கண்ட மணிமேகலை வியப்பினால் தன்னை யறியாளாயினாள்; அவள் கைகள் தலைமேற் குவிந்தன; அதனை மும்முறை வலம்வந்து பணிந்து எழுபவள் அதன் காட்சியால் தன் பழம்பிறப்பின் நிகழ்ச்சிகளை யுணர்ந்து, "மாதவ! காயங்கரை யென்னும் நதிக்கரையில் நீ கூறியவெல்லாம் உண்மையாதலை அறிந்தேன்; காந்தார நாட்டின் அரசனாகிய அத்திபதி யென்னும் அரசற்கு மைத்துனனாகிய பிரமதருமனே! நீ அவன்பாற் சென்று அறமுரைக்கையில், 'இந் நாவலந் தீவில் இற்றைக்கு ஏழாம் நாளிற் பூகம்ப முண்டாகும்; அப்பொழுது இந்நகரும் நாகநாட்டில் நானூறு யோசனைப் பரப்பும் பாதலத்தில் வீழ்ந்து கெட்டொழியும்: ஆதலின் இதினின்றும் நீங்குக,' என்ன, அரசனும் நகரிலுள்ள மக்கட்குப் பறைசாற்றி யறிவித்து இடவயமென்னும் அப்பதியை நீங்கி, வடக்கிலுள்ள அவந்தி நகர்க்குச் செல்வோன் இடையே காயங்கரையின் கரையிற்பாடி செய்திருப்ப, நீ குறித்த நாளில் அந்நகர் அழிந்தது. அதுகண்ட அரசனும் ஏனையரும் நின்னைச் சூழ்ந்து வணங்க. நீ அவர்கட்கு அருளறத்தைப் போதித்துக் கொண்டிருந்தனை; அப்பொழுது அசோதர நகரத்தரசனாகிய இரவிவன்மன்தேவி அமுதபதி வயிற்றிற் பிறந்து இலக்குமியென்று பெயரெய்தி, அத்திபதி யென்னும் அரசற்கு நீலபதி யென்பவள்பாற் பிறந்த இராகுலனுக்கு மனைவியாகப் புக்க யான் என் கணவனுடன் வந்து அறங் கேட்டற்கு வணங்கியவுடன், நீ என்னை நோக்கி, "இவ்விராகுலன் இற்றைக்குப் பதினாறாம் நாளில் திட்டிவிடமென்னும் பட்டினத்திற் சென்று பிறப்பாய்; அங்கு நினக்கு ஒரு துன்பம் உண்டாகும்; அப்பொழுது மணிமேகலா தெய்வம் வந்து நள்ளிரவில் உன்னை எடுத்துச் சென்று

தென்றிசை மருங்கிலுள்ள தீவு ஒன்றில் வைத்துச் செல்லும்; சென்றபின் ஆங்குள்ள புத்த பீடிகையைக் கண்டு தொழுவாய்; அப்பொழுதே உனது முற்பிறப்பில் நிகழ்ந்த செய்திகளை அறிந்து, இன்று யான் கூறிய உரையினைத் தெளிவாய்', என்று கேட்டேன்; 'உன்னைக் கொண்டு சென்ற தெய்வம் மீண்டுந் தோன்றி, உனக்கு அவனைப் புலப்படுத்தும்,' என்று கூறினாய்; அத்தெய்வம் வாராதோ?" என ஏங்கி அழுதுகொண்டிருந்தனள்.)

**ஆங்கது கண்ட ஆயிழை அறியாள்**
**காந்தளஞ் செங்கை தலைமேற் குவிந்தன**
**தலைமேற் குவிந்த கையள் செங்கண்**
**முலைமேற் கலுழ்ந்துமுத் தத்திர ளுகுத்ததின்**
**இடமுறை மும்முறை வலமுறை வாராக்**

**கொடிமின் முகிலொடு நிலஞ்சேர்ந் தென்ன**
**இறுநுசுப் பலச வெறுநிலஞ் சேர்ந்தாங்கு**
**எழுவோள் பிறப்பு வழுவின் றுணர்ந்து**
**தொழுதகை மாதவ துணிபொரு ளுணர்ந்தோய்**
**காயங் கரையினீ யுரைத்ததை யெல்லாம்**

**வாயே யாகுதன் மயக்கற உணர்ந்தேன்**
**காந்தார மென்னுங் கழிபெரு நாட்டுப்**
**பூருவ தேயம் பொறைகெட வாழும்**
**அத்தி பதியெனும் அரசாள் வேந்தன்**
**மைத்துன னாகிய பிரம தருமன்**

**ஆங்கவன் றம்பால் அணைந்தற னுரைப்போய்**
**தீங்கனி நாவல் ஓங்குமித் தீவிடை**
**இன்றேழ் நாளில் இருநில மாக்கள்**
**நின்றுநடுக் கெய்த நீணில வேந்தே**
**பூமி நடுக்குறூஉம் போழ்தத் திந்நகர்**

**நாகநன் னாட்டு நானூறி யோசனை**
**வியன்பா தலத்து வீழ்ந்துகே டெய்தும்**
**இதன்பா லொழிகென இருநில வேந்தனும்**
**மாபெரும் பேரூர் மக்கட் கெல்லாம்**
**ஆவும் மாவுங் கொண்டுகழி கென்றே**

**பறையிற் சாற்றி நிறையருந் தானையோ**
**டிடவய மென்னும் இரும்பதி நீங்கி**
**வடவயின் அவந்தி மாநகர்ச் செல்வோன்**
**காயங் கரையெனும் பேரியாற் றடைகரைச்**
**சேயுயர் பூம்பொழிற் பாடிசெய் திருப்ப**

**எங்கோன் நீயாங் குரைத்தவந் நாளிடைத்**
**தங்கா தந்நகர் வீழ்ந்துகே டெய்தலும்**

மருளறு புலவநின் மலரடி யதனை
அரசொடு மக்க ளெல்லாம் ஈண்டிச்
சூழ்ந்தனர் வணங்கித் தாழ்ந்துபல ஏத்திய

அருளறம் பூண்ட ஒருபே ரின்பத்து
உலகுதுயர் கெடுப்ப அருளிய அந்நாள்
அரவக் கடலொலி அசோதரம் ஆளும்
இரவி வன்மன் ஒருபெருந் தேவி
அலத்தகச் சீறடி அமுத பதிவயிற்று

இலக்குமி யென்னும் பெயர்பெற்றுப் பிறந்தேன்
அத்தி பதியெனும் அரசன் பெருந்தேவி
சித்திபுரம் ஆளுஞ் சீதரன் திருமகள்
நீல பதியெனும் நேரிழை வயிற்றில்
காலை ஞாயிற்றுக் கதிர்போற் றோன்றிய

இராகுலன் றனக்குப் புக்கேன் அவனொடு
பராவரு மரபினின் பாதம் பணிதலும்
எட்டிரு நாளிலிவ் விராகுலன் றன்னைத்
திட்டி விடமுணுஞ் செல்லுயிர் போனால்
தீயழல் அவனொடு சேயிழை மூழ்குவை

ஏது நிகழ்ச்சி ஈங்கின் றாகலின்
கவேர கன்னிப் பெயரொடு விளங்கிய
தவாக்களி மூதூர்ச் சென்றுபிறப் பெய்துதி
அணியிழை நினக்கோர் அருந்துயர் வருநாள்
மணிமே கலாதெய்வம் வந்து தோன்றி

அன்றப் பதியில் ஆரிருள் எடுத்துத்
தென்றிசை மருங்கிலோர் தீவிடை வைத்தலும்
வேக வெந்திறல் நாகநாட் டரசர்
சினமா சொழித்து மனமாசு தீர்த்தாங்கு
அறச்செவி திறந்து மறச்செவி யடைத்துப்

பிறவிப்பிணி மருத்துவன் இருந்தற முரைக்கும்
திருந்தொளி யாசனஞ் சென்றுகை தொழுதி
அன்றைப் பகலே உன்பிறப் புணர்ந்தீங்கு
இன்றியா னுரைத்த உரைதெளி வாயெனச்
சாதுயர் கேட்டுத் தளர்ந்துகு மனத்தேன்

காதலன் பிறப்புங் காட்டா யோவென
ஆங்குனைக் கொணர்ந்த அரும்பெருந் தெய்வம்
பாங்கிற் றோன்றிப் பைந்தொடி கணவனை
ஈங்கிவன் என்னும் என்றெடுத் தோதினை
ஆங்கத் தெய்வதம் வாரா தோவென

ஏங்கினள் அழூஉம் இளங்கொடி தானென்.

உணைக் கொணர்ந்த அரும்பெரும் தெய்வம் பாங்கில் தோன்றிப் பைந்தொடி கணவனை ஈங்கிவன் என்னும் - அவ்விடத்தில் நின்னைக் கொண்டு சென்ற அரிய பெரிய தெய்வம் பக்கத்தில் தோன்றி நின் கணவனை இன்னான் என்று உரைக்கும், என்று எடுத்து ஓதினை - என எடுத்துரைத்தாய், ஆங்கத் தெய்வம் வாராதோ என ஏங்கினள் அழூஉம் இளங்கொடி தான் என் - அத்தெய்வம் இப்பொழுது வாராதோ என்று ஏங்கி அழுது கொண்டிருந்தாள் என்க.

சா துயர் - சாகுந் துயர். பைந்தொடி : முன்னிலை. பிறப்பும் : உம்மை இறந்தது தழீஇய எச்சப் பொருளது.

அதுகண்ட ஆயிழைதன்னை அறியாளாயினாள்; அப்பொழுது அவள் கைகள் தலைமேற் குவிந்தன. அங்ஙனம் குவிந்த கையினளாய் உகுத்து வந்து சேர்ந்து எழுவோள் பிறப்பை யுணர்ந்து, "மாதவ, உணர்ந்தோய், மயக்கமற உணர்ந்தேன், பிரம தருமனே, உரைப்போய், 'கேடெய்தும்; இதன்பா லொழிக' என்று சொல்ல, வேந்தனும் சாற்றி நீங்கிச் செல்வோன் இருப்ப, எங்கோன், நீ உரைத்த நாளில் நகர் கேடெய்தலும், நின் மலரடியை எல்லாம் ஏத்த அருளிய அந்நாளில், புக்கேன் அவனோடு நின் பாதம் பணிதலும், 'மூழ்குவை, எய்துதி, வருநாளில் வைத்தலும், கைதொழுதி, தெளிவாய்' என்று நீ சொல்ல, காட்டாயோ வென்று யான் கேட்ப ஓதினை; அத்தெய்வம் வாராதோ" என்று இளங்கொடி ஏங்கி அழூம் என்க.

**பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை முற்றிற்று.**

✿ ✿ ✿

# 10. மந்திரங் கொடுத்த காதை

(மணிமேகலை அழுது கொண்டிருக்கையில், "புத்த பீடிகைக் காட்சியால் இவள் பழம்பிறப்பை யறிந்தாள்; இவள் இயல்பும் அழகியது" என்றெண்ணி, வானினின்றும் இறங்கிய மணிமேகலா தெய்வம், அவள் கேட்கும்படி, புத்த பீடிகையைப் புத்தராகவே மதித்துத் துதித்து வலம் வந்து வணங்கியது. வணங்கிய தெய்வத்தை மணிமேகலை வணங்கி, "உன் திருவருளால் என் பிறப்புணர்ந்தேன்; என் கணவன் யாங்குளன்" என்று கேட்டனள்; கேட்டலும் அத்தெய்வம் "இலக்குமி! கேட்பாயாக! நீ ஒரு நாள் ஒரு பொழிலின்கண் இராகுலனோடு ஊடியிருந்தாய்; அவன் ஊடல் தீர்த்தற்கு உன் அடியை வணங்கினான்; வணங்குகையில், இரத்தினத் தீவிற் சென்று தருமசக்கரம் உருட்டி வருவோனாகிய சாதுசக்கரன் என்னும் பௌத்த சாரண முனிவன் நண்பகற் பொழுதில் விசும்பினின்றும் இறங்கி வர, நீ அவனைக் கண்டு மெய்ந் நடுங்கி நாணிப் பணிந்தனை; அதுகண்ட இராகுலன் 'இங்கு வந்தவன் யார்' என்று வெகுண்டுரைக்க, நீ அவன் வாயைப் பொத்தி, 'இப்

பெரியோனுடைய மலரடியை வணங்கித் துதியாது பிழை செய்தனை' என்றுரைத்து, அவனோடும் அம்முனிவன் அடிகளை வணங்கி, "யாங்கள் நின் தமரல்ல மாயினும் அம் முனிவன் அடிகளை அமுதொடு கொணர்கேம்; அமுது செய்தருள்க," என்று வேண்டிக் கொணர்ந்து உண்பித்தாய்; அந்நான் அவன் உண்டருளிய அவ்வறம் நின் பிறப்பை அறுத்திடும்; அவ்விராகுலனே உதயகுமரன்; அதனாலேதான் அவன் மனம் உன்னை விரும்பியதன்றி உன் மனமும் அவனை மிகப் பற்றியது; அப்பற்று மாற்றி உன்னை நல்வழிப்படுத்த நினைந்து நின்னை இத்தீவிற் கொணர்ந்து வைத்து இப்பீடிகையைக் காட்டினேன். இன்னுங்கேள்; முற்பிறப்பில் உன் தவ்வையராயிருந்த தாரையையும் வீரையையும் அங்க நாட்டிலுள்ள கச்சய நகரத்தரசனாகிய துச்சயனென்பவன் மணஞ்செய்து கொண்டு ஒருநாள் அவர்களுடன் சென்று மலைவளங்கண்டு கங்கைக்கரையை எய்தி யிருந்தபொழுது, அறவணவடிகள் அங்கே வரக்கண்டு உடன் எழுந்து வணங்கிய அவன், 'இங்கெழுந்தருளிய நீர் யாவிர்' என்று கேட்க, அவர், 'பாத பங்கய மலையைத் தொழுது வணங்க வந்தேன்; முற்காலத்தே புத்ததேவர் அம்மலையில் உச்சியில் நின்று அறமுரைத்த பொழுது அவரது அடிச்சுவடு பொருந்தினமையால் அம்மலை அப்பெயரினதாயிற்று; நீவிரும் அதனைக் கண்டு வழிபடுமின்;' என்று கூறினர். அவர் கூறியவாறு சென்று தொழுதமையால் தாரையும் வீரையும் முறையே மாதவியாகியும் சுதமதியாகியும் வந்து நின்னுடன் கூடினர்; நீ பழம்பிறப்பை யறிந்தாய்; அறத்தினியல்பையும் அறிந்து கொண்டாய்; பிற சமயவாதிகளின் கொள்கைகளையும் இனிக் கேட்பாய்; கேட்குங்கால் உன்னை 'இளம் பிராயமுடைய பெண்' என நினைந்து, அன்னோர் தத்தம் சமயவுண்மைகளைக் கூறார்; ஆகலின், அப்பொழுது நீ வேற்றுருக் கொள்ள வேண்டும்' என்று கூறி, வேற்றுரு வெய்துவிப்பதும் வானிலே இயங்கச் செய்வதுமாகிய இரண்டு மந்திரங்களை அவளுக்கு அறிவுறுத்தி, நீ புத்தர் அருளிய திருவறம் எய்துதல் உறுதி யென்றுணர்வாயாக; பீடிகையை வணங்கி நின் பதிக்கண் செல்வாயாக, என்று எழுந்தோங்கி, "யான் மறந்ததும் உண்டு," என்று மீட்டும் இறங்கி, "மக்கள் யாக்கை உணவின் பிண்டம்; இப்பெரு மந்திரம் இரும்பசி அறுக்கும்", என்று அதனை அருளிச் செய்து; வானில் எழுந்து சென்றது.)

**அறவோ னாசனத் தாயிழை யறிந்த**
**பிறவிய ளாயினள் பெற்றியு மைத்தென**
**விரைமல ரேந்தி விசம்பூ டிழிந்து**
**பொருவறு பூங்கொடி பூமியிற் பொலிந்தென**
**வந்து தோன்றிய மணிமே கலாதெய்வம்**

**முந்தைப் பிறப்பெய்தி நின்றோள் கேட்ப**
**உயிர்க ளெல்லாம் உணர்வுபா ழாகிப்**
**பொருள்வழங்கு செவித்துளை தூர்ந்தறி விழந்த**

வறந்தலை யுலகத் தறம்பாடு சிறக்கச்
சுடர்வழக் கற்றுத் தடுமாறு காலையோர்
இளவள ஞாயிறு தோன்றிய தென்ன
நீயோ தோன்றினை நின்னடி பணிந்தேன்
நீயே யாகிநிற் கமைந்த இவ் வாசனம்
நாமிசை வைத்தேன் தலைமிசைக் கொண்டேன்
பூமிசை யேற்றினேன் புலம்பறு கென்றே
வலங்கொண் டாசனம் வணங்குவோள் முன்னர்ப்
பொலங்கொடி நிலமிசைச் சேர்ந்தெனப் பொருந்தி
உன்திரு வருளால் என்பிறப் புணர்ந்தேன்
என்பெருங் கணவன் யாங்குள னென்றலும்
இலக்குமி கேளாய் இராகுலன் றன்னொடு
புலத்தகை யெய்தினை பூம்பொழி லகவயின்
இடங்கழி காமமோ டடங்கா னாயவன்
மடந்தை மெல்லியல் மலரடி வணங்குழிச்
சாது சக்கரன் மீவிசும்பு திரிவோன்
தெருமர லொழித்தாங் கிரத்தின தீவத்துத்
தரும சக்கரம் உருட்டினன் வருவோன்
வெங்கதி ரமயத்து வியன்பொழி லகவயின்
வந்து தோன்றலும் மயங்கினை கலங்கி
மெல்லியல் கண்டனை மெய்ந்நடுக் குற்றனை
நல்கூர் நுசுப்பினை நாணினை யிறைஞ்ச
இராகுலன் வந்தோன் யாரென வெகுளலும்
விராமலர்க் கூந்தல் அவன்வாய் புதையா
வானூ டிழிந்தோன் மலரடி வணங்காது
நாநல் கூர்ந்தனை என்றவன் றன்னொடு
பகையறு பாத்தியன் பாதம் பணிந்தாங்
கமர கேள்நின் தமரல மாயினும்
அந்தீந் தண்ணீர் அமுதொடு கொணர்கேம்
உண்டி யாமுன் குறிப்பின மென்றலும்
எம்மனை யுண்கேன் ஈங்குக் கொணர்கென
அந்நா ளவனுண் டருளிய அவ்வறம்
நின்னாங் கொழியாது நின்பிறப் பறுத்திடும்
உவவன மருங்கில் உன்பாற் றோன்றிய
உதய குமரன் அவனுன் னிராகுலன்
ஆங்கவ னன்றியும் அவன்பா லுள்ளம்
நீங்காத் தன்மை நினக்குமுண் டாகலின்
கந்த சாலியின் கழிபெரு வித்தோர்
வெந்துகு வெங்களர் வீழ்வது போன்மென

அறத்தின் வித்தாங் காகிய வுன்னையோர்
திறப்படற் கேதுவாய்ச் சேயிழை செய்தேன்
இன்னுங் கேளாய் இலக்குமி நீநின்
தவ்வைய ராவோர் தாரையும் வீரையும்
ஆங்கவர் தம்மை யங்கநாட் டகவயின்
கச்சய மாளுங் கழற்கால் வேந்தன்
துச்சய னென்போன் ஒருவன் கொண்டனன்
அவருட னாங்கவன் அகன்மலை யாடிக்
கங்கைப் பேரியாற் றடைகரை யிருந்துழி
மறவண நீத்த மாசறு கேள்வி
அறவண னாங்கவன் பாற்சென் றோனை
ஈங்கு வந்தீர் யாரென் றெழுந்தவன்
பாங்குளி மாதவன் பாதம் பணிதலும்
ஆதி முதல்வன் அறவாழி யாள்வோன்
மாதுய ரெவ்வ மக்களை நீக்கி
விலங்குந் தம்முள் வெரூஉம்பகை நீக்கி
உடங்குயிர் வாழ்கவென் றுள்ளங் கசிந்துகத்
தொன்றுகா லத்து நின்றற முரைத்த
குன்ற மருங்கிற் குற்றங் கெடுக்கும்
பாத பங்கயங் கிடத்தலின் ஈங்கிது
பாதபங் கயமலை எனும் பெயர்த் தாயது
தொழுது வலங்கொள்ள வந்தேன் ஈங்கிப்
பழுதில் காட்சியீர் நீயிருந் தொழுமென
அன்றவ னுரைத்த அவ்வுரை பிழையாது
சென்றுகை தொழுது சிறப்புச் செய்தலின்
மாதவி யாகியுஞ் சுதமதி யாகியும்
கோதையஞ் சாயல் நின்னொடு கூடினர்
அறிபிறப் புற்றனை அறம்பா டறிந்தனை
பிறவற முரைப்போர் பெற்றியுங் கேட்குவை
பல்வேறு சமயப் படிற்றுரை யெல்லாம்
அல்லியங் கோதை கேட்குறு மந்நாள்
இளையள் வளையோ ளென்றுனக் கியாவரும்
விளைபொரு ளுரையார் வேற்றுரு வெய்தவும்
அந்தரந் திரியவும் ஆக்குமிவ் வருந்திறன்
மந்திரங் கொள்கென வாய்மையி னோதி
மதிநாண் முற்றிய மங்கலத் திருநாள்
பொதுவறி விகழ்ந்து புலமுறு மாதவன்
திருவற மெய்துதல் சித்தமென் றுணர்நீ

மண்பெரும் பீடிகை வணங்கினை யேத்தி
நின்பதிப் புகுவாய் என்றெழுந் தோங்கி
மறந்தது முண்டென மறிந்தாங் கிழிந்து
சிறந்த கொள்கைச் சேயிழை கேளாய்
மக்கள் யாக்கை உணவின் பிண்டம்

இப்பெரு மந்திரம் இரும்பசி யறுக்குமென்
றாங்கது கொடுத்தாங் கந்தர மெழுந்து
நீங்கிய தாங்கு நெடுந்தெய்வந் தானென்.

## உரை

*(1 - 5)* அறவோன் ஆசனத்து ஆயிழை அறிந்த பிறவியள் ஆயினள் - மணிமேகலை புத்தனது பாத பீடிகையால் அறியப் பட்ட பிறவியை உடையளாயினாள், பெற்றியும் ஐது என - இவள் பெற்ற பேறும் அழகிது என்று, விரைமலர் ஏந்தி விசும்பூடு இழிந்து - மணம் பொருந்திய மலர்களை ஏந்தி விசும்பினின்றும் இறங்கி, பொருவறு பூங்கொடி பூமியில் பொலிந்தென - ஒப்பற்ற பூங்கொடியானது பூமியின்கண் பொலிவு பெற்றாற்போல, வந்து தோன்றிய மணிமேகலா தெய்வம் -;

அறிந்த பிறவியள் - முற்பிறப்பை யறிந்தவள் என்க. பெற்றி - பேறு; [1]"பிணிப்பறுத் தோர்தம் பெற்றி யெய்தவும்" என்பதிற்போல. பூங்கொடி ஏந்தி இழிந்து பொலிந்தெனத் தோன்றிய தெய்வமென்க.

*(6 - 12)* முந்தைப் பிறப்பு எய்தி நின்றோளை கேட்ப - முற்பிறப் பினை யறிந்து நின்ற மணிமேகலை கேட்க, உயிர்கள் எல்லாம் உணர்வு பாழாகி - உயிர்கள் யாவும் உணர்வு பாழடைந்து, பொருள் வழங்கு செவித்துளை தூர்ந்து - அறம் வழங்குதற்குரிய செவிகளின் துளை அதனைக் கேளாது தூர்ந்து, அறிவு இழந்த வறந்தலை உலகத்து - அறிவினை யிழந்த வறுமையைத் தன்னிடத்தே உள்ள உலகின்கண் அறம்பாடு சிறக்க - அறத்தின் கூறுபாடுகள் சிறப் படையுமாறு, சுடர்வழக்கு அற்றுத் தடுமாறு காலை ஓர் இளவள ஞாயிறு தோன்றியது என்ன - ஒளி வழங்குதலின்றித் தடுமாறுகின்ற பொழுதில் ஓர் அழகிய இளம் பரிதி தோன்றியது போல, நீயோ தோன்றினை நின் அடிபணிந்தேன் - நீயோ உதித்தருளினை நின் திருவடிகளைப் பணிந்தேன்;

பொருள் - உறுதிப்பொருள்; ஈண்டு அறம்; [2]"பொருணீங்கிப் பொச்சாந்தார்" என்புழிப் பரிமேலழகர் உரைத்தமை காண்க. அறிவிழந்த வறந்தலை யுலகம் - அறிவின்மையாகிய வறுமையை யுடைய உலக மென்க. அறம்பாடு என்பதற்கு அறத்தின் தோற்றம் என்றும், சுடர் என்பதற்கு ஞாயிறு என்றும் கூறுதலுமாம்.

1. சிலப். 15 : 100. 2. குறள். 246.

# 11. பாத்திரம் பெற்ற காதை

(மணிமேகலா தெய்வம் சென்றபின் மணிமேகலை ஆண்டுள்ள மணற்குன்று முதலியவற்றைப் பார்த்துக் கொண்டு மெல்ல உலாவி வருங்கால் தீவதிலகை யென்பாள் தோன்றி, "கப்பல் கவிழப்பெற்ற மனிர்போல் இத்தீவிலே தனியே வந்த நீ யார்?" எனக் கேட்டனள் கேட்டலும், மணிமேகலை அவளை நோக்கி, "பூங்கொடி போல்வாய்! 'யார் நீ?' என்றது எனது எப்பிறப்பினைக் கருதி? யான் சென்ற பிறப்பில் இலக்குமி யென்னும் பெயருடையேன்; இராகுலன் என்னுங் கோமகனுக்கு மனைவியாயிருந்தேன்; இப்பிறப்பில் நாடகக் கணிகையாகிய மாதவியின் மகளாவேன்; மணிமேகலை யென்னும் பெயருடையேன்; என் பெயர்த் தெய்வம் ஈங்கென்னைக் கொணர, இப்பீடிகையால் என் பழம் பிறப்பை யுணர்ந்தேன்; இங்கு வந்தமையால் யான் அடைந்த பயன் இது; என் வரலாறு இதுவே" என்றுரைத்து, 'நீ யார்?' என வினாவலும், அவள், "இத்தீவிற்கு அயலதான இரத்தினத் தீவத்தில் உயர்ந்து விளங்கும் சமந்த மலையின் உச்சியிலுள்ள புத்ததேவர் அடியிணைப் படிமைகளைத் தொழுது கொண்டு முன்னொரு காலத்தில் இங்குவந்தேன்; வந்தது முதல் இந்திரன் ஏவலால் இப்பீடிகையைக் காத்துக் கொண்டிருக் கின்றேன்; என் பெயர் தீவதிலகை யென்பது; இதனைக் கேட்பாயாக: புத்ததேவர் அருளிய அறநெறியில் ஒழுகுவோரே இதனைக் காண்டற்குரியர்; கண்டவர் பழம் பிறப்புணர்ச்சி கைவரப் பெறுவர்; நீ அங்ஙன மாயினமையின் மிகவும் பெரியை; இப்பீடிகைக்கு முன் கோமுகி யென்னும் பொய்கை யொன்றுளது; அதனுள்ளிருந்து அமுதசுரபி யென்னும் அட்சய பாத்திரம் ஆண்டு தோறும் வைகாசித் தூய நிறைமதி நாளிலே தோன்றும்; இன்று அந்நாளே; தோன்றும் பொழுதும் இதுவே; இப்பொழுது அது நின் கையில் வரும்போலும்; அதில் இடப்பட்ட அடிசில் கொள்ளக் குறையாது வளர்ந்து கொண்டிருக்கும்; அதன் வரலாற்றை நின்னூரில் அறவணவடிகள்பால் இனிக் கேட்பாய்," என்று கூறினள். கூற, மணிமேகலை அதனை விரும்பி, பீடிகையைத் தொழுது, அவளுடன் சென்று கோமுகியை வலஞ்செய்து வந்து நின்றவுடன், அப்பாத்திரம் பொய்கையினுள்ளிருந்து மணி மேகலையின் கையை அடைந்தது. உடனே அவள் அளவற்ற மகிழ்ச்சியடைந்து நின்று, புத்ததேவரைப் பலவாறு துதித்தாள். அப்பொழுது மணிமேகலைக்குத் தீவதிலகை உயிர்களுக்குண்டாம் பசிப்பிணியின் கொடுமையையும், அதனைத் தீர்ப்போரது பெருமையையும், உரைத்து, 'இனி நீ உணவளித்து உயிர் கொடுத்தலாகிய அறத்தைச் செய்வாய்,' என்றனள். இது கேட்ட மணிமேகலை, "முற்பிறப்பில் என் கணவன் அரவால் இறந்தது பொறாது யான் தீப்பாய்ந்து உயிர் விடுகையில் முன்பு சாது சக்கர முனிவனை உண்பித்த நினைவுடையே னாயினேன்; அதனாலேயே

இப்பாத்திரம் என் கையிற் புகுந்ததுபோலும்; இது நிற்க, ஈன்ற குழவியின் முகங்கண்டிரங்கிப் பால் சுரக்கும் தாய் போலவே, பசியால் வருந்தி, வெயிலென்றும் மழையென்றும் பாராமல் எங்கணும் அலைந்துதிரியும் ஏழைகளின் முகத்தைக் கண்டு இரங்கி, இப்பாத்திரம் அவர்கட்கு மேன்மேலும் அமுது சுரந்தளித்தலைக் காணும் வேட்கை யுடையேன்," என்று கூறித் தீவதிலகையை வணங்கி, புத்த பீடிகையைத் தொழுது வலங்கொண்டு, பாத்திரத்தைக் கையின் ஏந்தி வானிலே யெழுந்து சென்று, புகார் நகரிலே தன்னைக் காணாது வருந்தி வழியை நோக்கின வண்ணம் நிற்கும் சுதமதியையும் மாதவியையும் கண்டு, அவர்கள் வியப்படையும் வண்ணம் அவர்களுடைய முற்பிறப்பை அறிவித்து, "மக்கள் யாக்கையாற் பெறுதற்குரிய தவ வழியை இனி அறவணவடிகள்பாற் பெறக் கடவீர்; இஃது ஆபுத்திரன் கையிலிருந்த அமுதசுரபி யென்னும் பாத்திரமாகும்; இதனைத் தொழுமின்," என்று சொல்லி, அதனை அன்புடன் தொழுத அவர்களோடும் அறவணவடிகளைத் தரிசித்தற்குச் சென்றனள். (இதன்கண் மணிமேகலை புத்த தேவரை வாழ்த்தும் பகுதியும், பசியின் கொடுமையையும், அதனைப் போக்குதலாகிய அறத்தின் மேன்மையையும் உணர்த்தும் பகுதிகளும் நினைவில் இருத்தத்தக்க சிறப்புடையன.)

**மணிமே கலாதெய்வம் நீங்கிய பின்னர்**
**மணிபல் லவத்திடை மணிமே கலைதான்**
**வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையும்**
**தண்மலர்ப் பொய்கையும் தாழ்ந்தனள் நோக்கிக்**
**காவதந் திரியக் கடவுட் கோலத்துத்**

**தீவ திலகை செவ்வனந் தோன்றிக்**
**கலங்கவிழ் மகளிரின் வந்தீங் கெய்திய**
**இலங்குதொடி நல்லாய் யார்நீ என்றலும்**
**எப்பிறப் பகத்துள் யார்நீ யென்றது**
**பொற்கொடி யன்னாய் பொருந்திக் கேளாய்**

**போய பிறவியில் பூமியங் கிழவன்**
**இராகுலன் மனையாள் இலக்குமி யென்பேர்**
**ஆய பிறவியில் ஆடலங் கணிகை**
**மாதவி யீன்ற மணிமே கலையான்**
**என்பெயர்த் தெய்வம் ஈங்கெனைக் கொணரவிம்**

**மன்பெரும் பீடிகை என்பிறப் புணர்ந்தேன்**
**ஈங்கென் வரவிதீங் கெய்திய பயனிது**
**பூங்கொடி யன்னாய் யார்நீ யென்றலும்**
**ஆயிழை தன்பிறப் பறிந்தமை யறிந்த**
**தீவ திலகை செவ்வனம் உரைக்கும்**

ஈங்கிதன் அயலகத் திரத்தின தீவத்
தோங்குயர் சமந்தத் துச்சி மீமிசை
அறவியங் கிழவோன் அடியிணை யாகிய
பிறவி என்னும் பெருங்கடல் விடூஉம்
அறவி நாவாய் ஆங்குள தாகலின்
தொழுதுவலங் கொண்டு வந்தேன் ஈங்குப்
பழுதில் காட்சியிந் நன்மணிப் பீடிகை
தேவர்கோன் ஏவலிற் காவல் பூண்டேன்
தீவ திலகை என்பெய ரிதுகேள்
தரும தலைவன் தலைமையின் உரைத்த
பெருமைசால் நல்லறம் பிறழா நோன்பினர்
கண்டுகை தொழுவோர் கண்டதற் பின்னர்ப்
பண்டைப் பிறவியர் ஆகுவர் பைந்தொடி
அரியர் உலகத் தாங்கவர்க் கறமொழி
உரிய துலகத் தொருதலை யாக
ஆங்ஙன மாகிய அணியிழை இதுகேள்
ஈங்கிப் பெரும்பெயர்ப் பீடிகை முன்னது
மாமலர்க் குவளையும் நெய்தலும் மயங்கிய
கோமுகி என்னுங் கொழுநீ ரிலஞ்சி
இருதிள வேனிலில் எரிகதி ரிடபத்
தொருபதின் மேலும் ஒருமூன்று சென்றபின்
மீனத் திடைநிலை மீனத் தகவையின்
போதித் தலைவனொடு பொருந்தித் தோன்றும்
ஆபுத் திரன்கை யமுத சுரபியெனும்
மாபெரும் பாத்திரம் மடக்கொடி கேளாய்
அந்நா ளிந்நாள் அப்பொழு திப்பொழுது
நின்னாங்கு வருவது போலும் நேரிழை
ஆங்கதிற் பெய்த ஆருயிர் மருந்து
வாங்குநர் கையகம் வருத்துதல் அல்லது
தான்தொலை வில்லாத் தகைமைய தாகும்
நறுமலர்க் கோதை நின்னூ ராங்கண்
அறவணன் தன்பாற் கேட்குவை யிதன்திறம்
என்றவள் உரைத்தலும் இளங்கொடி விரும்பி
மன்பெரும் பீடிகை தொழுதனள் வணங்கித்
தீவ திலகை தன்னொடுங் கூடிக்
கோமுகி வலஞ்செய்து கொள்கையின் நிற்றலும்
எழுந்துவலம் புரிந்த இளங்கொடி செங்கையில்
தொழுதகை மரபிற் பாத்திரம் புகுதலும்

பாத்திரம் பெற்ற பைந்தொடி மடவாள்
மாத்திரை யின்றி மனமகிழ் வெய்தி

மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கறம் முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
எண்பிறக் கொழிய இருந்தோய் நின்னடி

கண்பிறர்க் களிக்குங் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
உரகர் துயரம் ஒழிப்போய் நின்னடி

வணங்குதல் அல்லது வாழ்த்தலென் நாவிற்
கடங்கா தென்ற வாயிழை முன்னர்ப்
போதி நீழற் பொருந்தித் தோன்றும்
நாதன் பாதம் நவைகெட ஏத்தித்
தீவ திலகை சேயிழைக் குரைக்கும்

குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்

இசைச்சொல் அளவைக் கென்நா நிமிராது
புன்மரம் புகையப் புகையழல் பொங்கி
மன்னுயிர் மடிய மழைவளம் கரத்தலின்
அரசுதலை நீங்கிய வருமறை யந்தணன்
இருநில மருங்கின் யாங்கணுந் திரிவோன்

அரும்பசி களைய வாற்றுவது காணான்
திருந்தா நாயூன் தின்னுத லுறுவோன்
இந்திர சிறப்புச் செய்வோன் முன்னர்
வந்து தோன்றிய வானவர் பெருந்தகை
மழைவளந் தருதலின் மன்னுயி ரோங்கிப்

பிழையா விளையுளும் பெருகிய தன்றோ
ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்க ளரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்

உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
உயிர்க்கொடை பூண்ட உரவோ யாகிக்

கயக்கறு நல்லறங் கண்டனை யென்றலும்
விட்ட பிறப்பில்யான் விரும்பிய காதலன்
திட்டி விடமுணச் செல்லுயிர் போவுழி
உயிரொடு வேவே னுணர்வொழி காலத்து
வெயில்விளங் கமையத்து விளங்கித் தோன்றிய
சாது சக்கரன் றனையா னூட்டிய
காலம் போல்வதோர் கனாமயக் குற்றேன்
ஆங்கதன் பயனே ஆருயிர் மருந்தாய்
ஈங்கிப் பாத்திரம் என்கைப் புகுந்தது
நாவலொடு பெயரிய மாபெருந் தீவத்து
வித்தி நல்லறம் விளைந்த வதன்பயன்
துய்ப்போர் தம்மனைத் துணிச்சித ருடுத்து
வயிறுகாய் பெரும்பசி யலைத்தற் கிரங்கி
வெயிலென முனியாது புயலென மடியாது
புறங்கடை நின்று புன்கண் கூர்ந்துமுன்
அறங்கடை நில்லா தயர்வோர் பலரால்
ஈன்ற குழவி முகங்கண் டிரங்கித்
தீம்பால் சுரப்போள் தன்முலை போன்றே
நெஞ்சு வழிப்படூஉம் விஞ்சைப் பாத்திரத்
தகன்சுரைப் பெய்த ஆருயிர் மருந்தவர்
முகங்கண்டு சுரத்தல் காண்டல்வேட் கையேனென
மறந்தே னதன்திறம் நீயெடுத் துரைத்தனை
அறங்கரி யாக அருள்சுரந் தூட்டும்
சிறந்தோர்க் கல்லது செவ்வனஞ் சுரவாது
ஆங்ஙன மாயினை அதன்பயன் அறிந்தனை
ஈங்குநின் றெழுவாய் என்றவள் உரைப்பத்
தீவ திலகை தன்னடி வணங்கி
மாபெரும் பாத்திரம் மலர்க்கையில் ஏந்திக்
கோமகன் பீடிகை தொழுது வலங்கொண்டு
வானூ டெழுந்து மணிமே கலைதான்
வழுவறு தெய்வம் வாய்மையின் உரைத்த
எழுநாள் வந்த தென்மகள் வாரான்
வழுவாய் உண்டென மயங்குவோள் முன்னர்
வந்து தோன்றி யவர்மயக் கங்களைந்
தந்தில் அவர்க்கோர் அற்புதங் கூறும்
இரவி வன்மன் ஒருபெரு மகளே
துரகத் தானைத் துச்சயன் தேவி
அமுத பதிவயிற் றரிதில் தோன்றித்

தவ்வைய ராகிய தாரையும் வீரையும்
அவ்வைய ராயினீர் நும்மடி தொழுதேன்
வாய்வ தாக மானிட யாக்கையில்
தீவினை அறுக்கும் செய்தவம் நுமக்கீங்
கறவண அடிகள் தம்பாற் பெறுமின்

செறிதொடி நல்லீர் உம்பிறப் பீங்கிஃ.
ஆபுத் திரன்கை அமுத சுரபியெனும்
மாபெரும் பாத்திரம் நீயிரும் தொழுமெனத்
தொழுதனர் ஏத்திய தூமொழி யாரொடும்
பழுதறு மாதவன் பாதம் படர்கேம்

எழுகென வெழுந்தனள் இலங்கொடி தானென்.

## உரை

(1 - 5) மணிமேகலா தெய்வம் நீங்கிய பின்னர் - மணிமேகலா தெய்வம் மந்திரம் அளித்துச் சென்ற பின்னர், மணிபல்லவத்திடை மணிமேகலைதான் - மணிமேகலை மணிபல்லவத்தின்கண் உள்ள, வெண் மணற் குன்றமும் - வெள்ளிய மணற் குன்றுகளையும், விரிபூஞ் சோலையும் - விரிந்த பூம்பொழில்களையும், தண்மலர்ப் பொய்கையும் - குளிர்ந்த மலர்களையுடைய பொய்கைகளையும், தாழ்ந்தனள் நோக்கி - மெல்ல நோக்கிக் கொண்டு, காவதம் திரிய - ஒரு காத தூரம் சுற்றிக்கொண்டிருக்க;

குன்றம், சோலை, பொய்கை என்பவற்றிற்கு இரண்டனுருபு விரிக்க. பூக்கள் விரிந்த சோலையுமாம். காதம் காவதம் என விரிந்து நின்றது; *வ. பகுதிப் பொருள் விகுதி யென்பர் அடியார்க்கு நல்லார்.

(5 - 8) கடவுட் கோலத்துத் தீவதிலகை செவ்வனம் தோன்றி - தெய்வ வேடமுடைய தீவ திலகை என்பாள் செவ்விதாகத் தோன்றி, கலம் கவிழ் மகளிரின் வந்து ஈங்கு எய்திய - மரக்கலம் கவிழப் பெற்று அதினின்றும் உய்ந்துவந்த மகளிரைப்போல் ஈண்டுவந்து சேர்ந்த, இலங்குகொடி நல்லாய் யார் நீ என்றலும் - விளங்குகின்ற வளையல்களை யணிந்த மெல்லியலே நீ யார் என வினவுதலும்;

தீவதிலகை : இந்திரன் ஏவலாற் புத்தன் பாத பீடிகையைப் பாதுகாத்துக் கொண்டு மணிபல்லவத்தில் இருப்பவள்; தீவுக்குத் திலகம் போன்றவள் என்பது பொருள். தனித்து ஓர் தீவில் வந்திருத்தலின் 'கலங்கவிழ் மகளிர் போல்' என்றாள். செவ்வனம் - நேரே யென்றுமாம்.

(9 - 18) எப்பிறப் பகத்துள் யார் நீ என்றது - யார் நீ யென என்னை வினாவியது எனது எப்பிறப்பின் நிகழ்ச்சி குறித்து,